தமிழ்த் தென்றல்

…ம்பர்

194…

ஸ்ரீ சாரதாம்பாள் அன் கோ.,

பட்டணம் பொடி

வண்ணாரப்பேட்டை, **மதராஸ் 21.**

காளை மார்க்கு நெ. 1

பவுன் கலர் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை ஒருங்கே அமைந்தது.
உயர்தர புகையிலையை தேர்ச்சியான வேலையாட்களைக்
கொண்டு நல்ல முறையில் தயார்செய்யப்படுகின்றன.
ஒரு சிட்டிகைப் பொடி உண்மையை விளக்கும்.

Our speciality are as follows:-

GOLDEN RAW, GHEE SPECIAL, BLACK SPECIAL, STRONG SNUFF,
EXTRA STRONG SNUFF, SCENTED SNUFF.

Manufacturer:—

SREE SARADAMBAL & Co.,

Washermanpet, : : MADRAS 21.

அத்வைதத்தில் துவைதம்



நோய்களும் வலிகளும்

அமிர்தாஞ்ஜனஸ்தான்

விட்டொழிக

பீடிச் சக்கரவர்த்தி

த. பி. சொக்கலால்

ராம் சேட் பீடி

நயம் அக்கூள் புகையிலையினல்

காரம், மணம், குணம் அமையப்பட்டதாய்

நாகரீகமான முறையில் தயார் செய்யப்பட்டதும்,

அகில இந்திய பொருட்காட்சியிலும்,

இதர பொருட்காட்சிகளிலும்,

தங்க மெடல்கள் பரிசு பெற்றதுமான

த. பி. சொக்கலால் ராம் சேட் பீடி

சுதேசி பொருள்களைக் கொண்டு

சுதேசி கைத்தொழிலாளிகளால் தயாரிக்கப்பட்டது.

ஷை பீடிகளை உபயோகப்படுத்தி

சுதேசித் தொழிலை ஆதரிக்கும்படி

கேட்டுக்கொள்கிருேம்.

த.பி. சொக்கலால் ராம்சேட் தொழிற்சாலை,

முக்கூடல்,

திருநெல்வேலி ஜில்லா.

கல்கத்தா ரிஜிஸ்டர் நம்பர் 520, 2689, 1038.
Firm No. 2283 of 1948.

SRI RAMAKRISHNA & COMPANY

1/12, Railway Feeder Road,
VIRUDHUNAGAR.

எங்கள் தொழிற்சாலையில் உழுந்து, துவரை, மொச்சை, கடலை, முதலிய பருப்பு வகையறுக்களுக்கு சல்லடைகளும், காபி, ஏலக்காய், பாக்கு, ரகம் பிரிக்கும் சல்லடைகளும், கடலைக்காய், சாங்கிள் பெட்டி 5′ × 4′ சைஸ் ஜாயிண்ட் இல்லாத சல்லடைகளும், ரைஸ் மில்களுக்கு நெல் அவியல் டாங் சல்லடைகளும், பருப்பு வகையறு அலசும் மிஷின்களும், மிஷின்களுக்கு வேண்டிய சல்லடைகளும், கூடை, பண்ணை, உலக்கை பூண் வகையறுக்களும் தயார்செய்து குறித்த நேரத்தில் சப்ளை செய்யக்கூடும்.



ஸ்ரீ ராமகிருஷ்ண அன் கோ.,

1/12, ரெயில்வேபீடர் ரோடு, விருதுநகர்.

Props:- C. V. துரைராஜுலு நாயுடு, C. வீராச்சாமி.
M நாராயணசாமி, V. வீரம்மாள்.

N. B:- குறித்த நேரத்தில் விலாசத் தகடுகளும், டிரேட்மார்க்கு தகடுகளும், வெட்டித் தரக்கூடும்.

நீங்கள் விரும்பும்

பிரபல தயாரிப்புகள்!!

சைபால்

எந்த சரும ரோயையும், சீக்கிரம் குணப்படுத்தவல்லது. "சைபால்" கொப்புளங்கள், சொரிசிரங்கு, படை, பரு, கடி, கால்வெடிப்பு, புண்களுக்கு ஆச்சரியமாக குணமளிக்கும் சிறந்த களிம்பு.

ரமணீஸ் பேபி கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் கோளாறுகளுக்கு ரமணீஸ் பேபி கிரைப் சிறந்த ஔஷதம். குழந்தை சிறிது சிணுங்கினாலும், விஷயம் தெரிந்த தாயார் உடனே "பேபி கிரைப்பைக் குழந்தைக்கு கொடுப்பாள்". உடனுடன் குணமளிக்கக்கூடிய பேபி கிரைப், குழந்தைகளுக்கு ஏற்படும் மலபந்தம், கடுப்பு, வயிற்றுப் போக்கு, வயிறு உப்புதல் போன்ற கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

தயாரிப்பவர்கள் :

தி செளத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி

தானப்ப முதலி தெரு, மதுரை.



பேரறிவாளன் திரு

S. Arumugam
7-8-49
Professor of Tamil
Teachers' College Saidapet

தமிழ்த் தென்றல்

ஆண்டு மலர், 1949.

உள்ளுறை

முன்னுரை	—	எ
அட்டைப்பட விளக்கம்	—	அ
தமிழ்ப் பெரியார் வாழ்த்து	—	௰
பைந்தமிழ் (கவிதை)	— சுத்தானந்த பாரதியார்	௰௨
புதிய அமைச்சர் குழு	— வே. வ. இராமசாமி	௰௩
பரந்த பொருளாதார நோக்கு	— டாக்டர் பா. நடராஜன்	௰எ
அறிஞர் சி. என். அண்ணாத்துரை முழக்கம்	... ...	௨௫
திருவாரூர்த் தமிழ்த் திருநாள்	— அ இராசகோட்டியப்பன்	௨௯
திருவாரூர்த்தமிழ்த்திருவிழாத் தலைமையுரை	ஓ. பி. இராமசாமி ரெட்டியார்	௩௩
மனம் உண்டானால் இடமும் உண்டு	— கி. ஆ. பெ. விசுவநாதம்	௪௧
சிறையும் சிலையும்	— இரா. இளந்திரையன் 'வைரா'	௪௫
தமிழ் விரதம் (கவிதை)	— சுத்தானந்த பாரதியார்	௫௧

கண்விழித்தெழுந்தோம் (கவிதை)	—	சுத்தானந்த பாரதியார்	ருஉ
அலாவுதீன் மாய விளக்கு	—	ஈ. த. இராசேசுவரி அம்மையார்	ருங
தேராத் துணிவும் ...	—	நாவலர் சோமசுந்தர பாரதி	ருஎ
கலையும் காதலும்	—	புதுவை. சுப்பிரமணியன்	சுக
புத்துலக நீதி (கவிதை)	—	நல்லை, அ. இளங்கோவன்	எச
எல்லோரும் கற்க	—	தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்	எஅ
அன்புடைமை	—	திரு. ச. மு. பிள்ளை	கூச
கானலில் காதல் (கவிதை)	—	தா. நரசிம்மன்	கூஎ
அமைதியும் அழகும்	—	எம். எஸ். கமலா	கூகூ
நடுவு நிலைமை	—	தி. ப. சுப்பிரமணியதாஸ்	ளரு
மகளிர்க்கு விஞ்ஞான உதவி	—	... ...	ளய
அலை ஒதுக்கிய சிப்பிகள்	—	சேதுக்கரையோன்	ககரு
மின்சாரத்தின் மாண்பு	—	ஆர். இராசரத்தினம்மாள்	கஉஉ
குடும்பத்தில் ஒரு நாள்!	—	வள்ளுவன்	கஉகூ
காமமும் குறளும்	—	ந. சேதுரகுநாதன்	கஙங
விருதைத்திருக்குறள்மாநாடு	—	... ...	கஙசு
"எது வெற்றி பெறுவது" என்றுகேட்டார்ஓமந்தூரார்		புரசை அரசியல் வாதி	கசக
மன்னிக்க வேண்டும் மதியழகா! (கவிதை)		கவிஞர் சிவகருப்பையா	கசரு
டாக்டர் மு. வரதராசனார்	—	கே. வீ. வீ.	கசசு

தமிழ் ஓங்குக !

தமிழ்த் தென்றல்

ஆண்டு மலர், 1949.

முன்னுரை

தமிழ்த் தென்றலின் இரண்டாவது ஆண்டு நிறைவேறி, மூன்றாவது ஆண்டும் வருகின்றது. தமிழ்க் கலைப் பெருக்கமே நம் குறிக்கோள். நாளுக்கு நாள் நாட்டில் நல்லுணர்ச்சி பெருகி, கலை வளர்ச்சியுறுவது கண்டு உளமகிழ்ச்சி உறு கின்றோம். தமிழன் என்ற வீரமும், தமிழ்ப் பண்பாடும் மக்களிடையே தழைத் தோங்கி வருகின்றது. எங்கும் திருக் குறள் கழகங்கள் தோன்றுகின்றன. மாநாடுகள் நிகழ்கின்றன! சென்னைக் கோட்டைக்குள்ளும் திருக்குறள் வகுப்பு! இனியும் தமிழ் மொழியின் ஆக்கத்தைக் குறித்து ஐயமா? தெருவெல்லாம் தமிழ் முழக்கம் என்ற கவிஞன் கனவு நனவாகி விட்டது.

அரசாங்க ஆதரவு பெருகி வருகின்றது. நூலாசிரியர் களுக்குப் பரிசுகள், அரசாங்கக் கவிஞர், பழஞ்சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சி, கலைக் களஞ்சியப் பதிப்பு வேலை: இவை யெல்லாம் அரசியலாரின் ஆதரவுக்கு அறிகுறிகள். தமிழ் நாடும், தமிழரசும் அமைய வேண்டும் என்ற ஆர்வம் உடையோமாதலின், தமிழர் மாண்பும், தமிழ்ப் பண்பும் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டும் முறையில், அரசியலில் புகுந்து நம் கருத்துக்களை அஞ்சாது வெளியிட்டு வருகிறோம். அரசியல், பொருளியல், உணவு நிலைமை, சமூக சீர்திருத்தம் முதலியவற்றில் அரசாங்கத்தார்க்குப் பொது மக்களின் எண்ணங்களைத் துணிவுடன் கூறி வந்திருக்கிறோம்; அதன் பலனும் கண்டோம். இலக்கியத்தையும் மறந்திலோம்.

இது காறும் நம் முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அன்பர்களும், ஆதரவாளர்களும், வழி வழி உதவி, முழு வெற்றிகாண உதவுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

எல்லோருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்து!

தமிழ் வெல்க!

அட்டைப்பட விளக்கம்

புத்தாண்டு பிறந்தது. பொன் மலர் பூத்துப் புதுமணங் கமழ்ந்து, மக்கள் உள்ளத்தை மகிழ்வித்து, காதலர் கருத்தைக் கவரும் தென்றல் மெல்லெனத் தவழ்கின்றது! மஞ்சள் வெயில் கொஞ்சும் மாலை வேளை.

நெடுங்கடலின் தடங்கரையிலே காற்று வாங்கிக் களித்திருக்கும் மக்கட் கூட்டத்தின் நடுவே, கண்டதொரு கண் நிறைந்த காட்சியை இவ் ஆண்டு மலரின் அட்டையில், நம் ஓவிய வல்லுநர் அழகு ஒழுகச் சித்திரித்துத் தந்திருக்கிறார்.

தென்றற் காற்றும், கடற்கரையும் இன்பம் பொழியும் இயற்கைப் பொருள்களல்லவா? புது மணத்த காதலனும், புன்னகை பூத்த காதலியும் புத்தாண்டு பிறந்த பொன்னுளைக் கொண்டாடுதற்குக் கடற்கரையை அடைந்தனர்; குறுநடை கொள்கின்றனர். வாளன்ன நீள்விழியாள் மணவாளனின் மலர் முகத்தை முத்தன்ன வெண்ணகை துலங்கப் பார்க்கின்ற அழகே அழகு! அந் நல்லியலாள் தன் மெல்லிய கையால் அவனுடைய தோளைப் புல்லிக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிச் செல்லுகிறாள்.

காளையும் கடைக் கண்ணால் காரிகையைப் பார்த்தவாறே அவள் அழகை அள்ளிப் பருகி, "சிறு பசுங் கிளிகள், குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த இவள் மழலைக் கிளவிக்கு வருந்தின" என்று கருதியவண்ணம் உடன் செல்லுகிறான்.



தமிழ்ப் பெரியார் "திரு. வி. க."

வாழ்த்து

[திரு. வி. க.]

உலகம் இரு பெரும் போரைக் கண்டது; இனி மூன்றும் போரையும் காணும் போலும்! அதற்குரிய குறிகள் தோன்றுமலில்லை.

போர் விளைவுக்குக் காரணம் என்னை? காரணம் பலபடக் கூறலாம். இங்கே விரிவுரை வேண்டுவதில்லை. அடிப்படையான ஒன்றைக் குறித்தல் சாலும்.

புறப் போருக்கு அடிப்படை அகப் போரேயாகும். அகத்தில் மூண்டெழும் தீய எண்ணங்கள், ஆசைப்பேய்களாய், சாம்ராஜ்யங்களாய், வாட்களாய், ஈட்டிகளாய், துப்பாக்கிகளாய், பீரங்கிகளாய், எரிகுண்டுகளாய், அணுகுண்டுகளாய் உலகைப் போருக்கு இரையாக்குகின்றன.

தீய எண்ணங்கள் மூண்டெழாதவாறு அவற்றைத் தடுக்கவல்ல சாதனங்கள் உண்டோ? உண்டு; பலவுண்டு. பலவற்றைத் தமிழ்த் தென்றலில் விளக்க வேண்டுவதில்லை. சிறப்பாக இரண்டைக் குறித்தல் சாலும். ஒன்று காவியம்; மற்றொன்று ஓவியம்.

காவிய ஓவியங்களில் கருத்துப் படிந்து ஒன்ற ஒன்ற நெஞ்சம் ஆசைப் பேயால் அலக்கணுறுது. ஆசைப் பேய் அடங்கி ஒடுங்கினால் கொலைப் போர்கள் தொலையும்; சாம்ராஜ்யங்கள் வீழும்; சமதர்மம் வளரும்.

இந்நாளில் காவிய ஓவியப் பயிற்சி அருகி வருதல் கண்கூடு. அப்பயிற்சி பெருகுதல் வேண்டும். அதற்கு ஆக்கந் தேடப் பல அமைப்புக்கள் தேவை. நல்ல பத்திரிகைத் துணையும் இன்றியமையாதது.

"தமிழ்த் தென்றல்" பலதிறத் தொண்டுகளை ஆற்றி வருகிறது; போது வகையில் காவிய ஓவியத் தொண்டையும் புரிந்து வருகிறது. அதற்கு எனது நன்றி உரியதாக.

சிறப்பு வகையில் "தமிழ்த் தென்றல்" வாயிலாகக் காவிய ஓவியத் தொண்டு நிகழ வேண்டுமென்பது எனது வேட்கை. "தமிழ்த் தென்றல்" வளர்க; வாழ்க.



அருட்டிரு. சுத்தானந்த பாரதியார்.

பைந்தமிழ்

[அருட்டிரு. சுத்தானந்த பாரதியார்.]

★

நீரினை வென்று, வெய்ய நெருப்பினை வென்று, மாற்றார்
போரினை வென்று, நல்ல புகழினைப் பொலிய வென்று
காரினை வென்ற தூய கருணையங் கொடியை நாட்டிப்
பாரினை வென்ற தெய்வப் பைந்தமிழ் வாழ்க மாதோ!

அந்தநாள் கீரர் தேவர் அப்பர்சம் பந்தர் போலே
இந்தநாள் வீறு கொண்டே இளந்தமிழ் உலகை வெல்ல
மந்திரப் பாட்டோ லிப்போம்; வளர்புதுக் கலைவ ளர்ப்போம்
செந்தமிழ்ச் சேய்காள்! வீர தீரராய்த் திரண்டு வாரீர்!

தீந்தமிழ் நாடு வாழத் திருத்தொண்டு பரவு வீர்காள்!
பூந்தமிழ்க் கவிகாள் செல்வப் புலவர்காள்! கல்வி மிக்க
தேந்தமிழ்ச் சுடர்காள் வாரீர்! திசைதிசை திறமை காட்டி
நாந்தமிழ் மக்கள் என்று ஞாலமே போற்ற வாழ்வோம்.

சாதியும் வகுப்பு வாதச் சண்டையுஞ் சழக்கு மின்றி,
தீதிலா நன்மை செய்து செவ்விய தொழில்கள் போற்றி
ஆதிசுத் தான்ம ஞானம் அதனையே சமய மாக்கி
நீதிகொள் பொதுமை நாட்டி நிலவுவோம் உலவு வோமே.

புதிய அமைச்சர் குழு

[வே. வ. இராமசாமி]

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளவே, அவருடைய நம்பிக்கைக்கும், அன்புக்கும் பாத்திரமான திரு. குமாரசாமி ராஜா தலைவராகவும், முதல் அமைச்சராகவும் நியமிக்கப் பெற்றுப் பதவியை ஏற்று நடத்தி வருகிறார். அவருடைய ஆற்றலையும், அரசியல் அனுபவத்தையும், நேர்மையான குணத்தையும், சூது, வாது, அற்ற உள்ளத்தையும் நாம் நன்கு உணர்ந்திருக்கிறபடியால், எமது ஜில்லா வாசியாகிய அவரை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். ராஜாவின் ஆட்சி அமைதியாகவும், ஆக்க வேலைகள் பல கொண்டதாகவும் திகழ வேண்டுமென்றும் ஆசைப்படுகிறோம்.

ரெட்டியார் மந்திரி சபை பின்பற்றிய கொள்கைகளை, புதியதும் பின்பற்றும் என்று ராஜா உறுதி கூறியிருக்கிறார். சில காரியங்களில், சிலருக்குத் திருப்திகொடுக்காதுபோயினும், ரெட்டியாரின் ஆட்சி பொது மக்களுக்கு ஒருவாறு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. அந்த நம்பிக்கையால், பாதிக்கப்பட்ட கூட்டம் ரெட்டியாரை விலக்கி விடுவதில் வெற்றிபெற்றுவிட்டது. எனவே ரெட்டியாரின் கொள்கையே தாமும் பின்பற்றுவதாக ராஜா உறுதி கூறியது மக்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தாலும், ரெட்டியாரின் விரோதிகளுக்குக் கோபம் ஊட்டியிருப்பது ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆயினும் அவைகளைப் பொருட்படுத்தாது, மிரட்டலுக்கு அஞ்சாது, புன்முறுவலுக்கு மயங்காது, கொண்ட கொள்கையை ராஜா நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம்!

அரசியலார் உடனடியாகக் கவனிக்க வேண்டிய சில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறோம். முதலாவதாக, சர்க்

காருக்குக் கீழ் வேலை பார்க்கும் சிப்பந்திகளிடையே குறிப்பாக ஜில்லா அதிகாரிகள் இடையே ஏற்பட்டிருக்கும் ஒருவாறான பயத்தைப் போக்க வேண்டும். தாங்களே ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்து தக்கது செய்ய எவ்வளவோ அதிகாரமும் கடமையும் இருந்துங்கூட, சிலதொல்லைகளால் ஜில்லா அதிகாரிகளும பிறரும் சோர்வடைந்து, சமுதாயம் இயங்குவதைத் தன் போக்கிலே விட்டுவிடுகிறார்கள். காரணம் என்ன? ஒருகாங்கிரஸ் நண்பர் ஏதாவது காரணங்காட்டி ஒரு மனுவை மந்திரியிடம் கொடுத்தால் போதும். தங்கள் அதிகாரியே செய்த காரியத்தை அவரையும் கேளாமலே மாற்றிவிட முடிகிறது. மேலும் தங்கள் விருப்பப்படி நடந்துகொள்ளாத அதிகாரிகளை காங்கிரஸார் சுலபமாக அச்சுறுத்திவிடுகிறார்கள். எக்கட்சி ஆண்டாலும், சிப்பந்திகளைக் கட்சியினரின் தொல்லைக்குள் உட்படுத்துவது நாளடைவிலே நிர்வாகமே சீர்குலைந்துவிடுவதற்கு ஏதுகரமாயிருக்கும். ஆகவே இந்த அபாயமான பிளவைப்புண்ணை வேருடன் அறுத்து எறியவேண்டும் என்று எச்சரிக்கிறோம்.

அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டியது, நாட்டின் முதற் பிரச்சினையாகிய உணவுநிலைமை. பற்றாக்குறை மாகாணங்கள் தங்கள் காலிலே நின்றுகொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தார் எச்சரித்து விட்டனர். எனவே, வேறு திட்டங்களையெல்லாம் சற்று நிறுத்திவிட்டு, உணவுப் பெருக்கத் திட்டத்தையே ஒவ்வொரு மந்திரியும் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் தனியாக ஒரு மந்திரிக்கு இது சம்பந்தப்பட்ட சகல அதிகாரங்களையும் கொடுத்து முழுக்கவனத்தையும் செலுத்தும்படிசெய்யவேண்டும்.

இயற்கை ஏமாற்றினாலும், மழை குறைந்தாலும், மிரளாமல் அடுத்த நாட்டினரை எதிர்பார்ப்பதில்லை என்றஒரேதிடமுடிவுடன் வேலை செய்யவேண்டும். கால்வாய்களையும், நீரோடைகளையும், கண்மாய், குளங்களையும், ஆங்காங்கு வசிக்கும் மக்களை ஊக்குவித்து அவர்களைக்கொண்டே செப்பனிடவேண்டும் நீர் இறைப்பதற்கும், உழவு செய்வதற்கும் வேண்டிய சாமான்கள் காலத்தில் கிடைக்குமாறு செய்தல் அறிவுடைமையாகும். மந்திரிகளும் அவர்களைச்

சார்ந்தவர்களும் ஜில்லா தோறும் சுற்றுப்பிரயாணஞ் செய்வது இதன் பொருட்டேயிருக்க வேண்டுமென்று விழைகின்றோம். அவரவர் கட்சிக்கு ஆள் சேர்ப்பதிலும், தேர்தலுக்குப் பிரசாரஞ் செய்வதிலும் கருத்துக்கொண்டவர்களாயிருந்தால், நாட்டுக்கு உண்மையான பணி செய்தவர்களாக மாட்டார்கள். செல்லுமிடங்களில் எல்லாம் பொறுப்புள்ளவர்களைச் சந்தித்து தாயகத்தினுணவு நெருக்கடியைத் தீர்க்க முன்வர வேண்டிய பொறுப்பையுணர்த்தி ஊக்குவிக்கவேண்டும். கிராமங்களில் உள்ளவர்கள் தாம் எவ்வளவு பாடுபட்டாலும் கிடைக்கும் விளைபொருளில் தங்களுக்குப் போதுமானது கிடைக்குமென்ற நம்பிக்கை கொள்ளும் படியும் அதிகமாகப்பாடுபட்டு விளைச்சலை அதிகப்படுத்துதலே நாட்டுக்குப் புரியும் ஓர் நற்பணி என்று மனதில் எண்ணும்படியும் செய்வதே சிறந்ததாகும்.

• 'உணவுப் பிரச்சினையே உடனடிப்பிரச்சினை' இதைத் தீர்ப்பதில் மக்கள் உதவிதேவை என்று தாம் பதவியேற்றநாளன்றே ராஜா கூறியிருக்கிறார். அதை நாம் முழுவதும் ஆதரிக்கிறோம். தாங்கள், எல்லா மக்களின் பிரதிநிதிகள் என்ற உணர்ச்சியிலே அமைச்சர்களும், மக்கள் நலனுக்காகவே ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற நோக்கத்திலே அதிகாரிகளும், கேவலம் தன்னலங்கருதாது பொதுச்சமுதாயத்தின் வாழ்க்கை நிலைசீர்படவேண்டுமே என்ற கவலையிலே பொறுப்புள்ள நபர்களும், இங்ஙனம் எல்லோரும் ஒன்றுகூடி உழைத்தால் பொதுமக்களிடையே பரபரப்பும் ஆசையும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. சர்க்கார் 1950-51ம் ஆண்டில் எதிர்பார்க்கும் அளவுக்குமேல் உணவுப்பொருள் விளைவித்து விடக்கூடுமென்றே எதிர்பார்க்கலாம்.

உணவு நெருக்கடி தீர்ந்து விட்டால் மக்களுக்குத் திருப்தி உண்டாகி இன்பநிலை ஏற்படும். அமைதி நிலவும். பிறமுற்போக்கு திட்டங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் பெருகும். அதோடு அயலானை எதிர்பார்க்கும் ஏளனமான நிலைமையும் நீங்கும்.

தமிழ் வெல்க!

A. 1598. ஏழுவனம்பட்டி தேவாங்கர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட், (Via) வத்தலக்குண்டு.

எங்களிடம் தற்கால நவீனத்திற்கேற்ற பலவித பார்டர்களுடன் சேலை ரகங்கள் 20-நிர். முதல் 60-நிர். வரையிலும், வேஷ்டிகள், ஷர்ட்டிங் தான்கள், துண்டு மடிகள், பட்டு ரகங்கள் உத்தரவாதமுள்ள கெட்டிச் சாயத்துடன் தயாராகிறது.

பல வருடங்களாக மாகாண சங்க, எம்போரியங்களுக்கும், பிரபலமான மில் ஸ்டோர்களுக்கும், மாகாண சங்க அனுமதிபெற்ற பிரபல வியாபாரிகளுக்கும், பொதுஜனங்களுக்காக சோசைட்டி டிப்போக்களிலும் திருப்திகரமான முறையில் சப்ளை செய்துவருகிறோம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷனுடன் சப்ளை செய்யப்படும்.

ஆர்டர் மூலமாகவோ அல்லது நேரிலோ ஆர்டர் கொடுத்து, குடிசைத் தொழிலை ஆதரிக்கும்படியாக கேட்டுக் கொள்கின்றோம்.

T. V. காமாக்ஷி செட்டியார்,
பிரஸிடெண்டு.

S. சுந்தரராஜன்,
காரியதரிசி.

பரந்த பொருளாதார நோக்கு

டாக்டர். பா. நடராஜன்

[சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசகர்]

வெனிஸ் நகரவாசியான மார்கோ போலோ என்னும் புகழ் பெற்ற உலகயாத்ரீகர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் கண்ட ஒரு புதுமையைப் பின்வருமாறு கூறியிருக்கிறார்: அன்று அரபிக் குதிரைகள் ஆயிரக்கணக்காகத் தமிழகத்தில் இறக்குமதியாயின. ஆண்டு தோறும் அவற்றுட் பல மாண்டன. குதிரைகளுக்கு லாடம் அடிக்கத் தமிழனுக்குத் தெரியாததுதான். அற்பமாயினும் இந்த நுட்பத்தை அறியாது பாண்டிய நாடு ஆண்டு தோறும் பெரு நஷ்டமடைந்தது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழில் நுட்பம் இன்றியமையாதது என்பதற்கு இதனிலும்வேறு சான்று வேண்டுமோ? தொழில் வித்தையை என்னவிலை கொடுத்தாயினும், எந்நாட்டிலிருந்தாயினும், கற்றுக்கொள்வது பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல் படியாகும்.

1760முதல் 1850ம் ஆண்டு வரை இங்கிலாந்திலே பல யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைத்தான் சரித்திரத்திலே 'தொழில் புரட்சி' என்று குறிப்பிடுகிறார்கள். கார்ட்ரைட்டின் விசைத்தறி, ஆர்க்ரைட்டின் நீரினால் இயங்கும்நெசவுப்பொறி, கிராம்டனின் நூற்புக்கருவி, வாட்ஸின் நீராவியந்திரமும், நீராவியைக் கொண்டு இயக்கப்படும் சம்மட்டி, நிலக்கரி இரும்பு இவற்றைச் சுரங்கங்களிலிருந்து ஏராளமாக வெட்டியெடுத்தல்— இவைகளெல்லாம் சேர்ந்தவை தான் 'தொழில் புரட்சி' என்று கூறுகிறார்கள். மனிதவாழ்க்கையை அடியோடு மாற்றியும், திருத்தியும் அமைப்பதற்குக் காரணமாயிருந்த செயல்களில் இவை ஒரு முக்கிய பகுதியேயாயினும், இவைமட்டுமே 'தொழில்புரட்சி' ஆகாது. புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களும் உற்பத்தி சாதனங்களும் புரட்சியின் புறத்தோற்றங்களேயன்றி வேறல்ல. ஆனால் அந்தப் புரட்சியின் அடிப்படைக் காரணங்கள் இயந்திர நுணுக்கங்களை எளிதில் கற்றுக்கொள்ள அன்றைய ஆங்கிலேயருக்கிருந்த ஆர்வமும் திறமையும் தான்.

நுண்ணிய அறிவும், ஆற்றலும் சமூகத்திலே திடீரென்று தோன்றுவன அல்ல. பல நூற்றாண்டுகளாக வரும் விரிந்தமனப்பான்மையிலே பண்பட்டு வளர்ந்து வருவன அவை. ஆங்கிலேயர்கள் கருமமே கண்ணாயிருப்பவர்கள். முன்னோர்களின் அனுபவங்களைப் பொன்னே போல் போற்றும் பண்பினர். சட்டபூர்வமான ஜனநாயக சமுதாயத்தை அமைப்பதில் அவர்கள் பல நூற்றாண்டுகள் முயன்று படிப்படியாக வெற்றி பெற்றனர். ஜனநாயகக் கொள்கையும் பரந்த நோக்கமும் அவரிடம்தழைத்திருந்தன கொடுங்கோலுக்கும்சமயக்கொடுமைகளுக்கு முட்பட்ட ஏனை நாட்டு மக்களுக்கு இங்கிலாந்து புகலிடமாயிற்று. மத, இனக் கொள்கைகளை யெல்லாம் புறக்கணித்து, குறுகிய தேசிய உணர்ச்சியால் குருடாகாது இங்கிலாந்து அகதிகளை வரவேற்றது. பல நாட்டு மக்கள் அங்கு வந்து குடியேறினர். 1685-ம் வருடத்திற்குப் பின் பிரான்ஸிலிருந்து கூட்டம் கூட்டமாக மதக் கொடுமைக்குள்ளான மக்கள் வெளியேறினர். அவர்களுக்கு இங்கிலாந்தில் புகலிடம் கிடைத்தது. பிளான்டர்ஸ் என்னும் பகுதியிலிருந்து வந்த

வர்கள் கம்பளத் தொழிலை அபி விருத்தி செய்தனர். பஞ்சாலைத் தொழில் இங்கிலாந்தில் உச்ச நிலையை அடைதற்கு ஹிகி-னூட்ஸ் என்னும் அ க தி க ளே அடிகோலினர். ஐரோப்பிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட யூதர்கள் தஞ்சமளித்த இங்கிலாந்தை 19-ம் நூற்றுண்டில் உலகத்திலேயே மிகவும் செல்வம் செழிக்கும் நாடாகச் செய்தனர்.

ஆங்கிலேயர் பண்பாடும், பரந்த நோக்கும் பல இனத்தாரின் பலவகைப்பட்ட திறமைகளை ஆர்வத்துடன் ஏர்த்துக் கொள்ளும் தன்மையும் 18,19-ம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தை மிகவும் சிறப்படையச் செய்தன. தொழில் புரட்சி, ஏன் முதலில் இங்கிலாந்தில் தோன்றியது; மனித சக்தியும் இயற்கை வசதிகளும் அன்று அதிகமாயிருந்த ஜெர்மனியிலோ, பிரான்ஸிலோ ஏன் முதலில் ஏற்படவில்லை யென்று பொருளாதார சரித்திர ஆசிரியர்கள் சர்ச்சை செய்கின்றனர். முன்னர் வந்து சென்ற விவசாயப் புரட்சியும், பொன்னையும் வெள்ளியையும் திரைகடலோடித் திரட்டியபின் வந்து சென்ற வியாபார புரட்சியும் காரணமென்பர்; நிலக்கரியும் இரும்பும் இங்கிலாந்தில் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்திருப்பதும் காரணம் என்பர். ஆனால் இவற்றையெல்லாம்விட, இங்கிலாந்தில் தொழில் புரட்சி தலையெடுக்க முக்கியமான காரணம் ஆங்கிலேயருக்கிருந்த பரந்த நோக்கமேயாகும். எக்குடி மக்களேயாயினும் யாவரேயாயினும் தொழில் வித்தை கற்றவரை வருகவென ஆங்கிலேயர் அன்று அழைத்தனர்; பயன் பெற்றனர்.

தொழில் புரட்சியின் விளைவாகப் பல கெடுதல்களும் நேர்ந்தது உண்மையே! அது ஜன சமூகத்தையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. நகரங்கள் வரையறையற்ற முறையிலே வளரலாயின. அறியாமை, சோம்பல், சுரண்டல், சுகாதாரமின்மை – இவை மலிந்தன. அமைதியான கிராம வாழ்க்கை ஆட்டம் கண்டது. வேலையில்லாத் திண்டாட்டம் விரிவதாயிற்று. எனவே முதலாளித்-துவப் பொருளாதார நெறிக்குத் தத்துவம் வகுத்த ஆடம்ஸ்மித், மால்தஸ், ரிகார்டோ முதலிய அறிஞரின் கோட்பாடுகள் மறுக்கப்படுவதாயின; கார்ல் மார்க்ஸ், ஸிஸ்மாண்டி, குரோபாட்கின், ராபர்ட்ஓவன், சார்ல்ஸ்கிங்ஸ்லி, வில்லியம்மோரிஸ், ஜான்ரஸ்கின் முதலியோரின் எதிர்ப்புக் கொள்கைகள் பிறக்கலாயின. சமுதாய உடம்பிலே தொழில் புரட்சிகள் ஏற்பட்ட காயங்கள் மறைய நெடுங்காலம் வேண்டும். அதற்குள் தொழில் புரட்சியை முதல்முதல் கண்ட இங்கிலாந்து மிகுந்த பயனை அடைந்தது.

உலகத்தின் தொழிற் கூடமாகவும், தேசங்களின் செல்வ நிலைக்கோர் சூத்திரதாரியாகவும், அவற்றின் பொருளாதாரத் தலைவிதியை நிர்ணயிக்கும் பிரமனே எனவும் இங்கிலாந்து ஆற்றல் பெற்றுவிட்டது.

"வாணிபமென்றும் வளர்ச்சியுறவும்
வளர்விஞ்ஞான ஒளிர்சுடர் மிகவும்
சேணிகந்தெங்கும்செங்கோல்புகவும்
சென்றன ஐம்பதிறுண்டுகளம்மா!"

என விக்டோரியா மகாராணியார் ஆட்சியின் பொன்விழாக்கொண்டாட்டத்தின்போது ஆஸ்தான கவிஞரான டென்னிஸன் பாட முடிந்தது. ஆனால் இந்த இயந்திர நுணுக்கங்களையும், ஆற்றலையும் அதிக நாள் ரகசியமாக வைத்திருக்க முடியவில்லை. மற்ற தேசங்களும் தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டன. ஆங்கிலேயரிடம் கற்றுக்கொண்ட இயந்திர நுணுக்கங்களைக் கொண்டே பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்கள் இங்கிலாந்துடன் தொழில் வளர்ச்சியில் போட்டியிட ஆரம்பித்தன. இந்தியாவிலும் இயந்திரத் தொழில் புரட்சி வருவதாயிற்று. பம்பாய் நெசவு ஆலைகளையும், வங்காளம் சணல் ஆலைகளையும், சென்னையும், அஸ்ஸாமும் தோட்டத் தொழிலையும் அபிவிருத்தி செய்தன. நாடு அனைத்தும் ரோடுகளாலும், ரயில் பாதைகளாலும் இணைக்கப்பட்டன. ஏராளமான ஆங்கிலமூலதனமும், தொழில் நுட்பம் தெரிந்த நிபுணர் கூட்டமும் இந்தியாவில் வந்து பெருகின.

இயந்திரத் தொழில் புரட்சியால் மேலைநாடுகளில் எழுந்தவாறு இந்தியாவிலும் தீமைகள் பல எழுந்தன. ஆனால் பரந்த உலகத்தின் விரிந்த தேவைகளுக்கெல்லாம் ஈடுசெய்யும் உற்பத்தி ஆற்றல் கொண்ட தொழிற்சாலைகள் இங்கிலாந்தில் இருந்தன. அதற்கேற்றவாறே பெரிய பெரிய சாம்ராஜ்ய மார்க்கெட்டுகளும் இருந்தன. இந்த வசதிகள் இந்தியாவிற்கு இருந்ததில்லை. நாம் காலம் தாழ்த்து இயந்திரத் தொழில் போட்டியில் கலந்துகொண்டோம். ஏனையோர் ஏற்கனவே மார்க்கெட்டை அமைத்துக்கொண்டுவிட்டனர். எனவே தொழில் புரட்சியால் இந்தியாவின் பொருளாதார நிலை சமனிழந்தது. குடிசைத் தொழில்கள் அழிந்தன. தொழிலிழந்த தொழிலாளர் விவசாயத்தில் புகுந்தனர்; விவசாயத் தொழில் அளவுக்கு மிஞ்சிய மக்களைக் கொண்டதாயிற்று. 1850-ம் ஆண்டில் இந்திய மக்களில் பாதிப்பேர் குடிசைத் தொழிலிலும், பாதிப் பேர் விவசாயத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். 1870-ம் ஆண்டுக்குள் விவசாயத்தில் 100-க்கு 70 பேராகவும், கைத்தொழிலில் 30 பேராகவும் மாறிவிட்டது. வேலைக் குறைவும், வேலையில்லாமையும் அதிக

மாயின. தோட்டத் தொழிலிலும், ஆலைத் தொழிலிலும் ஒரு சிலருக்கே இடம் கிடைத்தது. நிலமில்லாத ஏராளமான வேலையாட்கள் இங்கிலாந்தின் காலனி நாடுகளுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. பர்மா, இலங்கை, மலேயா, மொரீஷஸ், நியூகினியா, தென் ஆப்பிரிக்கா. தங்கனிகா, கெனியா முதலிய காலனி நாடுகளில் இந்தியத் தொழிலாளர் குடியேறினர். தொழில் நுணுக்கம் தெரிந்த நிபுணர்கள் இல்லாத குறையால் இந்திய மூலதனம் இந்தியாவிலோ வெளி நாட்டிலோ புதுத்தொழில் துறைகளில் வெகுவாக நேராகப்புகவில்லை. எனினும் இந்திய மூலதனமும் இந்தியர் உழைப்பும் மேற்கண்ட காலனி நாடுகளின் அபிவிருத்திக்கு மிகவும் உதவியாயிருந்தன என்பது மறுக்கமுடியாத சரித்திர உண்மையாகும். அன்று இந்தியர்கள் இந்தக் காலனி நாடுகளுக்கு ஏராளமாகச் சென்று வந்தனர்; அங்கெல்லாம் குடியேறுவதற்கு வேண்டிய தூண்டுதல்களும் இருந்தன. குடியேறிய அந்த நாடுகளை இந்தியருட்பலர் தாயகமாகவே கொண்டனர். இவ்வாறு இடம் பெயர்ந்த நாலு கோடி இந்தியர்கள் வெளி நாடுகளில் பல அந்தஸ்துகளில் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆதியில் தொழில் புரட்சி தோன்றுவதற்கும் விரைந்து தேசந்தோறும் பரவுவதற்கும் காரணமாயிருந்தது. பொருளாதாரத் துறையிலிருந்த பரந்த நோக்கமேயாகும். ஆனால் அத் தொழில் புரட்சிக்கும் முதலாளித்துவத்துக்கும் ஏற்பட்ட தொடர்பால் கால அளவில் குறுகிய தேசீயக் கொள்கைகள் தலையெடுக்கலாயின. பரந்த பொருளாதாரக் கொள்கைகள் மறையலாயின. தொழில் புரட்சியால் பயன்பெற்ற நாடுகள் பயன் பெறாத நாடுகளை சுரண்டமுற்பட்டன. காலனி நாடுகள் வெறும் கச்சாப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளாயின. அவற்றின் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டது. அந்த நாடுகளிலும் இயந்திரத்தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்ற கிளர்ச்சி எழுந்தது. தீவிர தேசீய பொருளாதாரக் கொள்கைகள் உருப்பெற்றன.

இந்தத் தீவிர தேசீய பொருளாதாரமனப்பான்மை சில ஆண்டுகளில் வலித்து விகார உருவையும் அடைந்தது. பொருளாதாரத் துறையில் பிற்போக்கான நிலையிலிருந்த நாடுகள் மாற்றார் நிறுவிய தொழிற்சாலைகள், செய்த வியாபாரம், போட்டிருந்த மூலதனம் முதலியவற்றால் சுரண்டி வந்ததை எதிர்க்கத் தலைப்பட்டனர். வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களுக்குக் கடினமான் சுங்கவரி விதிக்கலாயினர். வெளி நாட்டார் குடியேறுவதைத் தடை செய்தனர்.

வெளிநாட்டாரது பொருளாதார ஆதிக்கத்துடன் ஏகாதிபத்திய ஆதிக்கமும் தானுகவே ஏற்படு வதைக்கண்டு வெளிநாட்டார் முயற்சி அனைத்தையுமே சந்தேகிக்கலாயினர்.

மனிதன் காலத்தையும் தூரத்தையும்வென்றுன்; ஆகாய விமானம், ரயில் போக்குவரத்துகளை அபிவிருத்தி செய்தான்; தந்தி, ரேடியோ முதலிய புதிய சாதனங்களைக் கண்டுபிடித்தான். மக்கள்நெஞ்சிலேபுதியதோர்நம்பிக்கைபிறந்தது. காலத்தாலும்தூரத்தாலும்வேறுபட்டமக்கள்காலத்தையும் தூரத்தையும் வென்ற கருவிகளால் ஒன்றுபட முடியாதா என்ற ஆசை வளர்ந்தது. இங்ஙனமாயிருந்தது இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சிந்தனையாளரின் விருப்பம். இன்றுநாம்காண்பதென்ன? தேசங்களெல்லாம் சரித்திரத்தில் என்றுமே கண்டிராத முறையில் பிரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. 'கான்ஸ்டான்டிநோபி'லிலிருந்து 'கலே'யை அடைவதற்குள் எத்தனை அனுமதிச் சீட்டுக்கள், எத்தனை அடையாளப் பத்திரங்கள் காண்பிக்க வேண்டியிருக்கின்றது!

இவ்வாறு தொழில் புரட்சிக்கு, பெரிய எதிர்ப் புரட்சி ஒன்று உருப்பெற்று வருகின்ற கட்டத்தை நாம் அடைந்திருக்கிறேம். கார்ல்மார்க்ஸ் நிறுவிய சர்வதேசிய தத்துவம் இப்போது எங்கோ மறைந்து விட்டது. அவரது தத்துவத்தை எந்தநாடு முதல் முதலில் கையாண்டு வந்ததோ அந்நாடே அக்கொள்கையினின்றும் பின்வாங்கி விட்டது. சர்வதேச சமரசம் என்ற மார்க்ஸினது கொள்கையிலிருந்து தந்தை நாடு என்ற கொள்கையிலிறங்கி யிருக்கிறது ஸ்டாலினது ரஷ்யா. ஆம்! நாம் சர்வதேசியத்திலிருந்து வெகு தூரம் விலகிச் சென்று விட்டோம். முன்னேயிருந்த சர்வதேச சங்கம் இதில் தோல்வி அடைந்து விட்டது. இன்று தோன்றியிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையும் இதில் பெரிய வெற்றியெதுவும் கண்டுவிடவில்லை.

இந்தக் குறுகிய தேசிய ஏதேச்சாதிகாரத்தின் விளைவுகளைப் போரின்போது ஜெர்மனியில் கண்டோம். ஜெர்மன் தேசத்து வெறியர்கள் லட்சக்கணக்கான யூதர்களை வெளியே துரத்தினர். அறிஞர்கள் அகதிகள் ஆயினர். ஜெர்மானிய விஞ்ஞான நிபுணர்கள் நாடோடிகளாயினர் திறமை மிக்க அறிவாளிகளை அந்நாடு இழந்தது. ஜெர்மனியின் நஷ்டம் மற்றவர்களுக்கு லாபமாயிற்று. பாலஸ்தீனம் அழகிய யூதர்நாடாயிற்று; பாலைவனங்கள் வனப்புமிக்க பூந்தோட்டங்களாயின. சரித்திரம் அறியாத ஓர் அபூர்வ ஒற்றுமை

யும் சமரசமும் பாலஸ்தீன் யூதரிடை வளர்ந்தது. பரம்பரையாகப்பரந்தநோக்கத்தையுடைய அமெரிக்கர்கள் ஐரோப்பியர்களை வரவேற்றது போலவே, ஜெர்மானிய யூதர்களையும் வரவேற்றனர். அணுசக்தி ஆராய்ச்சியிலேயே வாழ்நாட்களையெல்லாம் கழித்து வந்த விஞ்ஞான நிபுணர்களை ஹிட்லர் கும்பல் துரத்தியது. ஆகவே, அணுக்குண்டு அமெரிக்காவுக்குக் கிடைத்தது. அறிவையும், ஆற்றலையும் விரட்டியடித்த பாவம் ஜெர்மனியை ஆட்டி வைத்தது.

இந்தியர்கள் எப்போதுமே விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள். பல்வேறு இனத்தவர் வந்து ஒன்று கலந்து இந்தியாவில் ஐக்கியமாகி விட்டனர். இந்தியாவிற்கு ஆரியர்கள், கிரேக்கர்கள், பார்த்தியர்கள், ஹூணர்கள், பார்சிகள், யூதர்கள் முதலிய பற்பல இனத்தவர்கள் ஒருவர்பின் ஒருவராக பல நூற்றுண்டுகளாக வந்து இந்தியாவின் பரம்பரைப் பெருமையையும் பண்பாட்டினையும் அவரவர்களுக்குரிய வகையில் உயர்த்தியிருக்கின்றனர். தென்னுட்டில் தமிழ் மன்னர்கள்காவிரிப்பூம்பட்டினத்திலே பிறநாட்டு வியாபாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்து உதவினுர்கள் என்பதற்குப் பழந்தமிழ் நூல்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவை தக்க சான்றுகூறும். இந்த விருந்தோம்பல் கொள்கைதான் அரபியர், யூதர், போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோரை இங்கு ஈர்த்தது. இது கடைசியில் அரசியல் அடிமைத்தனத்தில் கொணர்ந்துவிடவே அயல் நாட்டார் மூலதனத்தையும், தொழில் நுட்பத்தையும் நாம் சந்தேகக் கண்ணேடு நோக்கலானேம். இந்தப்பழைய சந்தேக மனப்பான்மை சுதந்திரம் அடைந்த பின்னரும் இருந்து வருகிறது. இப்போது கருத்துக்கள் மாறி வருகின்றன. இந்தியா இப்பொழுது யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. நாம் பலம் பொருந்தியதொரு பெரிய தேசத்தினராக இருக்கிறேம். பிரதேசங்களின் மூலதனத்தையும், தொழில் நுட்பத்தையும் கொண்டு நமது நாட்டை பல துறையிலும் விருத்திசெய்து கொள்ள நல்ல வாய்ப்புக்கிடைத்திருக்கிறது. அமெரிக்க ஜனுதிபதியும், விருத்தியடையாத ஆசிய நாடுகளை விருத்தி அடைவிக்கப் பணமும், திறமைமிகுந்த நிபுணர்களையும் அனுப்ப முன்வந்திருக்கிறுர். அதைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வது நமது திறனையும் தீர்க்க தரிசனத்தையும் பொறுத்தது.

"மகிழ்ச்சி"

சீர்திருத்த மாதப் பத்திரிகை

ஆசிரியர்: நா. சதானந்தம்

அரசியல், சமூக, பொருளாதார, சீர்திருத்தக் கதைகள், கட்டுரைகள், சிறுவர் பகுதி, மாதர் பகுதி தாங்கி மிக விரைவில் வெளி வரும்.

ஆண்டுச் சந்தா ரூ. 1—8—0] [தனிப் பிரதி 0—2—0

விவரங்களுக்கு:— சதானந்தா புத்தக நிலையம்,
விருதுநகர்.

C. J. SHETH

(ESTD. 1933)

GENERAL MERCHANTS,

2, Bunder Street, Madras, 1.

Phone: 2229. Post Box No. 44. Cable: PAGODA.

Direct dealers of:

Toilet Requisites,
Patent Medicines,
Stationery,
Fountain Pen & Inks,
Japan Clocks
Oilmanstores,
Perfumery,
Cutlery,
Krementz Articles,
and Biscuits.

விருதைத் திருக்குறள் மாநாட்டில்

அறிஞர் சி. என். அண்ணாத்துரை

முழக்கம்

தலைவரவர்களே !
அருமை நண்பர்களே !!
தாய்மார்களே !!!

இது ஒரு பெருமை வாய்ந்த மாநாடு. இலக்கிய வளர்ச்சி மாநாட்டில் மறுமலர்ச்சியின் ஒரு சிறந்த அறிகுறி; சிறந்தகட்டம்; தமிழிற் பேரறிவு படைத்தவர்களும் பிறரும் நம்மை இலக்கியத்தைப் பழிப்போர் - கலையைப் பழிப்போர் என்று கூறும் குறையைப் போக்கும்படி அமைந்த ஒரு சிறந்த மாநாடு. எல்லாவற்றிற்கும் சிறந்த வழி காட்டுவதாயிற்று குறள். இராமாயணம், பாரதம், கீதை முதலியவற்றைக் குறை கூறும் சுயமரியாதைக்காரர் குறளை ஆதரிக்கின்றனரென்றால் அதற்குச் காரணம் யாது? குறள் ஒன்றுதான் மக்கள் நலனை நிலைநாட்ட ஒழுங்காக வகுக்கப்பட்டநேர்மையான நூல்; அதனாலே தான் பாராட்டுகிறோம். ஆனால், இந்த மாநாடு விருதுநகரில் கூடுவது சிறப்பு என்கின்றேன். இந்நகரில் அறிஞர் வே. வ. இராமசாமி அவர்கள் தமிழுலக வானத்தில் அழகிய தென்றலை வீசுகிறார்கள். தோழர் காமராசர் அரசியற் புயலை வீசுகின்றார்கள். புயலின் வெம்மையை - கடுமையைத் தணிக்கத் தென்றல் வீசுகிறது. இரண்டும் மாறி மாறி வீசுகின்ற இந்நகரில் குறள் மாநாடு கூடுவது மிகவும் சிறப்புடையது. தென்றலை நடாத்தும் தலைவரும் அரசியற் புயலை வீசும் தலைவரும் ஒருங்கே வீற்றிருந்து நடாத்த வேண்டிய மாநாடு. அத்தகைய நாளைத் திருக்குறள் கூட்டிவைக்கும். ஒரே கொட்டகையிற் கூடும்படியான வாய்ப்பும் ஏற்படும். இந்த நாட்டுக்கு உடையவனும் ஆக்கிப் படைப்போனும் பிறநாட்டான் என்கின்ற இழிதகைமைபோய் உரிமை கிடைத்

திருக்கும் இந்தக் காலத்தில் நீதி எது? வாழ்க்கை நூல் எது? என்று ஆராயும் பொறுப்பான கட்டம் இது. வழிகாட்டியான நூல் தேவை, வாய்ப்புத் தேவை; திருக்குறள் வாய்ப்பான நூலாகக் கிடைத்தது. அதனைப் போற்றி ஒழுகும் வாய்ப்புங் கிடைத்தது. குறளைப்பற்றிப் பேச — திட்டம் வகுக்க இம்மாநாடு அமைக்கப் பட்டது. நாம் பங்கெடுப்பதால் லாபம் ஒன்றும் — நட்டம் ஒன்றும் உண்டு; திருக்குறளைப் புராணமாக்க நினைத்தது நட்டம், நமக்கு ஒரு நூல் கிடைத்தது லாபம்; நம் நாட்டில் அரிய உண்மைகள் இல்லையா? அரிய பெரியார்கள் தோன்றவில்லையா. இவற்றிற்கெல்லாம் விடையளிப்பது திருக்குறள். வள்ளுவர் அத்தகைய நூலை நமக்கு அருளியிருக்கிறார். அறிவுக்குப் புறம்பான நூல்களை எதிர்க்க அஞ்சாத சுயமரியாதைக்காரர் குறளை எடுத்துப் பாராட்டுகின்றனர்; நெஞ்சார வாழ்த்தி விளக்குகின்றனர்; பிறரும் குறளைப் போற்றத்தான் செய்கின்றனர்; சங்கராச்சாரியார், மடாதிபதிகள் மற்றும் பிறர் குறளை வெளியிடுகின்றனர். ஏன்? அவர்களும் குறளைப் போற்றுவோம் என்பர்; அவர்களைப்பற்றி என்ன சொல்வது? குறளை அவர்கள் படித்தால்- அதன்படி நடந்தால் — நாட்டுக்குச் சங்கராச்சாரி தேவையில்லையே; மடாதிபதிகள் தேவையில்லையே; சிலப்பதிகாரத்தைத் தருதற்குத் துறவுக்கோலம் பூண்டார் ஒருவர். அவரைப் பாராட்டுகிறோம்; திருக்குறளைப் போன்ற நூல் தரத் துறவு பூண்டாரெனின் ஒப்புக்கொள்கிறோம். மடாதிபதிகளுக்கும் சங்கராச்சாரியாருக்கும் பாதக் குறடுகள் ஏன்? தோட்டங்கள் ஏன்? கோட்டைகள் ஏன்? மறைவிடங்கள் ஏன்? மர்மங்கள் ஏன்? இவர்கள் குறளின்படி ஒழுகுவார்களா? புறக்கோலம் எதற்கு? மடாதிபதிகளே! சங்கராச்சாரிகளே!! காலம் மாறிவிட்டது; சமரசம் உண்டாக்குங்கள். மக்கள் மனத்தில் சாந்தம், ஒழுக்கம் நிலைபெற நன்னெறி காட்டுங்கள். வள்ளுவன் புகழைப் பரப்புங்கள். இராமாயணம், பாரதம், பாகவதம், கீதை இவற்றைவெறுத்தவன் திருக்குறளைப்பாராட்டுகிறான்; நீங்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பாராட்டுவது பொருளற்றசெயல். மற்ற நூல்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியல்ல. ஒன்றிலொன்று

பார்த்தால் பயனில்லை; ரயில்வே கைடில் பார்க்க வேண்டுவன வற்றைப் பஞ்சாங்கத்திற் காண முடியாது; அட்லாசில் பார்க்க வேண்டியவற்றிற்குப்பஞ்சாங்கத்தை பார்ப்பது பொருந்துமா? மற்ற நூல்களில் சிலருக்கு ரசிகத் தன்மை இருக்கலாம்; ஆனால் அவை வாழ்க்கைக்குப் பயன் தராது; மடமையை நீக்காது; வாழ்க்கைக்கு அவை உதவா. மறு உலகத்தைப்பற்றிக் கேட்க லாம்; இங்கே உழைப்பு வாழ்வு. அங்கே தேவர் வாழ்வு: உழைப் புக்கும் ஓய்வுக்கும் வேற்றுமை தெரியாத அவ்வுலகப் புரளியால் யாது பயன்? அங்கே நாட்டியம் —ஊடல்-நாரதர் தூது - கோபம்- பதவியிழப்பு இவை நடைபெறு மாம். அவற்றால் யாருக்குப் பயன்? இவற்றைச் சுயமரியாதை யுள்ளவன் கண்டிக்கிறான். என்ன காரணம்? பக்தி-மறுமை யுலகம்— இவை நேர்மை என்று காட்ட முடியுமா? எந்த மத வாதியும் சொல்ல முடியுமா? புராணக்கதை, நீதி போதிக்க எனின் ஒன்றோடொன்று முரணுகிறதே; பக்தியை ஒப்பி ஆஸ்திகன் எந்தக் கதையை எப்படி நம்புவது? ஒரு ஊருக்கு நாலு பாதையா? வியாசன் — சுக்கிரன் — ரமணரிசி — பட்டி னத்தார்— ஒவ்வொருவர் கூறு வதும் ஒவ்வொரு வழி; ஒன்றுக் கொன்று முரண். இப்படியாக் கினால், என்ன செய்வது? இந்த வழியில் ஆஸ்திகனும்போக முடி யாது; நாஸ்திகனும் போக முடி யாது; புலிக்குப் பயந்து மரத்தி லேறித் தூங்காமல் இலைகிள்ளிப் போட்டவனுக்கு அம்மை சிவ காமியின் கட்டளையால் அப்பன் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளி வீடுபேறு கொடுத்தானும். கால் தேய உடல் தேயப் பின்புத் தலை கீழாகவும் நடந்த லைந்தபின் காரைக்காலம்மையாருக்கு என் அப்பன் சிவகாமிநாதன் அருள் செய்தானும்; எதைப் பின்பற்றி எந்த நெறியிற் செல் வீர்கள்? பாண்டவர் வரலாற்றை நோக்குங்கள்; துரோணர் மற்ற வன் கற்றதற்குக் கட்டைவிரலைக் கேட்டுத் துண்டிக்கச் செய்தார். குருபத்தினியைக் கற்பழித்த சந்திரன் கதையை யறிவீர்கள்; இவற்றைப்படித்து மக்கள் வாழ முடியுமா? இராமாயணத்தில் நீதியுண்டென்கிறார்களே! வாலியைக் கொல்ல இராமன் கையாண்ட முறையால் நாம் அறியும் நீதி என்ன? இவற்றை யெல்லாம் ஆராய்ந்தால் நாம்

என்ன கருத முடியும்? திருக்குறளைத் தவிர நமக்கு வேறு வழியில்லை; நம் தலைவர் நாவலர் பாரதியாரவர்களைநான்வேண்டிக் கொள்கிறேன் - திருக்குறளைப் பண்படுத்தித்தரவேண்டுமென்று. நீங்கள் பண்படுத்தி நல்லுரை வகுத்து நல்ல வித்தாகக் கடைந்தெடுத்துக் கொடுங்கள். நாங்கள் எல்லா மக்களின் உள்ளத்திலும் விதைத்து விடுவோம்; இன்னும் பத்தாண்டுகளுக்குள் எல்லோர் மனத்திலும் எல்லோர் வீட்டிலும் திருக்குறள் நிலைபெற்று இருக்கக் காணலாம். இதனை நான் வேண்டிக்கொள்கிறேன்.

திருவாரூர்த் தமிழ்த் திருநாள்

[அ. இராசகோட்டியப்பன்.]

புத்தம் புதிய கலைகளைத் தமிழில் புத்தக வடிவாக்குவோர்க்குப் பரிசு வழங்கும் திட்டத்தைத் தலையாகக்கொண்ட தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்ற ஆண்டில் பாண்டித் தலைநகராகிய மதுரையம்பதியில் தமிழ்த் திருநாள் கொண்டாடிற்று. இவ் ஆண்டில் அத் தமிழ்த் திருநாள் பண்டைச் சோழர் தலைநகராகிய திருவாரூரில் 16 17—4—49, சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் மிகச் சிறப்பாக நடந்தேறிற்று. அவ் இரண்டு நாட்களும் தேரோடும் நெடுவீதித் திருவாரூர், செந்தமிழ்த் தேரோடும் பெருவீதித் திருவாரூராகக் காட்சியளித்தது. இத் திருவிழாவைத் தம் உழைப்பாலும், ஊக்கத்தாலும், ஒண்பொருட்கொடையாலும் கண்காணித்து நடாத்திய பெருமை முழுதும் வடபாதிமங்கலம் திருவாளர் தியாகராச முதலியார் அவர்களைச் சேர்ந்ததாகும்.

16—4—49, திருவிழாவின் முதல் நாட்காலையில் திருவாரூர்ச் சந்திப்பில் அமைச்சர்கள், அறிஞர்கள், ஆயிரக்கணக்கான அயலூர் அன்பர்கள் வந்திறங்கினர். முதலில் பழந்தமிழ்ச் சுவடிகளை யானைமேலேற்றித் திருவாரூர் வெளிவீதியில் ஊர்வலம் நடைபெற்றது. கோயிலின் உள்வீதியில் அமைந்திருந்த மிகப்பெரிய அழகிய பந்தலில் மாநாடு தொடங்கிற்று. மத்திய அரசாங்க அமைச்சர் திரு. சந்தானம் அவர்கள் திறப்புரையாற்றினர். "விஞ்ஞானம், உளநுட்பம், பொருளாதாரம், உழவு, வாணிகம்போன்ற கருத்துக்களை விளக்கும் ஆராய்ச்சி நூல்கள் ஏராளமாய் வெளிவருவதால் மாத்திரமே, தமிழ் மொழி வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும்; கதை கட்டுரைகளை எழுதிக் குவிப்பதனால் மொழி வளர்ச்சி அடைந்ததாகாது" என்று அவர்கள் கூறிய முடிவு, தமிழ் வளர்க்கும் தலைவர்களும் புலவர்களும் உடனடியாகப் பின்பற்றத் தக்கதாகும். அப்பால் மாநாட்டுத் தலைவர் திருவாளர்

ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்க்ள் தலைமையுரை யாற்றினர். (அத்தலைமை யுரையை இம்மலர், 33-ம் பக்கத்திற் காண்க) அரசவைக் கவிஞர் திரு. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை யவர்களுக்குப் பாராட்டுரை படித்துக் கொடுக்கப்பட்டது. கவிஞர், அதற்குப் பாட்டாலும் உரையாலும் மறுமொழி கூறினர். பின், அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தஞ்சைச் சரசுவதி மகாலிலுள்ள கலைக் களஞ்சியங்களைப்பற்றி விரிவாகக்கூறிக் கண்காட்சியைத் திறந்துவைத்தார். அக்கண்காட்சியில் பண்டைய ஏட்டுச் சுவடிகளும், சிற்பங்களும் வைக்கப் பெற்றிருந்தன.

மாலை 3 மணிக்கு மீண்டும் மாநாடு கூடிற்று. அமைச்சர் டாக்டர் தி. ச. சௌ. ராஜன் அவர்கள் விஞ்ஞானப் பகுதி விழாவிற்குத் திறப்புரை வழங்கினார்கள். இந்திய விஞ்ஞானிகளில் முதன்மையாளரும், தமிழ்ப்பேரன்பருமாகிய டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், விஞ்ஞானக் கலை வளர்ச்சியைப் பற்றி அருமையான தலைமைப் பேருரையாற்றினர். திரு. ஆர். கே. விசுவநாதன், ஈ. த. இராசேசுவரியம்மையார், செல்வம் முதலிய விஞ்ஞானப் பேரறிஞர்கள் விரிவுரை வழங்கினார்கள். தமிழ் மொழியில் விஞ்ஞானத்தை விளக்குதற்குப் போதிய சொற்களில்லை என்ற குறையை இப் பேரறிஞர்களின் பேருரைகள் அடியோடு ஒழித்துவிட்டன. அன்றிரவு ஏமாலினி — பதுமினி இருவரின் இன்னிசையரங்கு சிறப்பாக நடைபெற்றது.

மறுநாட்காலை, பொருளாதாரப் பேரறிஞர் திருமிகு. ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் பொருளாதார மாநாடுதொடங்கிற்று. பொருளாதாரத் தலைவரின் பொருள் பொதிந்த பேச்சும், சிறுகதையொன்றும் அவையினரின் ஆர்வத்தைக் கவர்ந்தன. சென்னையரசாங்கப் பொருளியல் துறை ஆய்வுரையாளர் டாக்டர் ப. நடராசன் அவர்கள், தம் "ஐந்நூறு கோடித் திட்டத்தை" அழகிய தமிழில் விரித்துரைத்தார்.

திரும்பவும், அன்று மாலை விழாப் பந்தலில், தமிழ் இலக்கிய மாநாடு ரஸிகமணி திரு. டி கே. சி. தலைமையில் நடைபெற்றது. தமிழ்க் கவிக்கு உள்ள ஆற்றல் எல்லாம் ரசிகமணியின் சுவை மிக்க சொற்பொழிவில் விளங்கின. தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நிறுவியவரும், அதன் தலைவருமாகிய

திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் தமிழில் எழுதப்பெற்ற ஏழு சிறந்த நூல்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் ஐந்நூறு வெண்பொன் பரிசு வழங்கினார்கள். திருவாளர்கள் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், தி. பொ. பழனியப்ப பிள்ளை முதலிய தமிழ்ப் பெரும் புலவர்களின் விரிவுரைகள் முறையே நடைபெற்றன. இறுதியில் 'கல்கி'யாசிரியரின் சுவைமிக்க பேச்சும் நிகழ்ந்தது. இரவில், திரு. டி. கே. சண்முகம் சகோதரர்களால் "ஔவையார்" என்ற தமிழ்ச் சுவை ததும்பும் நாடகம் நன்கு நடிக்கப் பெற்றது. தமிழ் வாழ்க.

பரிசு விபரம்

நூலாசிரியர்	நூற் பெயர்	பொருள்
1. எம். பி. சோமசுந்தரம்	இளவேனில்	கவிதை
2. டி. கே. மாணிக்க வாசகம்	வகை நுண் கணிதம்	கணிதம்
3. பொ. திரிகூடசுந்தரம்	குழந்தை எப்படிப் பிறக்கிறது? அப்பாவும் மகனும்	சிறுவர் இலக்கியம்
4. அ. வெ. சுப்பிரமணியம்	உயிரணுக்களின் உலகம்	சுகாதாரம்
5. கே. எஸ். நாகராஜன்	கல்வி	கல்வி
6. ஜமதக்கினி	நமது பூமி – வீடு ஜீவசரிதம்–மனிதன் வரை	இயற்கை நூல்
7. மு. அருணசலம்	காய்கறித் தோட்டம்	விவசாயம்

நவீன ரக கைத்தறி
ஆடைகளுக்கு
சிறந்த இடம்:-
மதுரை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனை சங்கம் லிமிடெட்
4 & 7 மேல ஆவணி மூல வீதி, மதுரை
அழகிய பார்டர்கள் ★
நீடித்த உழைப்பு ★
கெட்டிச்சாயம் ★
Rajan & Co.
உங்கள் தேவைக்கு ஓர் முறை விஜயம் செய்யுங்கள்.

திருவாரூர்த் தமிழ்த் திருவிழாத்

தலைமையுரை

16 - 4 - 49.

திருவாளர்.
ஓ. பி. இராமசாமி ரெட்டியார்.



"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து—
பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து
தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோருடைத்து."

நீர் வளமும், நிலவளமும், குடி வளமும், கலைவளமும், கவிவளமும் பெற்ற இச் சோழ நன்னாட்டிலே இப்புராதனத் திருவாரூர், சிவக்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றது. "இவ்வாரூரில் பிறக்க முக்தி" என்பது ஆன்றோர் வாக்கு. இங்குதான் ஆண்டவன் புற்று வடிவமாகவும் தியாகராஜாவாகவும் அன்பர்களுக்குக் காட்சி யளிக்கிறார். இக் கமலாலயத்தில் எழுந்தருளி யிருக்கும் ஆரூர்அப்பன் மகாவிஷ்ணு, இந்திரன், முசுகுந்தசக்ரவர்த்தி முதலியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்பட்டதாக ஸ்தல புராணம் கூறுகின்றது. இவ்வாரூர் ஸ்தலத்திலேயேதான் பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் முதலியோருக்கு சூளூர் சுப்பன் உண்மை ஞானத்தை நல்கினார். இத்தலம் சமய குரவர்களாகிய அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் என்பவர்களால் பாடல் பெற்றதாகும். இத் திருநகரில் நீதி வழுவாநெறி முறையில் ஆண்ட ஒரு சோழ மன்னன், மகன் வீதிவிடங்கனை ஒரு பசுங் கன்றுக்காக ஜீவ காருண்ய உணர்ச்சியுடன் தேரடியில் இட்டுத் தன் நல்லாட்சியின் புகழை உலகம் விளங்கும் வரையிலும் ஸ்தாபித்து "மனுநீதி கண்ட சோழன்" என்ற சிறப்புப் பெயரும் பெற்றான். சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவையாரோடு இல்லறம் நடத்த

ஆரூராரிடம் அனுமதி பெற்று சீர் திருத்த மணம் செய்துகொண்டதும் இங்குதான். இந்நகரத்திலே தான் ராம பக்தராக விளங்கிய தியாகராஜ சுவாமிகள் அவதரித்தார். பண்டைக்காலத்தில் இந்நகரம் சோழ மன்னர்களது இராஜதானியாகவும் இருந்து புகழ்பெற்றது. இத்தகைய புகழ்வாய்ந்த இப்பெரும் பகுதியிலே இத் தமிழ் வளர்ச்சிக் கழக மகாநாடு நடைபெறுவது பாராட்டத்தக்கதாகும்.

அன்பும் அறிவும் ஆற்றலும் மிகுந்தபல அறிவோர்கள்கூடியுள்ள இம்மகாநாட்டுக்கு நாவலனும் பாவலனும் அல்லாத ஒரு கிராமவாசியும் வேளாளனும் ஆகிய என்னை தலைமை வகித்து நடத்தக் கட்டளையிட்ட வரவேற்புக்கழகத்தாருக்கும் இன்று இங்கு இந்நிலையில் நிறுத்திப் பணிகொளும் ஆண்டவனுக்கும் அன்பர்களுக்கும் எனது வந்தனத்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தண்டமிழ் வளர்ச்சிக்கு மாநாடும் வேண்டுமா ?

உலகத்தில் ஆங்கில வளர்ச்சி மாநாடு, லத்தீன் வளர்ச்சி மாநாடு, கிரேக்க வளர்ச்சி மாநாடு, பிரஞ்சு வளர்ச்சி மாநாடு என்றெல்லாம் மாநாடு கூட்டுகிறார்களா? இல்லை. இல்லை. சரித்திர ஆராய்ச்சி மாநாடு, விஞ்ஞான வளர்ச்சி மாநாடு, என்றெல்லாந் தான் கூட்டுகிறார்கள். இதன் உட்கருத்து என்ன? அங்கெல்லாம் மொழி வளர்ச்சிக்கு ஒரு மகாநாடு கூட்டவேண்டிய அவசியமில்லை. நாமோ நம் மொழியைப் பேணிக் கையாளாமையால், அதனிடத்து பற்றுள்ளங்கொண்டு படித்து அந்நெறியில் பழகாமையால் மொழி வளர்ச்சி, பண்டைக்கருத்து வளர்ச்சி, நாகரீக வளர்ச்சி, தமிழ்ப் பண்பு வளர்ச்சி இவைகளில் குறைவுபட்டு நிற்கிறோம். அவற்றைக் கைவிட்டே விட்டோம். அதனால் மாசுபடிந்த—ஒளி குன்றிய—வளர்ச்சி மழுங்கிய நம் மொழியை வளர்க்க விழித்தெழுகிறோம். கன்னித் தமிழ் — மார்க்கண்டேயர் போல் என்றும் இளமை மாறாத் தமிழ்— எல்லாச் சொற்களும் வழக்கத்திலிருந்து மக்களுடைய உணர்ச்சியில் பொருள் தெரிவிக்கிற தமிழ் தற்போது தள்ளாடித் தத்தித் தத்தி நடக்கின்ற— பொருள் விளங்காத— உறுப்புக்களெல்லாம் தளர்ந்து போன முதுதமிழாகக் காட்சி தரப் பார்க்கிறோம். கருத்தென்ன? சங்கத் தமிழ்—சற்றேறக் குறையத் தனித் தமிழ் சங்கைக்கிடமாகவே விளங்குகின்றது.

நாமே அதைப் படிக்கிறபோது இது தமிழா? இது தமிழ்ப்பாட்டா? இவ்வளவு கரடு முரடாயிருக்கிறதே என நினைக்கிறோம். சொல்லுகிறோம்.. என்? பழைய நல்ல தமிழ்ச் சொற்களையெல்லாம் மறந்து வேறு

வேறு சொற்களைப் புகுத்திக்கொண்டோம். மேனாட்டறிஞர்கள் தங்கள் நாட்டிலில்லாத பொருள்களைக் குறிக்கும் வேறு மொழிச்சொற்களை மட்டும் தம் மொழியிற் சேர்த்துக் கொள்வர். அம்முறையில் விரிந்தவைதாம் ஆங்கிலம்போன்ற பாஷைகள். நாமோ கண்டது கற்கப் பண்டிதனாவான் என்ற சாமான்ய வாசகத்தை நம்பி நம்மை நாமே மறந்து மாறினோம். நம் மொழியையும் மாற்றினோம்.

தமிழ் இனிய மொழி அதன் பெயருக்கே அதுதானே பொருள். நம்மொழி, தனக்கெனச் சிறப்புகளை உடையது. ஒரு மொழிக்குப் பழமை இலக்கிய இலக்கண அமைப்பு, உண்மை நூற்பெருக்கம், மனித வாழ்க்கைக்குத் தேவைகளைத் தருதல், நுண்ணிய கருத்துக்களைக்கொண்டிருத்தல் எப்பருவத்தினருக்கும் ஏற்ற நூலுடைமை, கருத்துக்களையெல்லாம் வெளிப்படுத்தும் சொற்களையுடைமை, மனிதப் பண்பை வளர்த்துத் தெய்வப் பண்பைப் புகுத்தி உயர்த்தும் வளமுடைமைமுதலியவைகள் சிறப்புத் தருவன. இம்முறையில் நம் மொழியினை சிறந்ததென்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் பெருமை

மனிதத் தோற்றமே தமிழ்நாட்டில்தான் துவக்கியதென அறிஞர் கூறுகின்றனர். ஸ்ரீ. பி. டி. சீனிவாசய்யங்கார் முதலியோர் தக்க சான்றுகளும் காட்டுகின்றனர். இத்தமிழ் தான் பூமியை நானிலம் என்றுகூறுகின்றது. அதாவது நிலம் (நிற்பது, தரை) குறிஞ்சி (மலை), முல்லை (காடு), மருதம் (வயல்), நெய்தல் (கடல்) என்று நான்கு பாகுபாடுடையதென்று கண்டு கூறியது. அவ்வந்நிலங்களில் கருப்பொருள், உரிப்பொருள் என பொருட்களின் பிரிவு உண்டென்றும் தமிழனே கண்டான். அதனை இலக்கணத்திலமைத்தான்.

எனவே, தமிழ் அகத்தியர் காலத்துக்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே, இயல் இசை நாடகம் என்ற முப்பிரிவுகளோடு இருந்ததென்று தெரிகிறது. அகத்தியரே கூறுகிறார். இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம் என்பது அவர் வாக்கு. அதன் உயர்வைக் குறிப்பதற்குத் தான், சிவன் தந்த தமிழ் என்றும், முருகன் கொடுத்த தமிழென்றும், அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு என்றும் பிற்காலத்தவர் குறிப்பிட்டவற்றையெல்லாம் தமிழ் நூல்கள் சொல்லியதால் அதனைத் தெய்வீகமுடையதென்று முன்னோர் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

பழங்காலத்துப் பெருநாரை, முதுகுருகு, வியாழமாலை, களரியாவிரையென்ற நூல்கள் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கும் சங்க

நூல்களும் மக்களுக்குப் புரியவில்லை ஏன்?நல்ல கருத்தமைந்த சிறு தமிழ்ச் சொற்களையெல்லாம் மறந்துவிட்டோம்.

குறைகள்

இந்நிலையில் தமிழ் நாட்டிற் காணுங் குறைகள் சிலவற்றைப் பார்ப்போம். ஒருசாரார் கடவுளையே நம்பவில்லை. ஒருசாரார் மனிதருள் உயர்வு தாழ்வு ஆண்டவன் சம்பந்தமானதென்கின்றனர். மற்றொரு சாரர்எளியோரெல்லாம்வலியோர்க் கடிமையென்கின்றனர் ஒருசாரார் வந்ததெல்லாம் கொள்ளும் மகராசன் கப்பல் என்கிறபடி சுயநலத் தடிப்பேறியவர்களாயுள்ளனர். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பது இந்தியாவிலேயே இல்லாமற் போயிற்று. இவற்றைப்பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன்.

நாமெல்லாம் உயிர்கள். நாம் எப்படியிருக்கிறோம்? அதுதான் தெரியவில்லை. நம்மை நாமே யறியாதபோது, நம்மை யாளும் இறைவனை அவ்வளவு சுபலமாக-வெளிப்படையாக எப்படிப் பார்ப்பது? நேருவைப் பார்க்க, ராஜாஜியைப் பார்க்கப் பணச் செலவையும் உடல் வருத்தத்தையும்பாராதுஓடோடியும் போய் முயற்சிக்கிறோம். கடவுளைக் காண என்ன முயற்சி செய்தோம். அந்தஆராய்ச்சியினல்தான் "எங்கும் இறைவனுளனென்பாய் மனமே எங்கு எனத் திரிவாரில்" என்று ஒருவர் சொன்னர். ஐயோ! உன்னைக்காணேமே!என்பதுபோன்றது தான் எனக்குள் கடவுள் எங்கே இருக்கிறர் எனத் தேடுவது. விறகில் நெருப்பும், பாலில் வெண்ணெயும் கடைந்தாலல்லவோ வரும்?

கடவுள் இருப்பிடம் உயிர்களின் உள்ளம். அதனை விளக்கவந்த பருப்பொருள் கோவில்கள். அவைகள் பண்டைக் காலத்தில் எப்படி அமைக்கப்பட்டிருந்தன. கலைகளுக்குக் கோவில்இருப்பிடம். மேளம் இசைக் கலையை வளர்க்கின்றது. நாட்டியம் ஒரு கலையல்லவா? சிற்பங்கள் கலைத் திறனுலமைந்தவை. வேதமந்திரங்கள் தேவாரம்,பிரபந்த முதலியவை வளர்ப்பன. கோயிலமைப்பு யோக சாஸ்திர அமைப்பு, இவற்றைக் கையாளுவோர் கோயில் வரும்படியிலிருந்து ஊதியம் பெறுகின்றனர். இவர்கள் தொண்டு செய்யும் போதெல்லாம் கடமையுணர்ச்சியோடு கலைகளை வளர்க்கின்றனர். இந்த இடம் எவ்வளவு நன்ருகப்பராமரிக்கப்படவேண்டும். கோவில்களுக் கடுத்தபடி மடங்கள். தத்துவக் கலையையுடமையான ஒழுக்கங்களையும் வளர்ககவே ஏற்பட்டன. இந்த அறநிலையங்கள் அறத்தை மறந்துவிட்டன. உலகப் போக்கிலே மூழ்கிவிட்டன. போதாக் குறைக்கு அவைகள் தம்உண்மையானகடமைகளையும் மறந்துவிட்டன. கடவுள் பெயரால் கொடுக்கப்படுபவைகள்

எல்லாம் திரும்பவும் கலைவளர்ச்சியின் மூலமாக மக்களுக்கே வர வேண்டுமல்லவா? இதற்கல்லவா பொருளெல்லாம் அங்கு தேக்கி வைக்கப்பட்டுள்ளன? பாசிக் பிடிக்கச்செய்து வைக்கப்படவில்லையா.

பள்ளத்திலே நெடுநாளழுகும்
கெட்ட
பாசியை யகற்றிடும் வெள்ளம்
போல்

கோயிற் பொருள்கள் உபயோகப்படுத்தப்படவேண்டும்; அமைய வேண்டும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்றார் சீர்திருத்தவாதி திருவள்ளுவர். ஏன் அதை நாம் மறக்கவேண்டும்?

பிறக்கும்பொழுதுகொடு வந்ததில்லை
பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடு
போவதில்லை
இடைநடுவிற்

கிடைக்கும் இச்செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்க என்ற பட்டினத்தார் பாட்டை அடிக்கடி நினைவில் வைத்துக்கொள்ளக்கூடாதா?

ஆதாரக் கல்வி

ஒளவையும், இளவெயினியும், நச்செள்ளையாரும், காரைக்காலம்மையாரும், மங்கையர்க்கரசியும் ஆண்டாளும், திலகவதியுமாக நம் நாட்டுப் பெண்களை ஏன் விளங்கவைக்கக் கூடாது? எல்லா மொழிகளுக்கும் ஆதாரக் கல்வி பயன் தருகிறது. தமிழுக்கும் ஆதாரக் கல்வித்திட்டம் அமையவேண்டும். வயதுவந்தவர்களுக்குள் கல்வி அறிவு பரப்ப மூலாதாரத் தமிழ் அமைக்கவேண்டும். மகாத்மா காந்தியடிகளின் வார்தாக் கல்வித் திட்டத்தை நம் நாட்டில் வளரச்செய்யவேண்டும்.

தற்போது நம் நாட்டைப்பிடித்துக்கொண்டாட்டும் பேய்கள் பல. ஒன்று பேராசை, மற்றொன்று கொள்ளை லாபம், வேறொன்று தன்னலம். இவற்றுக்கெல்லாம் மேலாக வறுமைப் பிணியுள்ளது. இவற்றையெல்லாம் அடித்து ஓட்டவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? தமிழிலுள்ள நல்ல நீதி நூல்களையெல்லாம் கற்பிக்கவேண்டும்.

கடமையுணர்ச்சி

தமிழ் வளரவேண்டுமென்றால் கடமை யுணர்ச்சி, கடவுள் பக்தி, ஒழுக்கம், நடை இவையெல்லாம் வளரவேண்டும். அப்பொழுதுதான் மனித சமுதாயத்திலிருந்து துன்ப விடுதலை. உண்மையான தமிழ் வளர்ச்சி. இத்துறையில் இக்கழகம் தொண்டாற்றி விளங்கவேண்டுமென்றால், நம் நாட்டில் செய்யும் காரியம் தாமின்றிச்செய்யும் சித்தர்களான கர்மயோகிகள் ஏற்படவேண்டும். எவ்வளவுபேர் அப்படி ஏற்படுகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் நம் நாட்டின் முன்னேற்றமும் இருக்கிறது.

நம் முன்னோர்கள் பண்டைக் காலத்தில் தமிழ் முதலிய பாஷைகளிலிருந்தும், புத்தகங்களைச் சேகரித்து அவற்றை அநேக நூல்நிலயங்களிலும், கோயில்களிலும், மடங்களிலும் வைத்துப் பாதுகாத்து வந்தனர். அந்த எட்டுச் சுவடிகளில் பல இன்னும் பிரசுரிக்கப்படாமல் கரையான்களுக்கு இரையாகிப் பாழாகி விடுகின்றன. அவைகள் நம் முன்னோர்கள் நமக்கு வைத்த புதை பொருள்கள் போன்றவை அவைகளில் விஞ்ஞானமும் பொதிந்து கிடக்கின்றன. இப்புதை பொருள்களை கூடிய சீக்கிரத்தில் இவை அழியு முன்னரே அனைவருக்கும் எடுத்து வழங்க வேண்டியதற்கு தகுந்த ஏற்பாட்டை இம்மகாநாட்டாரும், அரசாங்கத்தாரும், அறநிலயப் பாதுகாப்பாளரும், மடாதிபதிகளும் சேர்ந்து செய்ய வேண்டியது அவசியம். அவர்கள் விகிதாச்சாரமாய் பொருள் போட்டு நிதி சேர்த்து அப்புத்தகங்களைப் பிரசுரிப்பதுடன் அவற்றை நம்தேச பாஷையாகிய இந்தியிலும், உலக பாஷையாகிய ஆங்கிலத்திலும் பிரசுரித்து உலகிற்கெல்லாம் இவ்ஞான பொக்கிஷத்தை வழங்குவதற்கு தகுந்த ஏற்பாட்டையும் செய்தல்வேண்டும். இவற்றை யெல்லாம் சரிவரச்செய்ய வேண்டுமாயின் செந்தமிழ் நாட்டுப் பாவலர்களையும், நாவலர்களையும் ஆண்டுதோறும் ஒன்றுகூட்டி அரசாங்கமும், கழகமும் அவர்களுக்கு ஊக்கமளிப்பதோடு, மென்மேலும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் கலைகளையும் வளர்க்கப் பரிசுகள் வழங்குதல்வேண்டும் கவிஞர்களும, கலைஞர்களும்தான் ஒரு நாட்டின் தற்கால நிலைமையையும், பழங்காலப் பண்பையும் ஒன்றுசேர்த்து நாட்டின் முன்னேற்றத்திற்குத் தக்கபடி நாட்டில் தேங்கிக்கிடக்கும் ஜீவ வேகத்தையும் புதுப்பித்துப் புத்துயிரளித்து முன்னேற்றத்திற்குப் பாடுபடும் தெய்வீக சிற்பிகளென்பதை மறந்துவிடலாகாது. அவர்கள் மூலமாகத் தாலாட்டுப்பாட்டுமுதல் சரமகவிவரை புதுப்பிக்கச்செய்து தொண்டு, தொழில், வீரம், அறிவு வளர்ச்சி, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், கடவுள் பக்தி, ஒழுக்கம் முதலியவற்றின் வளர்ச்சிக்குத் தக்கபடி இக்கழகத்தார் வேலை செயயவேண்டும். இதைச் செவ்வனே செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாருக •

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக!
அருள் நயந்த நன்மார்க்கரான
தெருள் நயந்த நல்லோர்நினைத்த
நலம் பெருக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து.

ஓம் சுத்த சக்தி

புது யுக நிலையம்-புதுச்சேரி

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின்

அரிய புதிய நூல்கள்

1. பாரத சக்தி மகா காவியம் (ஐந்து காண்டங்களும்) 15—0
இந் நூல் உலகப்பெரியார் வரலாறுகள், எல்லாச் சமய-சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள்; சித்தயோக சித்தி ரகசியங்கள்; கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனாக வாழும் வழிகள் அடங்கிய புதிய காவியச் சோலை. 1000 பக்கங்கள்.
2. யோக சித்தி (மூலமும் உரையும்) 3—0
ஆசிரியர் - கல்வி, சுகாதாரம், அரசியல், சமுதாய சீர்திருத்தம், கிராம சேவை பத்திரிகை, காவியம், யோகம் முதலிய பல துறைகளில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களெல்லாம் இந் நூலில் அடங்கியுள்ளன.
3. நாவலர் பெருமான் 3 - 0
சிவத்திரு ஆறுமுக நாவலர் வரலாறும், திருமொழிகளும், அருட்பணித்திறனும் இந் நூலில் நன்கு விளங்கும்.
4. திருநூல் 1-12
5. நவரஸ நடனஞ்ஜலி 2—0
6. கீர்த்தனஞ்ஜலி (556 இசைப் பாடல்கள்) 3—8
7. கவிக் கனவுகள் (திருக் காட்சியுடன்) 1—8
8. புதுயுகப் பாட்டு (105 சுதந்தர உலக கீதங்கள்) 1—8
9. ஏழை படும் பாடு (Les Miserables) 5 – 0
10. ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் 2 – 8
11. ஸ்ரீ அன்னை (The Mother) 0—8
12. பகவத் கீதை (தெளிந்த தமிழுரை) 1—4
13. The Gospel of Perfect Life (Yoga Siddhi) 3—0
14. Sri Aurobindo, The Divine Master 1—8
15. Yogi Shuddhananda Bharati (A Study) 3 – 0
16. நாட்டுப்பாட்டு (அச்சில்) **1 – 8**
17. **திருக்குறளின்பம் (அச்சில்) 3—8**
18. **அருட்செல்வம் (தமிழ் வேதம்; பாராயண நூல். தமிழுலகிற்கு பைபிள் போன்றது. எல்லா அருட் பெரியார் வாக்குகளும் இதில் அடக்கம் (அச்சில்) 2—0**

வியாபாரிகளுக்கு ரூ. 100-க்குள் கமிஷன் 20 சதம். அதற்கு மேல் 25%

CO-OPTEX

கூட்டுறவு கைத்தறி ஆடைகள்

இந்த ஆடைகளின் தனிச் சிறப்புக்கு முக்கிய காரணங்கள்

அவற்றின் முதல்தர உறுதி. உழைப்பு, கவர்ச்சி, நவீனத் தேவை ஒவ்வொன்றிற்கும் ஈடுகொடுக்கவல்ல புதிய மாதிரிகளில் எண்ணிறந்த வகைகள் தயாரிக்கப்படுவது.

மாகாண மெங்கும் உள்ள 63 விற்பனை எம்போரியங்களில் தட்டுத்தடையின்றி கிடைப்பது.

கூட்டுறவு முயற்சியின் பயனால் கைத்தறி நெசவாளரிடமிருந்து நேராக மக்களுக்கு ஸரஸமான விலையில் விற்பனைப்படுத்தப்படுவது.

தற்சமயம் விலைகள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனை பயன்படுத்திக்கொண்டு

CO-OPTEX

"கோவாப்டெக்ஸ்"

கைத்தறி ஆடைகளை வாங்கி அணியுங்கள்.

வேஷ்டி – ஷர்ட் துணி – ஸூட்துணி – துண்டு – சேலை
ரவிக்கை துணி – சீட்டி – கைக்குட்டை – திரைச்சேலை
படுக்கை விரிப்பு – மேஜை விரிப்பு – கொசு வலை
குவில்ட் – லுங்கி

மதராஸ் கைத்தறி நெசவாளர்
மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
"ஹாலோவேஸ் கார்டன்ஸ்" 34, பாந்தியன் ரோட்
எழும்பூர் — மதராஸ்.

மனம் உண்டானால் இடமும் உண்டு.

[திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம்.]

"தம்பி! வாருங்கள் ஏது இவ்வளவு அவசரம்?"

"அவசரம் தான். ஒரு மணி நேரம் தங்கள் மோட்டாரைக் கொடுத்து உதவி செய்யுங்கள்."

"மோட்டார் தானே! இதற்கா இவ்வளவு அவசரம்? வீட்டில் பாட்டி, பாப்பா யாவரும் நலம் தானே?"

"ஆம். எல்லோரும் நலமே! முதலில் கார் அவசரமாக வேண்டும்"

"உங்களுக்கில்லாத காரா? பாருங்கோ பெட்ரோல் இல்லாமல் இரண்டு நாளாக கார் எடுக்கவே இல்லை"

"நான் அப்போதே எண்ணினேன் பெட்ரோலுக்குக் கஷ்டமாக இருக்கும் என்று. அதனாலேயே நான் வரும்பொழுது நமது நண்பர் இராமநாதனிடம் இரண்டு காலன் பெட்ரோல் கேட்டு வந்தேன். அவரும் தருவதாக வாக்களித்திருக்கிறார்."

"நல்ல உதவி! நல்ல உதவி! இராமநாதன் குணமே குணம்! காரை எடுத்துப் போங்கள். டிரைவர் இல்லையே. என்ன செய்வது?"

"இராமநாதன் கார் பழுதாய்க் கிடக்கிறது. ஓடும் நிலைமையில் இல்லை. அதனால்தான் பெட்ரோல் தர ஒப்பினார். அவர் டிரைவரும் சும்மாதான் இருக்கிறார். போய் அழைத்து வரட்டுமா?"

"சரி! போய் அழைத்து வரலாம். ஆமாம்! லைட்டுக்கு பல்பு இல்லையே! என்மீது போலீசுக்கு இருக்கிற வருத்தத்திற்கு விளக்கில்லாமல் கார் ஓடுவதைக் கண்டால் சும்மாவிடமாட்டார்களே!"

"அதைப்பற்றிய கவலை தங்களுக்கு சிறிதும் வேண்டாம். நான் போகும்போதே கடையில் வாங்கிப் போட்டுக்கொள்ளுகிறேன். பேசுவதற்கு நேரமேஇல்லை. அவசரம்"

"சரி! தம்பி! உங்கள் காசு வேறு. என் காசு வேறு? வாங்கிப் போடுவீர்களென்பது எனக்குத் தெரியாதா? என்ன? முக்கியமான ஒன்றை மறந்தேபோனேன். மூந்தாம்நாள் திடீரென பின் டயர் இரண்டும் பஸ்டாய்ப் போய்விட்டது. கார் இரண்டு நாட்களாய் நின்றதும் இதனால்தான்! என்ன செய்வது?"

2

"சரி! நான் வருகிறேன். உங்களுக்கும் எனக்கும் இன்னும் நல்ல காலம் வரவில்லை நாம் இருவரும் நட்பாக இருப்பதனால் என்னுடைய கெட்டகாலம் உங்களுடைய இலாபத்தையும் கெடுக்கிறது. போய்வருகிறேன் நண்பரே! வணக்கம்!"

"என்ன? என்ன? தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"என் மைத்துனன் சின்னச்சாமி பட்டாளத்திற்குப் போயிருந்தானே தெரியுமா?

"ஆமாம்! அவன் தான் உயிரோடு திரும்பி வந்துவிட்டானே! அனுக்கு என்ன?"

"அவனுக்கு ஒன்றுமில்லை. சுகமாய்த்தான் இருக்கிறான். அவனுடைய பட்டாளத்துக் காப்டன் துரையும் இங்கு வந்திருக்கிறார்..."

"வந்தால் என்ன? அந்தத் துரைக்குக் கார் வேண்டுமாக்கும்!"

'இல்லை அன்பரே! சின்னச்சாமி அந்தத் துரையிடம் போய் தனக்கு வேலை கிடைக்கவில்லையென்று தன் கஷ்டத்தைக் கூறி அழுதானும். அதற்கு அந்தத் துரை வேலைக்கு அலையாதே வியாபாரம் பண்ணு என்று சொன்னாராம். "பணம் இல்லையே" என்றானும் பையன். "பணக்காரன் ஒருவனைக் கூட்டாகச் சேர்த்துக்கொள். நாளை மாலை 4 மணிக்கு ஆவடிக்கு வா! 12 லாட்டுகள் ஏலம் விடுகிறேன். அதில் 2 லாட்டுகள் உனக்குத் தருகிறேன். குறைந்தது 20 ஆயிரம் இலாபம் கிடைக்கும். உன் கூட்டாளிக்கு 10 ஆயிரம் கொடுத்துவிட்டு நீ 10 ஆயிரம் எடுத்துக்கொள். சண்டை நடந்தவிடத்தில் நீகாட்டிய துணிச்சலான வீரச் செயல்களுக்கு இதுதான் எனது பரிசு!" என துரை கூறி அனுப்பி இருக்கிறாராம். இன்றுதான் ஆவடியில் பழைய மோட்டார்கார்களும் சாமான்களும் ஏலம். மணி 4க்கு அங்கிருக்க வேண்டும். இன்னும் இரண்டு மணி

நேரமே இருக்கிறது. இரக்கம் துரையிடம் இருக்கிறது. பணமும் காரும் உங்களிடம் இருக்கிறது. என்னிடமும் பையனிடமும் தரித்திரம் இருக்கிறது. என்னசெய்வது? கார் சரியில்லாததைப் பார்க்கும் பொழுதே நம் இருவருக்கும் காலமும் சரியில்லை என்று தெரிகிறது. ஆளுக்கு பத்தாயிரம் அநியாயமாய் நட்டமாயிற்று என்ன செய்வது? போய்வருகிறேன்.''

"அப்படியா செய்தி! என் இதை முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாது? இங்கேயே இருங்கள் வருகிறேன்."

3

"சரி நண்பரே! புறப்படுங்கள். காரும், பணமும் தயாராய்விட்டது. நேரே ஆவடிக்குப் போகலாமா? வீட்டிற்குப்போய் சின்னச்சாமியையும் அழைத்துக்கொண்டு போக வேண்டுமா?''

"எது? இந்தக் கார்?''

"நம்முடையதுதான்!''

"இரண்டு டயரும் பஸ்டாகி விட்டது எனச் சொன்னதாக நினைவுக்கு வருகிறதே!''

"ஆம். அது முந்தாம்நாள் அல்லவா நடந்தது? நேற்றே புது டயர் இரண்டும் போட்டாயிற்று. இதோ பாருங்கள் இது இரண்டும் தான். புறப்படுங்கள் நேரமாகிறது.

'பெட்ரோல் இல்லை என்று சொன்னீர்களே!''

"ஓ! அதுவா? கிருத்திகைக்கு திருத்தணிக்குப் போவதற்காக பெண்கள் கொஞ்சம் பெட்ரோல் வாங்கி வைத்திருந்தார்கள். அது இப்போது உங்களுக்குப் பயன் படுகிறது! வந்ததும் வேறு வாங்கிக் கொடுத்துவிட்டால் போகிறது. புறப்படுங்கள்!''

"சரி! புறப்பட்டுப் போகலாம். விளக்கில் பல்பு இல்லை என்றீர்களே!''

"பகலில் விளக்கு எதற்கு? இரவில் திரும்ப நேரிடுமோ என்னமோ? என எண்ணிச் சொன்னேன். நாம்தான் $5\frac{1}{2}$ மணிக்கெல்லாம் திரும்பிவிடுவோமே!''

"எல்லாம் சரிதான்! டிரைவர் இல்லையே அதற்கென்னசெய்வது?''

"டிரைவர் எதற்கு? நானே காரை ஓட்டிவருகிறேன். தங்களுக்குக் கார் ஓட்டுவதில் எனக்கு பெருமையும் மகிழ்ச்சியும் உண்டல்லவா?''

"சரி புறப்படுங்கள் போவோம். மனம் உண்டானால் வழியும்உண்டு போலும்!''

4

"காரை தங்கள் வீட்டுப்பக்கம் விடட்டுமா? ஆவடிப்பக்கம் விடட்டுமா?''

"இராமநாதன் வீட்டிற்கு விடுங்கள். சின்னச்சாமியும் அங்கு தான் இருக்கிறான். பெட்ரோல் தேவையில்லையென்றும் சொல்லி விட்டுப் போய்விடலாம் அல்லவா! வீணாகக் காததுக்கொண்டிருப்பார்''

"இதுதானே இராமநாதர் வீடு?''

"ஆம்"

"நான் காரிலேயே இருக்கிறேன். நீங்கள் போய் சொல்லிவிட்டு விரைவாக வந்துவிடுங்கள். பையனையும் அழைத்துவாருங்கள்."

"இல்லை! இல்லை! காரை ஓரமாக நிறுத்திவிட்டு நீங்களும் உள்ளே வாருங்கள்."

"இராமநாதரே! வணக்கம்!

"வணக்கம்! வணக்கம்! வாருங்கள் நல்ல சமயத்தில் இருவரும் வந்தீர்கள். இன்றைக்கு நமது வீட்டில் ஒரு தேநீர் விருந்து! தாங்களும் கட்டாயம் இருந்து இவ்விருந்தைச் சிறப்பிக்கவேண்டும்."

"தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும். நண்பர் அருணகிரியோடு ஒரு அவசர காரியமாக ஆவடிக்குப் போகிறேன். மற்றொரு சமயம் கலந்துகொள்ளுகிறேன். மன்னிக்கவேண்டும்."

"நண்பரே! அவ்வளவு அவசரம் ஆனால், நீங்கள்தான் ஆவடிக்குப் போகவேண்டும். நண்பர் அருணகிரி வரமாட்டார் அவர் இந்த விருந்தில் கலந்துகொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். சொல்லப்போனால் இந்த விருந்தே அவருக்காகத்தான்."

"என்ன? அருணகிரி! இது உண்மையா?"

"ஆம்: உண்மையே! அப்படித்தான் வாக்குக் கொடுத்திருப்பதாக நினைவு வருகிறது."

அப்படியானால் பையன் சின்னச்சாமி! ஆவடியில் துரை! நமக்காகக் காத்துக்......"

"ஆவடியாவது? துரையாவது? லாட்டாவது? இலாபமாவது?

"ஒன்றுமே யில்லையா?"

"என் இல்லை? உம்மிடம் கார் இரவல் வாங்கி வருபவர்களுக்கு 10 ரூபாய் பரிசு வழங்குவதாக நண்பர் இராமநாதன் கூறினார். இங்குள்ள நண்பர்கள் அனைவரும் முடியாது என்று கூறிவிட்டார்கள். நான் மட்டும்ஒப்புக்கொண்டேன். இரவல் வாங்கி வராவிட்டால் நானும் 10 ரூபாய்தரவேண்டும்எனஇராமநாதர் கூறினார். அதற்கும் ஒப்பினேன். இருவரும் பந்தயப் பணத்தை நண்பர்களிடம் கொடுத்துவிட்டோம். ஆனால் ஒன்று. வெற்றி பெற்றவர்களுக்கு தோல்வி யடைந்தவர்கள் அப்பணத்தைக்கொண்டு ஒரு விருந்து செய்வது என்பதுதான் எங்கள் ஒப்பந்தம். அந்தப்படி நடக்கவேண்டாமா? என் வெற்றிக்குக்காரணமாக இருந்த நீங்களும் இந்த விருந்தில் கலந்துகொள்ள வேண்டும். இதுவே எனது ஆசை!"

"ஆம்! ஆம்! நாங்கள் அனைவரும் இதை ஆமோதிக்கிறோம். **மனம் உண்டானால் இடமும் உண்டு** என்பது கார் இரவல்கொடுப்பதற்குமட்டுமல்ல; இருந்து விருந்து உண்பதற்கும் பொருந்தும்! ஆவடியில் போய் 10 ஆயிரம் சம்பாதிப்பதைவிட அன்பர்களோடு இருந்து 10 நிமிடம் கழிப்பதில் உங்களுக்கு அதிகமகிழ்ச்சி இருக்காதா? வெற்றி பெற்ற அருணகிரியை வாழ்த்துவதில் நீங்களும் கலந்துகொண்டால் தான் எங்கள் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். இதுவே எங்களின் தாழ்மையான வேண்டுகோள். **மனம் உண்டானால் இடமும் உண்டு.** அன்பரே! என்ன யோசித்துக் கொண்டு நிற்கிறீர்கள்?"

THE MADURA ... 6454

தமிழ் விரதம்

[அருட்டிரு. சுத்தானந்த பாரதியார்.]

தமிழின் பெருமைகளைப் பேசுவோம் — பழந்
தமிழிற் புதியவொளி வீசுவோம்
தமிழர் ஒருகுலமாய் வாழுவோம் — இளந்
தமிழர் தமிழ்விரதம் பூணுவோம்.

புதிய தமிழுலகைத் தோற்றுவோம் — புவி
புகழக் கலைத்திறமை காட்டுவோம்
முதிய நலங்களெல்லாம் போற்றுவோம் — இன்று
முளைக்கும் அருஞ்சுவைகள் கூட்டுவோம்.

சுற்றியுள்ள நாடுகளை நோக்குவோம் — அங்கே
சொக்கும் புதுமைநம தாக்குவோம்
வெற்றிமுரசுலகெல்லாஞ் சாற்றுவோம் — நாம்
விண்ணுயர ஜயக்கொடி யேற்றுவோம்.

கண்விழித் தெழுந்தோம்

[அருட்டிரு. சுத்தானந்த பாரதியார்.]

கண்கள் விழித் தெழுந்தோம் - மூடக்
கட்டைப் பிளந் தெறிந்தோம்
பெண்கள் தலை நிமிர்ந்தோம் — அஞ்சும்
பேதமை யைக் களைந்தோம்.

கோழைத் தனம் விடுத்தோம் — வீரக்
கோபுரம் போலுயர்ந் தோம்
ஏழையர் பேதை யர்கள் — என்னும்
ஏச்சினி யில்லை யென்போம்...

கற்றுக் கலை வளர்ப்போம் — புதுக்
காதல் உலகமைப் போம்
ஒற்றுமை யை வளர்ப்போம் — எங்கள்
உள்ளன்பு வெள்ளத்தி னால்

வஞ்சப் பழங் கொடுமை — எங்கள்
வாழ்வை யழிக் காமல்
மஞ்சளும் குங்கும மும் — புது
மலரும் கொண் டிருப்போம்.

மானிட வாழ்வி னுக்கே — பெண்கள்
மங்கள சக்தி யன்றோ?
தேனிசை யாழி னுக்கே — பெண்மை
தீவிரத் தந்தி யன்றோ?

அலாவுதீன்

மாயவிளக்கு

பேராசிரியர்:

திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார்

எம். ஏ., எல். டி.

அலாவுதீன்

அரபிக் கதைகளில் அலாவுதீன் கதை ஒன்று உண்டு. ஒரு பழைய விளக்கு இருந்தது. அது மாயசக்தி பெற்றது. அதனைத் தேய்த்ததும் ஒரு பெரிய பூதம் தோன்றும். வேண்டிய வேலை எல்லாம்செய்யும். அரண்மனை கட்டும் எதனையும் தூக்கி வரும். எங்கும் கொண்டு செல்லும். விருந்து வைக்கும். உடைகளை உடுத்தும். பலவகை ஆபரணங்களைப் பூட்டும். இது செய்யாத வேலையே இல்லை! இதன் உதவியால் அலாவுதீன் அரசனுடைய பெண்ணையே மணந்து அரசனாகவே ஆகிவிட்டான். மந்திரக்காரன் செய்த சூழ்ச்சிகளில் இருந்தெல்லாம் தப்பினான். சுருங்கச் சொல்லினால் நாகரீக வாழ்க்கையே அது இட்ட பிச்சை எனலாம். இது கட்டுக் கதை ஆகலாம். ஆனால் இது போல வேலை செய்கிற விளக்கு ஒன்று கிடக்கிறது. எல்லோருக்கும் தெரிந்தது தான் "ஊருக்கு எல்லாம் ஒரு விளக்கு" என்றுகுழந்தைகள்விடுகதைபோட்டு விடுவிக்க வில்லையா?

விருந்து

சூரியன் நமக்கு இடுகிற பெரிய விருந்தினை முன்னரே கண்டோம். பல பல பழங்கள், பல பல கிழங்குகள், பல பல காய்கள், பல பல தானியங்கள், பல பல நிறத்தில் பல பல வடிவில், பல பல சுவையில் வருவது சூரியன் அருள் அல்லவா? பல பல மணமுள்ள பூக்கள், வேர்கள், பூவிலிருந்து எடுத்துக்கட்டும் தேன் கூண்டு, இத்தனையும் சூரியன் பழுக்க வைத்துப் பதம் பார்த்துத் தரும் விருந்தல்லவா? தண்ணீர், வெந்நீர், பனிநீர், தேன் நீர், இன்னும் எத்தனைவகை நீரோ தருகின்றான் சூரியன். என்ன என்ன சூழ்நிலை! என்ன என்ன காட்சிகள்! என்ன என்ன பாட்டுகள்! என்ன என்ன சுடுநிலை! என்ன என்ன குளிர்நிலை! நாகரிகம் மிக்க நாட்டில் எந்த உணவு விடுதியிலேனும்

இத்தனைப் பல வேறு வகையான இன்பப்பொருள்களை ஒரு சேரத் தருவார் உண்டோ ?

வள்ளலுக்கு வள்ளல்

சூரிய வள்ளல் வழங்கும் கொடைகளைப் பேச வேண்டுமா? உலகிலுள்ள பொருள்கள் சூரியன் உடலிலிருந்து பங்கிட்டுக் கொண்டு வந்தவை அல்லவா? ததீசி முனிவர், தம்முடைய முதுகு எலும்பினையே இந்திரனுக்கு வச்சிராயுதமாக உதவினாராம். சூரியனாரோ தம் உடலையே பூமிக்குப் பங்கிட்டுக் கொடுத்து இருக்கிறார். நவமணிகளும் பல வகை உலோகங்களும், அவர் இட்ட பிச்சையே. பருத்தியும், பட்டும், கம்பிளியும், நார்ப்பட்டும் அவரின்றி உலகில் கிடைக்குமா? ஆடையும் அணிகலன்களும் அவர் வாரி இறைத்தனவே; வாரி வாரி இறைக்கின்றனவே; வாரி வாரி இறைப்பனவே.

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது.

வள்ளலுக்கு வள்ளலானால் தொண்டருக்கும் தொண்டரே. தாய்த் தொண்டினும் சிறந்த தொண்டினையே சூரியனார் செய்கின்றார். அவர் அன்றி ஓர் அணுவும் அசையாது. பகல் எல்லாம் விளக்கு எரிப்பார். இரவு எல்லாம் அவருடைய எதிர் ஒளி விளக்கு எரிக்கும். நமக்கு விசிறி வீசுவது போலக் காற்று வீசுபவரும் அவரே. கடல் நீரை மிக உயரத்திற்குத் தூக்கிச் சென்று ஏற்றக் கோலில் நீர் இறைப்பது போலத் தண்ணீர் இறைப்பவரும் அவரே. காந்த சக்தியும் மின்சார சக்தியும் உலகில் இயங்கி வருவதற்கு அவரே பெருந்துணை. கரியாலும், மண்ணெண்ணெயாலும் எந்திரங்கள் ஓடுகின்றன என்றால் அந்தச் சக்தி எல்லாம் அவரிடத்திலிருந்து வந்தன அன்றோ? ஒலி என்ற சக்தியும் அவர் படைத்த காற்று மண்டலத்தைத் தாண்டிக் கேட்பது எங்கே! அதற்கு அப்பால் எல்லாம் பெரும் மவுனந்தான்.

உலகுக்கு ஒரு விசிறி

இந்தக் கருத்துக்களை மேலும் சிறிது ஊன்றிப் பார்த்து உண்மை அறிவது உள்ளத்திற்கே பெரு மகிழ்ச்சி தருவதாம். கட்டுக்கதைகளை எல்லாம்விட விஞ்ஞான உண்மைகள் மிகப் பெரிய வியப்பை விளைவிப்பனவாம். அடுத்து இக் கருத்துக்களில் "உலகுக்கு ஒரு விசிறி" என்கின்ற விடுகதையை விடுவிக்க முயல்வோமாக.

எல்லாவிதமான
ஸ்டேஷனரி முதலிய
ஷாப் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லரை
யாகவும் விலை சகாயமாக
கிடைக்கும்.

நா. கா.
செய்யது ருவுத்தர் ஷாப்
Pros: நா. கா. செ. மு. ஸன்ஸ்,
நிர். 82, கீழாவணிமூலவீதி,
மதுரை.



கோபுரம் மார்க்
தீப்பெட்டிகளையே
உபயோகியுங்கள்

தயாரிக்குமிடம்;-
K. S. S. அய்யாசாமி,
விருதுநகர்.

எல்லாவிதமான கலர்,
ஆப்டோன்
லைன் பிளாக்குகள்
தயாரிக்குமிடம்

M. C.

அப்பாசாமி செட்டி
அன்கோ.,
ஜோன்ஸ் தெரு,
மண்ணடி, மதராஸ்.

ANNOUNCING

Having completed a New (Life) business of

Rs. 10,26,60,070 — in 1948

Against a New Business of

Rs. 9,04,14,458 — in 1947.

THE NEW INDIA ASSURANCE CO., LTD.,

Life, Fire, Marine, Accident.

4/5, First Line Beach,
MADRAS-1.

K. GANAPATHI,
Branch Manager.

"தேராத் துணிவும் தெளியாத தேற்றறவும் ஓர உணர்வினருக் குப்பு"

[நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.]

விருப்பு வெறுப்பின்றி நடுநிலையில் ஆராய்ந்துகண்ட உண்மையைக் கடைப்பிடிப்பது அறிஞர் இயல்பு. ஆராய்ந்து தேராமல் எதையும் துணிதலும், கொண்டதை விடாத பிடிவாதமும் அறிவின் மறுதலைப் பண்பினர் தன்மையாகும். ஐயம் அகற்றித் தெளிவு தருவது அறிவு. தீர ஆராயாமல் துணிதல் ஓர உணர்வாம். நிரம்பப் படித்தவரும் தெளியாமல் துணிந்து, விரும்புவதை ஒருதலையாகக் கொள்ளுவதை நாம் பார்க்கலாம். படிப்பு பதவி நடிப்பு எதுவும் நடுவுநிலையறிவும், உண்மையில் ஆர்வமும் உதவாது பதவியும் படிப்பும் உடைய பெரியாரும் நடுவின்றி விபரீத உணர்வுடன் அடியற்ற தவறான கொள்கைகளைக்கொண்டொழுகக் காணுகிறோம். நடப்பில் ஒன்றிரண்டு செய்திகளை உதாரணமாக எடுத்துக் காட்டுவேன்.

ஆண்டு தோறும் கோடையில் நான் குளிர்ச்சி தரும் மலைவாசம் வேண்டி அலைவதுண்டு. 1936 சித்திரையில் கோட்டகிரி என்னும் சீறூருக்குச் சென்றிருந்தேன். அங்கே பலதுறையில் புலமைநிறைந்த கலைஞர் சிலரைக் கண்டு, அவரொடு சல்லாபித்து மாலை தொறும் உலவலானேன். ஒருநாள் முன்பழகாத பெரியார் ஒருவரை வழியில் சந்தித்தோம். என்னொடு வந்த ஸ்ரீ இராமச்சந்திர தீக்ஷிதர், அப்புதியரை, சர்க்கார் வழக்கறிஞராயிருந்து அப்போது சென்னை உயர்மன்ற நீதிபருள் ஒருவரும், நிரம்பிய வடமொழி வித்தகருமான ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயங்கார் என்றெனக்கும், என்னை அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பகுதித் தலைவர் என்று அப்பெரியாருக்கும் அறிமுகப்படுத்தினர். அவ்வளவில் என்னொடு முன் பழகாத அப்பெரியார் திராவிடரான தமிழரை வானரர் என்று வான்மீகி கூறுவதைக் கம்பன் எப்படிச் சொல்லுகிறான் என்று கூசாமல் என்னைக் கேட்டார்கள்.

கான் பெரிதும் வியப்பும் சிறிது வெறுப்பும் அடைந்தேன். என் உணர்ச்சி எனக்கடங்காமல் என் மறுமொழியில் வெளிப்பட்டது. "ஆரியம் ஆங்கிலம் இருமொழிகளும் கற்றுத் தேர்ந்த தங்கள் கேள்வியின் நோக்கம் விளங்கவில்லை. இப்பெரிய நாட்டில் வட ஆரியரும் தென்தமிழரும் தவிர நெட்டிடை நிலப்பரப்பில் இன்னும் எத்தனை இனத்தினர் இருப்பவர் என்று அறியவிரும்பாமல், ஆரியப்பார்ப்பார் அல்லாதார் எல்லாரும் தமிழர் எனத் துணிவதால், ஆங்கில நூலறிவு பயன்படாமை விளங்குகிறது. அது மட்டுமல்ல. வான்மீகர் காவியத்தையும் ஆராய்ந்து பாராமல் பேசுவதால் தங்கள் வடமொழிப்பயிற்சியும் பயன் தரவில்லை என நினைக்க நேருகிறது. பம்பை தாண்டினதும், இராமர் கிட்கிந்தை மலையும் காடும் அங்கே தங்கும் வானரர் வாழ்வும் காணுகிறார். பிறகதன் தெற்கே மாந்தர் பலர் வாழ்ந்த பல காடு-மலை-ஓடும் நதி-நாடுகள் கடந்து கடைசியில் சீரும் செல்வமும் செழிக்கக் கொழிக்கும் கோதாவிரி முதலிய யாறுகளும், மலையம்போன்ற மலைகளும், நீர்நிலைகள், நெடுவயல்கள், தொடர்சோலை, கடல் வளங்கள் நிறைந்த பல ஊர்களை உடைய உயர் நாகரீகர்வாழும் தமிழ்நாடு எது என்று வ்ான்மீகர் கூறுகிறார். வேண்டுமானால் அப்பகுதிகளைக் குறித்துத் தரலாம். விருப்பு வெறுப்பில்லாமல் சினவாத மனதோடு திரும்பவும் வான்மீகர் காவியத்தைப் படித்துப் பாருங்கள்" என்று வற்புறுத்தினேன். புதிய பெரியார் வெறுப்போடு வெதும்பி விலகிப் போனார். மயங்கிய தீக்ஷிதருக்கும் உண்மை வரலாற்றை விளக்கி விடைபெற்றேன். சில நாட் சென்றபின் தீக்ஷிதர் என்னைச் சந்தித்து நான் சொன்னபடியே வான்மீகத்திலிருப்பதாய் ஒப்புக்கொண்டு, ஆழ்ந்து ஆராயாமல் நீதிபர் உண்மையுணர வேண்டியே கேட்டிருக்கலாம் என்று மழுப்பிப்போனார்.

ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் ஆரிய ஆங்கில சட்டக் கலைகள் எல்லாம் நன்றாய்ப் படித்துத்தேறி, உயர்ந்த நீதிபதிப் பதவியும்பெற்ற பெரியவர். அப்படியிருந்தும் தமிழரைவானரராக்கி, வான்மீகர் சொல்லாததோடு, சொன்னதற்கு முற்றிலும் மாறுகக் கற்பனைக் கதையை மெய் எனத் துணிந்து பேசும் மனப்பான்மையை என்னென்பது. இது நிற்க

அவரினும் அகன்றாழ்ந்த பன்மொழி நன்னூல் படிப்பும் நிரம்பி, உலகம் புகழும் வித்தகராய் விளங்கும் ஸ்ரீ பண்டித ஜவாகர் அவர்களே இந்த அடியற்ற அபாண்டக் கொள்கையை ஆராயாமலே உடன்பட்டு வெளியிடுவர் என்றால், ஆய்ந்து தேராமல் துணிபவர்பால் வாய்ந்த இப்பிழையின் விளைவாய் வளரும் பகை பிணக்குகளின் கேட்டுக்கு எல்லையில்லை.

கோட்டைகிரி நிகழ்ச்சிக்குப் பின் ஸ்ரீமான் ஜவாகர்லால் அவர் திருமகளார்க்கு நிருபங்கள் எழுதி உலக வரலாறு கூறும் புத்தகத்தை (History of the world) பார்த்தேன். படித்தேன். அதில் அவர் தென்னாட்டுத் திராவிடர் வான்மீகரால் வானரர் எனச் சுட்டப்படும் ஒரு அநாகரிக வகுப்பினர் என்று எழுதியிருப்பதைக் கண்டேன்; வியந்தேன். தென்னாட்டு வடகலை ஐயங்கார் தன் கருத்தை தனித்த சல்லாபத்தில் வாயால் வெளியிட்டார். அதன் தீமை கேட்டவர் மாட்டோடுகழியும். வடநாட்டுப் பண்டித நேருஜி தன் புத்தகத்தில் அழியாத எழுத்தால் அதே அபூதக் கற்பனை ஆபாசக்கொள்கையை ஆயாமல் வாய்மை போலப் பொறித்துப் பரப்புகிறார்.

ஆந்திரப் பார்ப்பனர் அறிஞர், டாக்டர். ஸர். இராதா கிருஷ்ணன் அவர்கள், தமது இந்திய தத்துவ விளக்க நூலில், "கோபிகாலோலனான" கோபால கிருஷ்ணன் "லீலாவிநோத" ஒழுக்கத்திற்கு நாணுகிறார். அது அவர் சதாசார மதிப்புக்குச் சான்றாகும். ஆனால் கண்ணன் இழுக்கத்தை வெறுக்கும் அறிஞர், அவனைத் திராவிடர் கடவுள் எனவும், ஆரிய அறிஞர் அக்கருப்பனை வெள்ளை பூசி, அவன் இழிதகவுகளை மறைத்து, கடவுள் நிறமேற்றி ஓரளவு மாற்றினர் எனவும் பெருமிதப்படுவது நமக்கு வியப்பும் நகைப்பும் விளையாதிராது. பாரத பாகவத ஆரியப் புராணங்கள் எல்லாம் அவர் கொண்டாடும் அபூத தெய்வப் படைப்புக்கு மாறாக, நம்பி வெள்ளைப் பலராமனுக்குத் தம்பி நிரந்தரக் கருப்பன் எனவே உருவிலும் ஒழுக்கிலும் ஆரிய கண்ணனின் சீரிய வண்ணத்தைச் செப்புகின்றன. அறிஞரின் அதிசயோக்திக்கு அவர் வெறுப்பும் வெட்கமும் தவிரப் புராண ஆதரவு யாதுமில்லை. "பழி சுமக்கத் திராவிடரும், பெருமைக்

குரிமை உடையார் ஆரியரும் ஆவர்'' எனும் சில பார்ப்பனர் மனப்பான்மைக்கு இதுவும் ஒரு சான்ருகும்.

இவர் மூவரும் பிராமணராயினும், மூவருள் இருவர் திராவிடர். மூவரும் படிப்பாலும் பதவியாலும் ஒப்பற்றுயர்ந்த வித்தகர். இவர்களே ஒரு பெரிய பழைய மக்கட்சமுதாயத்தை எண்ணுமல் இழித்துப் பழிக்க இசைந்தனர் என்ருல், மற்றவரின் மனஇயல்பு என்னுகும்?

நடுநிலே அறிவுக்கும் படிப்புக்கும் இன்றியமையாத தொடர்பில்லே. நேர்மை நடுநிலே அறிவால மட்டும் நிலேபெறும். அவ் அறிவு உண்மைதேரும் ஆராய்ச்சியாலன்றி வாராது. அதனுல் புலவர் நேர்மையொடு உண்மையில் ஊன்றிய ஆர்வமும் உளராகப் பயில முயலவேண்டும்.



விருதுநகர்

ராஜன் ★

★ சோப்பு

சலவைக்கு சிறந்தது.

கலையும் காதலும்

"புதுவை சுப்பிரமணியன்"

அப்போதுதான் போட்டு முடித்த சித்திரத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான் வழுதி. சித்திரம் நன்றாய் அமைந்திருக்கிறது என்பதற்கறிகுறியாக அவன் கண்கள் ஒருமுறை அகல விரிந்தன. குழவி ஈன்ற தாயின் பூரிப்பு அவன் உள்ளத்தில் நிலவியது.

தெருவில் யாரோ ஒருத்தி "மருவல்லிக் கிழங்கூ" என்று கூவிச் சென்றாள். அதைக்கேட்டதும்தான் வழுதிக்குத் தான் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாதது நினைவிற்கு வந்தது; பசியின் வேதனையும் உணர முடிந்தது.

படத்தைப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டுத் தெருவிற்குச் சென்றான். எதிர்ப்புறத்திலுள்ள வேப்பமரத்து நிழல் அவன் குடிசை வாயிலைத் தொட்டுக் கொண்டிருந்தது. "அட! மணி மூன்றாய் விட்டதே' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் அவன். மரத்தருகில் வியர்வை வழியும் முகத்தைத்துடைத்துக்கொண்டு கிழங்கு விற்கும் கிழவி நின்றிருந்தாள்.

வழுதியைக் கண்டதும், "வழுதி! எவ்வளவுக்கப்பா வேணும்" என்று குறிப்பறிந்து கேட்டாள் கிழவி.

"நீதானா பாட்டி! எங்கே இரண்டணாவுக்கு எடு" என்றான் அவன்.

வெகு நாட்களாக அவள், அவனுக்குப் பழக்கமானவள். அந்தக் கிராமத்தில் ஒரே ஒரு உணவு விடுதி இருந்தது. வழுதி அங்குத்தான் போய்ச் சாப்பிடுவது வழக்கம். ஆனால், சோறு புசித்துத்தான் பசியாற்றிக் கொள்ளவேண்டும் என்ற கட்டாயத்தை அவன் வைத்திருக்கவில்லை. கனியோ, கிழங்கோ, காயோ தின்று கூட சும்மா இருந்துவிடுவான்.

வழுதி, கிழங்கை வாங்கிக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தான். சுவரில் மாட்டியிருந்த அவனது பாட்டியின் படம் அவனைக் கண்டு நகைப்பது போலிருந்தது.

பாட்டியிருந்தால், காலையி லிருந்து சாப்பிடாத அவனை, இவ்வாறு கிழங்கைச் சாப்பிட விட்டிருப்பாளா? "ஏண்டா வழுதி! இப்படியே நீ காலையிலி ருந்து சாப்பிடாதிருந்தால் உடம்பு என்னத்திற்காகும்? சாப்பிட்டபின் உன் வேலையைப் பாரேன்" என்று எத்தனைமுறை அன்போடு கடிந்து அழைத்தி ருப்பாள்.

அந்தப் பாட்டி இப்போது இல்லை. "வழுதி! நான் இன் னும் இருக்கமாட்டேனப்பா! இன்றோ, நாளையோ என்றிருக்கி றது என் ஆயுள்" என்று அடிக் கடி சொல்லிவந்த வாக்கைமெய்ப் பித்துவிட்டுச் சில நாட்களுக்கு முன்னேதான் இறந்துவிட்டாள்.

இரண்டுவயதிலேயே தாயை யுந் தந்தையையுமிழந்து அநாதை யாகிய வழுதியை அவள்தான் வளர்த்தாள். இந்த இருபத்தி ரண்டு ஆண்டுகளும் அவனுக்குத் தாயுந் தந்தையுமாயிருந்து கண் ணைப்போல் காப்பாற்றியவள் அவள்தான்.

பேரன் படித்துப் பட்டம் பெற்றுப் பணம் தேடவேண்டு மென்பது பாட்டியின் ஆவல். அவனோ, கல்வியில் அதிகக் கவனம் செலுத்தவில்லை.

ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது அவன் கை ஏதாவது கிறுக்கிக் கொண்டிருக்கும்.

ஆசிரியர் கண்டித்துப் பார்த் தார். பாட்டி திருத்தமுயன்றாள். படம் போடுவதில் அவனுக்கி ருந்த ஆர்வம் பாடம் படிப்பதி லில்லை.

அவன் ஆர்வத்தைத் தூண்டி விடுவதற்கென்றே அமைத்தது போலிருந்தது அந்தக் காட்டுப் பாக்கம். சுற்றிலும் சிறுகுன்று கள்; வளமான வயல்; நற்றும ரைக்கயங்கள்; பளிங்குநீர் வாய்க் கால்கள்; தோப்புத் துரவுகள். இத்தகைய இயற்கைச் சூழல் ஓவியக்கலையில் அவனுக்கிருந்த ஆர்வமென்னும் நெருப்புக்கு நெய்யாய் அமைந்தது.

மாலை வேளைகளில் குன்று களின் மேலமர்ந்து தன்னை மறந்து இயற்கையை அனுபவிப் பான் வழுதி. பொன் தகட்டால் சூழப்பட்டு மலைகள் நகர்வது போல் வானில் ஊர்ந்து செல்லும் கருமுகிற் கூட்டங்களில் மனத் தைப் பறிகொடுத்து நிற்பான். பச்சைப் பட்டாடை விரித்தது போன்று கண்ணுக்கெட்டிய தூரம் பரந்துள்ள பசும் வயல்க ளில் பார்வை செலுத்தி நிற்பான். நிலவு பொழியும் இரவிலே வேங்

தனது அரண்மனையைச் சுற்றி நிற்கும் காவலாளிகள் போல், அக் கிராமத்தைச் சுற்றி நிமிர்ந்து நிற்கும் குன்றுகளின் காட்சியைக் கண்டு களிகொண்டு நிற்பான். காலையிலெழும் கதிரவனொளியால் தனியழகொடு மிளிரும் தாமரையைக்கண்டு தன்னை மறந்து நிற்பான்.

இப்படிப்பட்டவன்தான "நாலெழுத்துக்கற்றுநல்லதொரு வேலையிலமர்ந்து நாலுகாசு சம்பாதிக்கவேண்டு" மென்ற பாட்டியின் ஆவலை நிறைவேற்றப் போகிறன்.

பாட்டி அடிக்கடி சொல்வாள்: "வழுதி, இப்படியே சிறுபிள்ளையாட்டமா படம்போட்டுக்கிட்டேயிருந்தால் பின்னால் எப்படித்தான்பிழைக்கப்போறியோ!" அவன் அதைக் காதில் வாங்கிக் கொண்டால் தானே! அவன் பாட்டில், ஒவ்வொருநாளும் ஏதாவதொரு படம் போட்டு அந்த இன்பத்திலே திளைத்தான்.

இவ்வாறு வளர்ந்த அக்கலை இப்போது அவனிடம் முழுமை பெற்றிருந்தது. கலைச்செல்வி அவன் விரல்களில் நிரந்தரமாகக் குடிகொண்டுவிட்டாள். நினைத்த மாத்திரத்தில் எதையும் தீட்டத் தக்க ஆற்றல் பெற்றுவிட்டான் அவன்.

நாடு முழுதும் அவன் ஓவியங்களைப் புகழ்ந்தது. நாடக சபை நிர்வாகிகள் திரைச்சீலைகள் எழுதித் தருமாறு வேண்டினர். ஆலயக்காப்பாளர் ஏற்ற ஓவியங்கள் தீட்டித்தருமாறு தூண்டினர். செல்வந்தர்கள் வீடுகளை அலங்கரிக்கத்தக்க படங்கள் போட்டுத் தருமாறு அவனை அண்டினர்.

இதற்குக் காரணம், வழுதி இயற்கைக் காட்சிகளை வரைந்ததோடன்றிப், புராண வரலாற்றுத் தொடர்புள்ள சித்திரங்களையுந் தீட்டியதுதான்.

காலையில் உருப்பெற்ற ஓவியம் கண்ணகி வழக்குரைத்த காட்சியைச் சித்திரிப்பது. அவன் சிலப்பதிகாரத்தைக் கற்றறிந்தவனல்ல. ஆயினும் கண்ணகி, மணிமேகலை முதலாயினோர் வரலாற்றை ஆசிரியர் அவ்வப்போது கதைகளாகச் சொல்லியிருக்கிறார். அவற்றை நினைவு கூர்ந்து அவன் அகக் கண்ணில் விரிந்த படத்தைத்தான் அப்படியே தீட்டியிருந்தான்.

கிழங்கைப் புசித்து முடித்தான் வழுதி.

மீண்டும் போய்த் தான் போட்ட ஓவியத்தை எடுத்துப் பார்த்தான். பிறகு, அதனை எடுத்துக்கொண்டு பழமலையிலுள்ள அவன் மாமா குழந்தைவேலரின் வீட்டுக்கு கிளம்பிவிட்டான்.

2

பங்களாத் தோட்டத்துப் பூச்செடிகளைப் பார்வையிட்டுவிட்டு அப்போதுதான் கூடத்துக்கு வந்தாள் குழலி. அவள் அப்பா குழந்தைவேலர் இன்னும் குறட்டைவிட்டு உறங்கிக்கொண்டிருந்தார். கூடத்துச் சுவரில் தனியே மாட்டியிருந்தது ஒரு படம்.

சோழன், கொலுமண்டபத்தில் கெம்பீரமாக வீற்றிருக்கிறான். மாதவி நடனத்தை அரங்கேற்றுகிறாள்.

அதுவும் வழுதி எழுதியதுதான். அதைப் பார்த்துச் சற்று நேரம் நின்றாள் குழலி. குளம்போலிருந்த கடல் திடீரென்று கொந்தளித்தெழுவது போல், களங்கமற்றிருந்த அவள் முகம் கவலைக்குறிகள் தோற்றுவித்துச் ''சட்''டென மாறுபட்டது. அமைதி இழந்தவளாய்த் தன்னறைக்குட் புகுந்தாள்.

வழுதி அவளுக்குத் தூர உறவினன். எவ்வகையிலோ அத்தான் முறையாக வேண்டும். குழலியின் குடும்பம் பழமலைக்கு வந்தபின், வழுதி அவள் வீட்டுக்கு அடிக்கடி வந்துபோவது வழக்கம்.

குழலி, விளையாட்டுப் பருவத்தில் ஒருமுறை அவனைப் பார்த்திருக்கிறாள். அப்போது அவன் இவ்வளவு ஆற்றல்வாய்ந்த கலைஞனாக, இவ்வளவு அழகு வாய்ந்த இளைஞனாக இருப்பானென்று அவள் நினைக்கவில்லை.

முதல் முறையாக அவன், வீட்டுக்கு வந்தபோது அவள் திகைத்துவிட்டாள். சுருண்ட மயிர்க்கற்றை; செவ்விய மேனி; கட்டமைந்த உடல்; எளிய உடையணிந்து ஒப்பற்ற அழகனாக விளங்கினான் வழுதி.

அவன் எடுத்துவந்த ஓவியத்தைக் கண்டதும் அவளுக்கு ஒரே வியப்பாய்விட்டது. அவளுக்கும் ஓவியக் கலையில் சிறிது ஈடுபாடு உண்டு.

அதனால்தானோ என்னவோ அப்போதே உள்ளத்தை அவனிடம் பறிகொடுத்துவிட்டாள்.

ஒவ்வொரு முறையும் அவள் வீட்டுக்கு வரும்போது வழுதி

தான் தீட்டிய சித்திரம் ஏதாவ தொன்றை எடுத்து வருவான். அச்சித்திரங்கள் வழுதியிடம் அவளுக்கிருந்த மதிப்பை அதி கப்படுத்தின. அவளிடம் முளை விட்ட காதற்பயிரையும் வளர்த்து வந்தன.

ஆனால், அவன் இதுவரை அவளிடம் பேசியதில்லை. தன் னிடம் பேசமாட்டானா, தன்னை ஆவலோடு நோக்கமாட்டானா, என்று குழலி ஏங்கியிருக்கிறாள். அவ்வாறொன்றும் நிகழாதது தான் அவள்மனத்தைவாட்டியது. அன்றொருநாள் அவன் வந்தான். அவள் தனியேதான் இருந்தாள்.

வந்தவுடனே, "மாமா இல் லையா?" என்று கேட்டான் "இல்லை; அம்மாவோடு கடைக் குப் போயிருக்கிறார்" என்றாள் அவள்.

அவனை ஏறெடுத்துப் பார்க் காது அவன் திரும்பிவிட்டான்.

இதன் பின்னர்தான், அவனை நேரிலேயே கேட்டுவிடு வது என்று துணிவுகொண்டாள் குழலி.

இன்று பௌர்ணமி. அவன் சொல்லிச் சென்றதுபோல் கண் டிப்பாக வருவான். வந்தால் எப் படிக் கேட்பது?

காகிதம், பேனா எடுத்தாள்.

"காதல்" என்றெழுதினாள். சே! காதல் என்றா துவக்குவது? அக் காகிதத்தைக் கிழித்தெறிந் தாள்.

"அன்புள்ள அத்தான்!"... மீண்டும் யோசனை.

"நானா கடிதம் எழுதுவது? முறை இல்லையே."

பின், எவ்வாறு என் உள்ளக் கிடக்கையை அவர் அறிய முடி யும்; பிறகு அவர் என்னை ஏற் றுக் கொள்ளாவிட்டால் நானல் லவா தவறுசெய்தவளாவேன்..."

மூன்றாம் முறையாகப் பேனாவை எடுத்தாள்.

"அத்தான்!

பொறுமை இழந்த பின்னர் எழுதுகிறேன். உங்களை...... என்...இல்லை; இல்லை; உமது படம் என் மனத்திரையில் என் றும் அழியாதவாறு பதிந்து விட்டது. என்னை......ஏற்றுக் கொள்வீர்களா?......

அவள் முடிக்கவில்லை. கதவு தட்டும் சப்தம் கேட்டது. எழுந்து சென்றாள்.

விழித்துக்கொண்ட அவள் தந்தை கதவு திறக்கச்சென்றார்.

சிறிதுநேரத்தில் வழுதியும் அவள் அப்பாவும், வட்டமேசைக் கருகில் எதிர் எதிராக வந்து உட்காருவதை அவள் கதவிடுக்கு வழியாகக் கண்டாள். தான் கொண்டுவந்த ஓவியத்தை மாமா விடம் காட்டினுள் வழுதி.

அதைவிட இது நன்ருய் இருக்கிறது வழுதி" என்று மாதவியின் படத்தைக் காட்டிச் சொன்னுர் குழந்தைவேலர்.

"அதற்குப் பக்கத்திலேயே இதை மாட்டிவிடுங்கள், மாமா!" என்ருன் வழுதி.

ஆமாம்! பொருத்தமாய்த் தான் இருக்கும், சோழன் அரண் மனையில் மாதவிநடனமாடுவதும், பாண்டியன் அரண்மனையில் கண்ணகி வழக்குரைப்பதும்!", ...அது சரி! நீ சாப்பிட்டாயா?"

"கிழங்கு சாப்பிட்டேன் மாமா!"

"என்ன வழுதி! வேளா வேளைக்குச் சாப்பிடாது உடம் பைக் கெடுத்துக் கொள்கிருய்! பார்! முன்னைவிட இப்போது இளைத்துவிட்டாய்,"

அதற்குள் அவர் மனைவி இரு வருக்கும் பலகாரங் கொண்டு வந்து வைத்தாள். அவர்கள் புசிக் கத் தொடங்கினர்.

"வழுதி! என்னவோ ...... அந்த நாடகநிர்வாகி உன்னிடம் வந்து ...."

"ஆமாம் மாமா! இரண்டு திரைச் சீலைகள் எழுதித் தரு மாறு பணித்தார்"

"முடியாதென்று சொல்லி விட்டாயாமே"

"வேறென்ன! வேண்டும் போது, வேண்டிய சித்திரங்கள் எழுதித் தருவதற்கு என்னுல் முடியாதென்று சொலலிவிட் டேன்."

இருவரும் சாப்பிட்டு முடித் தனர்; கையலம்பத் தோட்டத் திற்குச் சென்றனர்.

இதுவரை கதவருகிலேயே தவங்கிடந்த குழலிக்குப் பெருத்த ஏமாற்றமாயிருந்தது. சாப்பிடும் வரை வழுதியையே பார்த்துக்கொண்டு நின்றிருந் தாள். அவன் மறைமுகமாக அவளை நோக்க வேண்டும்; அவள் நாணித் தலை குனிய வேண்டும்; அந்த இன்ப வெள் ளத்திலே மிதக்க வேண்டும்; இது அவளது நிறைவேருத விருப்பம்.

வழுதி கொண்டு வந்த சிறு பை மேசையின் மேல் கிடந்தது. குழலி என்னவோ நினைத்துக் கொண்டு ஓடினுள். அவள்

எழுதிய இரண்டு வரிக் கடிதத்தை அந்தப் பைக்குள் கொண்டு வந்து போட்டாள்.

"ஐயையோ! வழுதி அதை இங்கேயே பிரித்து விட்டால் ... ." சட்டென்று நின்ருள்.

இன்னும் அவர்கள் வரவில்லை; தோட்டத்துக்குப் போயிருக்கலாம்.

கடிதத்தை அப்படியே வைத்துவிடுவதா? எடுத்து விடுவதா?

விடை காணுது தவித்தாள் குழலி.

கடைசியில் வழுதியே வந்து விட்டான்; தனியே தான் வந்வந்தான். கொஞ்சமும் தாமதியாது பையை எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டான்.

குழலிக்குப் பெரிய பாரத்தை இறக்கி வைத்ததுபோலிருந்தது. ஆயினும் போராட்டம் ஓயவில்லை.

"அவர் என்ன நினைத்துக் கொள்வாரோ........... தவருகப் பொருள்செய்து கொண்டால்... இல்லை; ஏற்றுக்கொள்வாரோ..."

3

மாடிச் சன்னற் கதவுகளில் பதித்த வண்ணக் கண்ணுடிகளினூடேவந்த ஞாயிற்றின்கதிர்கள் வீட்டு முன்றிலில் பல நிறங்களைத் தோற்றுவித்து அணிசெய்தன. குழலி, கூடத்திலமர்ந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய அப்பாவும் அம்மாவும் கோயிலுக்குச் சென்றிருந்தனர். மனதிலே எண்ணங்கள் அலைமோதின.

"கலைஞராம் கலைஞர்! இரக்கமற்ற நெஞ்சுபடைத்தவர்! காலடியிலே விழுந்து காதற் பிச்சை கேட்கிருள் ஒருத்தி! கவனியாது நிற்கிருரே!... என்னைப் பார்க்கவே கண்கூசுகிறது போலும்...!"

"மாமா!" வழுதியின் குரல் தெளிவாகக் கேட்டது. அவள் வந்து கதவைத் திறந்தாள்.

"மாமா இல்லையா?"

"உள்ளே இருக்கிருர்"... எங்கிருந்துதான் அவளுக்குப் பொய் சொல்லத் துணிவு வந்ததோ!

அவன் உள்ளே வந்தான். அவள் கதவை மூடித் தாளிட்டாள்.

"என்ன குழலி! விளையாடுகிருயா?"

"இருங்கள்! இதோ சீக்கிரம் வந்துவிடுவார்கள்" சிறிது

நேரம் மௌனம் நிலவியது. அவள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, இதழ்க்கடையில் முறுவல் தவழ, கடைக்கண்ணுல் அவனை நோக்கினுள். அவனே, சுவரில் மாட்டியிருந்த அவனது சித்திரங்களைப் பார்த்தவண்ணமிருந்தான்.

"கண்ணகியின் கண்கள் கோபப் பிழம்பாய் விளங்குவதையும், அதைக்கண்டு அரசி, மன்னனின் பின் ஒடுங்குவதையும், நேரில் போய்ப் பார்த்தவரைப் போலத்தான் எழுதியிருக்கிறீர்" என்ருள் குழலி.

அவன் சிரித்துக் கொண்டான். மீண்டும் அமைதி குடி கொண்டது.

"அத்தான்....!" குரலைத் தாழ்த்திக்கொண்டு அழைத்தாள் குழலி.

"என்ன குழலி!" அவன் பரிவோடு கேட்டான்.

"உம்மை...நான்......"

"போதும்! புரிந்துவிட்டது. குழலி! அந்த இடத்திற்கு நான் உரியவனல்ல! செல்வமும் மதிப்பும் நிறைந்த சீமானின் புதல்வனுக்குரிய இடத்திற்கு குடிசையில் வாழும் இந்த ஏழை மகன் ஆசைப்படவில்லை."

"அப்போது ஆடம்பரத்திற்குஆசைப்பட்டவளா நான்"?

"உன் பெற்ருேரின் விருப்பம் அப்படித்தானே இருக்க வேண்டும்!"

"காதல் யார் விருப்பத்திற்கும் கட்டுப்பட்டதில்லையே."

"குழலி! வெளிப்படையாகவே சொல்கிறேன். நீ கேட்பது "கலை வேண்டுமா நான் வேண்டுமா" என்பது போலிருக்கிறது.

"கலையை அழித்துவிடும் கருவி என்று நினைத்துக்கொண்டீரா என்னை!"

உன்னைச் சொல்லவில்லை. அப்போதைய சூழ்நிலை அழித்துவிடும். குழலி! நான் கலையை உயிரினும் மேலாக மதிப்பவன். குடிசையே மாளிகையாகவும் குக்கிராமமே நகரமாகவும் கருதி வாழ்பவன். சிலசமயம் பசியை மறந்து திரிவேன்; உறக்கத்தையும் மறந்துவிடுவேன். இந்நிலையில் செல்வத்திலே வளர்ந்த நீ என் வாழ்க்கையோடு உன்னுடையதைப் பிணைத்துக்கொண்டு என்ன இன்பங் காணப்போகிருய்?"

"விருப்பத்திற்கு மாருக வேருெருவரை மணந்து மட்டும்

என்ன இன்பங் காணப்போகி றேனும்''

"இவ்வளவு தூரம் நீ என்னை விரும்புவதாயின் நான் அதற்குத் தடை கூறவில்லை. ஆனல்... இன்ப ஏணியிலே ஏறப்போகி ருேம் என்று நினைத்திருப்பாய். துன்பத்தை விலை கொடுத்து வாங்குகிருய்."

"மனதுக் கிசைந்த மணுள ரின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளப்போகிறேன் என்று சொல்லுங்கள்"

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை

பிறகு வழுதி, "சரி குழலி! மாமா இப்போது வரமாட்டார் போலிருக்கிறது! நான் வருகி றேன்" என்று சொல்லிப்போய் விட்டான்.

நீண்ட பெருமூச்சுடன் நாற்காலியிலமர்ந்தாள் குழலி. பெரியதொரு காரியத்தைச் செய்து முடித்துவிட்டதுபோலி ருந்தது அவள் மனநிலை. வழுதி யோடு சேர்ந்து வாழ்க்கை நடத்த ஏனே அவளுக்கு அவ்வளவு ஆவல்!

4

இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. குழலி வழுதியின் மனைவியாகிவிட்டாள்.

அத்தானைத்தான் மணந்து கொள்ளுவேன் என்று அவள் சொன்னபோது குழந்தைவேலர் அதற்கொன்றும் மறுப்புக்கூற வில்லை.

தந்தை வழியேவந்தபோதிய சொத்திருக்கிறது. வழுதியும் ஆதரவற்றவன். குழலியை வழுதிக்கே கொடுத்து அவனை வீட்டோடு வைத்துக்கொள்ள லாம் என்றநினைவால், குழலியை வழுதிக்கே மணமுடித்தார் குழந் தைவேலர்.

ஆனல், நான் காட்டுப்பாக் கத்தில்தான் இருப்பேன் என்று வழுதி கண்டிப்போடு கூறியது அவருக்குச் சிறிது மனக் கசப் பைக்கொடுத்தது. ஆயினும் அவர் ஒப்புக்கொண்டார். மக ளைப் பிரிய வேண்டுமே என்ற ஏக்கமும் வழுதியின் மேலிருந்த அன்பால் மறைந்துவிட்டது.

வழுதியின் கோரிக்கைப்படி குழலி காட்டுப் பாக்கத் திற்கு வந்துவிட்டாள். அவள் தந்தையுந் தாயும் பழமலைப் பங்க ளாவிலேயே இருந்துவிட்டனர்.

இந்த மாற்றங்களையெல் லாம் வழுதி ஒருபொருட்டாகவே

கருதவில்லை. அவன் ஏதோ தனி யுலகில் வாழ்பவன்போல் இருந்து வந்தான். அவனுடைய வாழ்க்கைச் சகடம் இதுவரை சென்ற பாதையிலேயே சென்றுகொண்டிருந்தது.

முன்பு அவன் தனியனாய் வாழ்ந்தான்; இப்போது குழலியுடன் சேர்ந்து வசிக்கிறான். முன்பு உணவு விடுதியில் சாப்பிட்டு வந்தான். இப்போது மனைவி சமைத்த உணவைப் புசிக்கிறான்; முன்பு குடிசையில் கண்டபொருள் கண்டவிடத்தில் கிடந்து அலங்கோலமாயிருந்தது. இப்போது அவை அவை இருக்க வேண்டிய இடத்தில் ஒழுங்காய் இருக்கின்றன. இவைதாம் அவனுக்குத் தெரிந்தவரை மணத்தால் ஏற்பட்ட மாறுதல்கள்.

குழலியைப்பற்றியும் அவன் அலட்சியமாகவே இருந்துவந்தான். தன் பொருட்டுக் குழலி, அவளுடைய வாழ்க்கையை இவ்வளவு மாற்றி யமைத்துக்கொண்டாளே—மாளிகையில் வாழ்ந்தவள் மண் குடிசையில் வாழ்ந்திருக்கிறாளே — பெற்றோரின் அன்புச் சுழலில் வளர்ந்தவள் தனி வாழ்க்கையை மேற்கொண்டாளே—என்று அவன் எண்ணிப் பார்ப்பதேயில்லை.

அவளும் அதனால் வருந்தவில்லை. அவன் ஓவியம் தீட்டுவான்; அவள் வண்ணம் குழைத்துத் தருவாள்; தூரிகைகளைச் சுத்தப்படுத்துவாள். அவன் பக்கத்திலேயே அமர்ந்து அவன் வரைவதை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருப்பாள். சில சமயம், அவன் பசிநோக்காது தன் வேலையிலீடுபட்டிருப்பான். அவளும் சாப்பிடாமலே அவன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பாள். "குழலி! நான் பிறகு வருகிறேன்; நீ போய்ச் சாப்பிடு" என்று அவன் சொன்னாலும், "எனக்கும் பசி எடுக்கவில்லை" என்று சொல்லிவிடுவாள்.

இவ்வளவு தூரம் அவளது இன்பத்தைப் புறக்கணித்துத் நன்மையை நாடுகிறாளே என்று வழுதி எண்ணுவதேயில்லை.

அன்று என்னவோ அவனையும் மீறி அவள்மேல் ஓர் பற்று உண்டாய்விட்டது அவனுக்கு.

அன்று மாலை வெளியே சென்றிருந்தவன், குடிசைக்குள் நுழைந்ததும் குழலி இருந்த நிலைகண்டு திகைத்துவிட்டான்.

முழந்தாளிட்டு உட்கார்ந்திருந்தாள் குழலி. அருகிலே வண்ணங் குழைத்த கிண்ணங்கள்

வைக்கப்பட்டிருந்தன. கையிலே தூரிகை. ஏதோ ஓர் சித்திரம் போட்டுக்கொண்டிருந்தாள்.

வழுதி வந்ததை அவள் கவனிக்கவில்லை. அவன் மெல்ல அடியெடுத்து வைத்து அவள் பின்னால் வந்து நின்றான்.

அவள் சித்திரத்தைப் போட்டு முடித்தாள்.

"உம்! என்றிலிருந்து இந்தப் பயிற்சியோ" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் வழுதி.

"உங்களை என்று கண்டு என் கருத்தழிந்தேனோ அன்றிலிருந்து" என்றாள் அவள்.

மகிழ்வால் அவன் முகம் மலர்ந்தது. தனக்கு விருப்பமான தொன்றே வேறொருவருக்கும் விருப்பமாயின் தன்னையுமறியாது அவர் மேல் ஓர் பற்று உண்டாகிறது.

குறுநகையோடு குழலியை நோக்கினான் வழுதி.

அவள் மிடுக்கோடு வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

"எங்கே பார்ப்போம்" என்று அவளது கைத்திறனைப் பார்ப்பதற்குக் கையைநீட்டினான் அவன். அவள் அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்று ஓவிய அட்டையைக் கொடுத்தாள்.

சாதாரண ஓவியந்தான். நீர் நிறைந்த குளத்தில் தாமரையொன்று மலர்ந்திருக்கிறது. எங்கோ வெகுதூரத்தில் ஒரு வண்டு பறக்கிறது.

அவன் சொன்னான்: குழலி! நன்றாகத்தான் வரைந்திருக்கிறாய்! ஆனால் ...."

"தாமரை மலர்ந்திருக்க, தேனுண்ணவராமல் வண்டு எங்கோ பறக்கிறதே!"

"வண்டு தன் ரீங்கார இசையிலே தன்னை மறந்து பறக்கிறது"

அவனுக்குச் "சுருக்" கென்றுபட்டது. அவன் கலையின்பத்தில் மூழ்கி அவளைக் கவனியாதிருப்பதைத்தான் அவ்வாறு நினைவுபடுத்துகிறாளோ!

"குழலி!" தவறு செய்தவன்போல் அவளைப்பார்த்தான். அவள் குறும்போடு சிரித்தாள்.

இப்போதுதான் அவள் அவனுடைய மனைவி—இல்லை—அவனுடைய காதலி என்பதையுணர்ந்தான் வழுதி.

5

அன்றைய நிகழ்ச்சி வழுதியின் போக்கை வெகு தூரம்

மாற்றி விட்டது. அன்று அவன் அகத்தில் ஏற்றப்பட்ட காதல் விளக்கு இப்போது சுடர்விட்டெரியத் தொடங்கியது.

குழலியோ, பொறுமையோடு தான் நினைத்த இலட்சியக் கோட்டையை அடைந்து விட்டதாகக் களிப்படைந்தாள். இப்போது அவளும் ஓவியக்கலையில் நல்ல திறமை பெற்றுவிட்டாள். அவளது முயற்சியின் பயனாய் வழுதியின் குடிசை சிறந்த ஓவியக் கூடமாய் விளங்கியது.

சுவர்கள் எல்லாவற்றிலும் கண்ணைக் கவரும் ஓவியங்கள். வழுதி அவற்றைப் பார்த்துப் பார்த்து ஆனந்தமடைவான். இத்துணையளவு தன் காதலி கலையுணர்வு படைத்தவளா என்றெண்ணி இறும்பூது கொள்வான்.

ஒருநாள் அவன் அவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கையில் தான் குழலி கேட்டாள்.

' என்ன! காதலியால் மெல்ல மெல்ல கலை அழிந்து கொண்டு வருகிறதே என்று கவலைப்படுகிறீர்களா?''

“ஆமாம்! ஆமாம்! இந்தக் காதகியால் கலை அழிந்துகொண்டு தான் வருகிறது'' என்று பொய்க் கோபத்தோடு சொல்லி விட்டு அவளை அப்படியே இறுக அணைத்துக்கொண்டான் அவன்.

முற்றத்தில் அமர்ந்து ஓவியந் தீட்டிக் கொண்டிருந்தாள் குழலி! வழுதி, அவளுக்குப் பக்கத்தில், கால்களைக் கைகளால் மடக்கிப் பிடித்துக் கொண்டு, அவள் தீட்டுவதைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

அவள், அடிக்கடி அவனைத் திரும்பிப் பார்த்து, “சரிதானா ஆசிரியரே'' என்று கேட்டு விட்டுப் புன்னகை புரிந்தாள்.

“உம்! கலைத் தேவியின் படைப்பில் இந்த எளியோன் என்ன தவறு காண முடியும்'' என்று சொல்லிக் குறும்போடு நகைத்தான் வழுதி

குன்றின் பின்னால் மறைந்து கடைசி முறையாக உலகைப் பார்த்தான் கதிரவன்.

வழக்கம் போல் வழுதியும் குழலியும் உலாவுவதற்குக் கிளம்பிவிட்டனர்.

கிராமத்தின் கோடியில் பெரிய வாய்க்கால் ஓடுகிறது. அதன் இரு கரைகளிலும் பச்சைப் பசேலென்று புல்

முளைத்திருந்தது. இருவரும் அங்கு வந்தனர்.

"நீங்கள் இருங்கள்; நான் போகிறேன்" என்றாள் குழலி.

"ஏன்? என்றாள் வழுதி.

"நீங்கள் இயற்கை எழிலைப் பருகும்போது நான் ஏதாவது ஊறு செய்தால்"

"குழலி! தெரிகிறது! என் வார்த்தையைக் கொண்டே என்னைக்குத்திக் காட்டுகிறாயா?"

இருவரும் புல் மெத்தையில் அமர்ந்தனர்.

குழலி! நீ அருகிலிருந்தாலே இயற்கை ஒரு புது அழகோடு தான் தோன்றுகிறது. அதோ! தன் காதலியைத் துரத்திச் செல்லும் அந்த ஆண் புறா, அந்தப் பூவரச மரத்தோடு பிணைந்திருக்கும் கோவைக் கொடி, நீலவானைத் தழுவிச் செல்லும் அந்த வெண்முகில், எல்லாமே ஒரு புது அழகோடு தான் திகழ்கிறது.

உட்கார்ந்திருந்தவன், அவள் மடியிலே தலை வைத்துப் படுத்து விட்டான். அவள் ஆதரவாக அவன் கன்னங்களைத் தடவிக்கொடுத்தாள். அந்தக் அன்புக் கைகளை அவன் இறுகப் பற்றிக் கொண்டான்.

"கலையின்பத்திலேயே ஆழ்ந்து கிடந்த என்னைக் காதலின்பத்தையும் நுகரச் செய்தவை இந்தக் கைகள் தாமே குழலி! என்றான் வழுதி.

அவள் பதிலொன்றும் பேசவில்லை. உவகையால் அவள் உதடுகள் விரிந்தன.

காதல் உணர்வெனும் உலகத்திலே அவர்கள் அவ்வாறே பேச்சற்று உலவிக்கொண்டிருந்தனர்.

வானில் வெண்மதி எழும்பிற்று. பெரிய வாய்க்காலைச் சுற்றி எங்கும் அமைதி நிலவியது. குழலியின் வாயினின்று கிளம்பிய அமரர் பாரதியின் பாட்டு, வாய்க்கால் நீரின் "சல சல" வெனனும் பண்ணோடு கலந்து ஒலித்தது

காதலினால் மானிடர்க்குக்
கலவியுண்டாம்
கலவியிலே மானிடர்க்குக்
கவலை தீரும்
காதலினால் மானிடர்க்குக்
கவிதையுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற்
கலைகளுண்டாம்
ஆதலினாற் காதல் செய்வீர்
உலகத்தீரே!
அது உற்றதன்றோ இவ்வுலகத்
தலைமை யின்பம்
காதலினாற் சாகாமல்
இருத்தல் கூடும்:
கவலைபோம் அதனாலே
மரணம் பொய்யாம்.

புத்துலக நீதி

[நல்லை. அ. இளங்கோவன்.]

காப்பு (குறட்பா)

புத்துலக நீதி புகலத் தமிழணங்கே
சத்துமொழி தந்தருளுந் தா!

நூல் (எண்சீர் விருத்தம்)

தமிழ்மக்கள் தன்மானம் பேண வேண்டும்
தாம்தமிழர் என்றுணர்ச்சி பூண வேண்டும்
தமையடுத்துக் கெடுப்போரை வெறுக்க வேண்டும்
தம்மடிமைத் தளைதன்னை யறுக்க வேண்டும்
தமதரசைத் தமதாகக் கொள்ள வேண்டும்
தடுத்திருக்குந் தடைக்கல்லைத் தள்ள வேண்டும்
தமதருமைத் தாய்த்தமிழைக் காக்க வேண்டும்
தனித்திலகும் அரசமொழி யாக்க வேண்டும்! (1)

பகுத்தறிவுக் கிடமதிகம் கொடுக்க வேண்டும்
பழமையிலே வருமிழிவைத் தடுக்க வேண்டும்
மகத்தான புதுமைகளைத் தோற்ற வேண்டும்
மங்காத பெருஞ்செயலை யாற்ற வேண்டும்
மிகத் தெளிவாய்க் கலையனைத்தும் அறிய வேண்டும்
மீறிவரும் விஞ்ஞானம் தெரிய வேண்டும்
தொகுத்துயர்ந்த கலைநூல்கள் யாக்க வேண்டும்
தோன்றிவரும் கலைஞர்களை யூக்க வேண்டும்! (2)

தன்னுரமே தன்துணையாக் குறிக்க வேண்டும்
தன்னிலையில் தாழாமல் தரிக்க வேண்டும்
முன்னறிவால் எத்தொழிலும் முடிக்க வேண்டும்
முட்டொழித்து முயற்சியினைப் பிடிக்க வேண்டும்
பன்னூலும் படித்தறிந்து தெளிய வேண்டும்
பலர்மொழியும் கேட்டுண்மை பிழிய வேண்டும்

இன்னாரும் இனியாராய்த் துதிக்க வேண்டும்
எழுங்கருத்து வேற்றுமையை மதிக்க வேண்டும்! (3)

சாதிமத பேதங்கள் ஒழிக்க வேண்டும்
தாழ்வுயர்வு கீழ்மேலைக் கழிக்க வேண்டும்
தீதிலறி வேதெய்வம் ஆக வேண்டும்
தெய்வங்கள் பிறவொழிந்து போக வேண்டும்
மாதருக்குச் சமவுரிமை வாய்க்க வேண்டும்
மற்றவர்தம் மிழிவடிமை மாய்க்க வேண்டும்
காதலுக்கு முதலிடந்தந் துய்ய வேண்டும்
கலப்புமணம் மறுமணமும் செய்ய வேண்டும்! (4)

கோவில்கள் மடங்களெல்லாம் ஒழிய வேண்டும்
குருக்களும்பூ சாரிகளும் அழிய வேண்டும்
மேவுகிற மதச்செலவு ஓய வேண்டும்
வித்தைவளர் கோவிலுக்குப் பாய வேண்டும்
காவுபலி கொடுப்பதனை நிறுத்த வேண்டும்
கண்மூடி மதப்பழக்கம் திருத்த வேண்டும்
தேவையிலாப் பத்திமணம் மாற்ற வேண்டும்
செறிகுருட்டு நம்பிக்கை நீற்ற வேண்டும்! (5)

பாவியிவன் ஏழையெனல் மாற வேண்டும்
பரமனருட் பணக்காரன் பாற வேண்டும்
போவதுவாழ் வெனும்பொய்யைப் போக்க வேண்டும்
புவிவாழ்வுப் போகமெலாம் சேர்க்க வேண்டும்
நோவணுக வொட்டாமல் ஓட்ட வேண்டும்
நோய்நொடியில் நின்றுலகை மீட்ட வேண்டும்
சாவதுவும் இல்லாமல் வாழ வேண்டும்
தரித்திரப்பேய்க் கரப்பிடியில் மீள வேண்டும்! (6)

பொருளுடைமை பொதுவுடைமை யாக வேண்டும்
பூட்டிவைக்கும் மனப்பான்மை போக வேண்டும்
அருளுடைமை மக்களெலாம் எய்த வேண்டும்
அன்பதுவே உலகாட்சி செய்தல் வேண்டும்

மருளுடைமை தனைமாய்த்துச் செழிக்க வேண்டும்
வருமிழிவை மணத்துணிவால் ஒழிக்க வேண்டும்
தெருளுடைமை யெல்லோரும் கொள்ள வேண்டும்
சினந்துவரும் போர்வெறியைத் தள்ள வேண்டும்! (7

தொழுதொழில்கள் எல்லாமும் தொலைய வேண்டும்
தொழிலுக்கோர் குலமிருத்தல் கலைய வேண்டும்
உழுதொழிலைத் தலைத்தொழிலாய்ப் பேண வேண்டும்
உழுபவனே நிலவுரிமை பூண வேண்டும்
தொழிலாளி முதலாளி யாக வேண்டும்
தொழிலனைத்தும் அரசுக்கே யாக வேண்டும்
செழுமைதரு தொழிற்றுறைகள் துளிர்க்க வேண்டும்
செயலாளர் வாழ்வினிலே செழிக்க வேண்டும் (8)

திறமைக்குத் தக்கதொழில் தருதல் வேண்டும்
செலவுக்குத் தக்கபொருள் பெறுதல் வேண்டும்
வறுமையெனும் ஒருசொல்லை யொழிக்க வேண்டும்
வளவரைச்சொம் பெறிகளை யழிக்க வேண்டும்
திறம்பெரிய தலைவர்களைத் தேர வேண்டும்
செயலிழந்தார் தம்காலை வாரவேண்டும்
அறந்தெரியும் பெரியாரே யாள வேண்டும்
ஆணவத்தார் தம்மாட்சி மாள வேண்டும்! (9)

நல்லகுடி யாட்சிதனை நாட்ட வேண்டும்
நாடனைத்தும் சேர்ந்தன்பு கூட்ட வேண்டும்
எல்லோரும் இன்பெய்தி யிருக்க வேண்டும்
இன்னல்வரின்பொதுச்செலவில் இறுக்க வேண்டும்
கல்லாரே யில்லாது மாற்ற வேண்டும்
கட்டாயக் கல்விமுறை யாற்ற வேண்டும்
பொல்லாரை நல்லாராய்த் திருத்த வேண்டும்
புத்துலக நீதியினை நிறுத்த வேண்டும்! (10)

பலமொழிப் புலவர்

தெ. பொ. மீனுட்சிசுந்தரனர்.

எல்லோரும் கற்க.

பலமொழிப் புலவர் தே. பொ. மீனாட்சிசுந்தரனார்.

கல்வியே கண். கண் தெரிந்தால் அன்றோ வழி தெரியும். வாழ்க்கையின் வழி தெரிவது கல்விக்கண் திறந்தால்தான். வழி அறிவதே கல்வி; உருப்போட்டு ஒப்புவிப்பது மட்டும் கல்வி அன்று. அது பழங் கூத்து. பழைய வழியைக் காட்டப் பழம் பாடம் துணை செய்யும். சில பழைய வழிகள் புதிய வழிகளாகவே இருக்கும்; சில பழைய வழிகள் முள் மூடிப்போய் இருக்கும் காலம் புதிது புதிதாகக் காட்சி அளிக்கும்போது புதுவழியும் கண்டுபிடிக்க வேண்டும். நாட்டுப் புறத்தில் வயலின் நடுவே ஒய்யாரமாக நடக்கின்றவன் வண்டிகள் விரைந்தோடும் நகரத்தெருவின் நடுவே ஒய்யாரமாக நடக்க முடியுமா? ஓரத்தில் ஒதுங்கியே நடக்க வேண்டும். வழி என்றால் அதன் இயல்பு என்னவோ ஒன்றுதான். ஆனால் சுற்றுப் புறச் சூழலுக்கு ஏற்றவாறு வேறு வேறு காட்சி அளிக்கும். பொன் ஒன்றுதான்; ஆனால் அதில் கெம்புக் கல்லைப் பதித்தால் ஓரழகு; பச்சைக்கல்லைப் பதித்தால் வேறு அழகு; நீலக்கல்லைப் பதித்தால் மற்றோர் அழகு. அதுபோல வழி என்பதும் சூழலுக்கு ஏற்ப மாறும். ஆதலின் கல்வியும் மாறும்.

வழி அறிவது, எந்த ஊருக்குப் போக? வாழ—வெற்றியுடன் வாழ—இன்பமாய் வாழ. நம் முழு ஆளுமையும், ஆளாய் நிற்கும் தனிமுழுநிலைத் தன்மை (Personality) திறமையும் முற்றிப் பழுத்து நமக்கும் உலகிற்கும் இனிக்குமாறு வாழவே அனைவரும் விரும்புகிறோம். அதற்கு வழி எது? அவ்வாறு வாழ முற்படுவதே ஆம். வாழ்வே வாழ்விற்கு முதலும் முடிவும். ஆண்டவனை அடைய ஆண்டவனே வழி. இருட்டில் ஒளியைக்காண ஒளியே வழி. அதேபோல வாழ்வுக்கும்வாழ்வே வழி. தட்டித்தடுமாறித் தளர் நடையிட்டே நடையினைக் கற்கிறது குழவி. தத்திப் பேசிக் குளறி வழிந்து பேசியே பேசக் கற்கிறது.

நீரில் விழாது நீந்தக் கற்க முடியுமா? ஒவ்வொரு நிலையிலும் இவ்வாறு வாழ்ந்தே வாழக் கற்றுக் கொள்கிறோம். அருகே இருப்பார் "கையை இப்படிவை காலை இப்படி அசை" என்னலாம்; ஆனால், அதன்படிசெய்ய வேண்டியவர் நீந்தக் கற்பவரே. அருகே இருந்து சொல்வதற்குப் பதிலாக எழுத்தில் எழுதித் தரலாம். அந்த எழுத்தினைப் படிப்பது கல்வி ஆகாது. நீந்தக் கற்பவன் அதனைப் படித்த பின்னும் தானே நீந்திக் கற்க வேண்டும். நம்சுமையை எழுதிவைத்தவன் சுமக்க முடியாது; நம் விருந்தினை எந்த நளனும் உண்டு களிக்க முடியாது. அவரவர் சுமையை அவரவரே சுமக்க வேண்டும். அவரவர் விருந்தினை அவரவரே உண்டுகளிக்கவேண்டும். பக்கத்துச்சொல் பதினாயிரம். பதினாயிரம் பெற்றாலும் வெறுஞ் சொல் மட்டும் கல்வியாகாது. வாழக்கற்பதே கல்வியாம். வாழ்வே கல்வி.

• •

வாழ்வே கல்வி என்பதில் முற்காலத்தில் ஐயம் ஏற்படவில்லை. மக்கள் தம் தாய் தந்தையரோடு கூடிவாழ்ந்து வாழக் கற்றனர். பிறரோடு பழகுவது, தத்தம் தொழிலைச் செய்வது, தங்கள் குடும்ப வரலாற்றை அறிவது, பருவநிலைகளை அறிவது — இவற்றை எல்லாம் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் வீட்டிலேயே கற்றுக்கொண்டனர். வாழ்க்கைக்கு வேறாகத் தனியேபள்ளிக்கூடம்என ஒன்று இல்லை. பின், ஒருசிலர் ஆளத் தொடங்கினர். மந்திரம் தந்திரம் சடங்கு வழக்கு என்பன புறப்பட்டன. மறை பொருள்கள் மாய வித்தைகள் என்பன எல்லாம் திரைக்குள்ளே வளர்ந்தன. ஒவ்வொரு தொழிலையும் எப்படிச் செய்வது எனப் பாட்டாகப் பாடிக்கொண்டே செய்வது வழக்கமாகிவிட்டது. இந்தப் பாட்டெல்லாம் மந்திரமாயிற்று. எழுத்துக்கள் எழுதவும் ஒருசிலர் கற்றுக்கொண்டனர். இந்தக்கூட்டமே பிறருக்குக் கற்பிக்கத் தொடங்கியது. பள்ளிக்கூடமும் பிறந்தது. மெல்ல மெல்ல எல்லாத் துறைகளையும் கற்பிப்பவர்கள் ஆசிரியர்களே என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வேலைகளைச் சிற்றாளாக இருந்து கற்றுக் கொள்ளுகிற வழக்கம் மறைந்தபோது வேலையைப் பள்ளிக்கூடத்திலே தானே கற்கவேண்டும். வெட்டவெளியில் ஆடலும்

பாடலும் நடைபெறுவது வழக்கம். வெட்ட வெளி மறைந்த போது பள்ளிக்கூடந்தான் இவற்றிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். விஞ்ஞான உலகமாக நம் உலகம் மாறியபோது விஞ்ஞானக் கலையினையும் பள்ளிக்கூடமன்றோ கற்பிக்கவேண்டும். குடியரசு வாழ்வு வாழ முற்படுகின்ற இந்தக்காலத்தில் குடியரசு வாழக் கற்பிப்பதோடு அரசியற்கல்வியும் பள்ளிக்கூடமன்றோ கற்பிக்க வேண்டும். கோயிலுக்குப் போவார்குறைந்த போது பள்ளிஅன்றோகோயிலாக வேண்டும். வயிற்றின் கொடுமையால் தாயும் தந்தையும் பிழைக்க வழி தேடி வேலை செய்யப் போகின்றனர். குழந்தை வளருவது எப்படி? கைக்குழந்தையாக இருக்கும்போதே பள்ளிக்கூடம் குழந்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும்; உணவு தர வேண்டும், உடை உடுத்த வேண்டும். தாயும் தந்தையும் அண்ணனும் உற்றோருமாய்ப் பள்ளியே உதவ வேண்டும். இவ்வாறு எல்லாத் துறையுமாகப் பள்ளி வளர்ந்து விட்டது. இதற்கேற்ப இதன் பொறுப்பும் உலகமுழுதுமாய் வளர்ந்துள்ளது. போரும் போட்டியும், கொடுங்கோலும் பசியும், நோயும், கொள்ளையும், பிடுங்கித் தின்னும் பேயாட்டமும் எங்கும் நிறைந்திருக்கக் காண்கிறோம். மக்கள் மக்களாக வாழ இடம் இல்லை. இவை எல்லாம் தீரப் பள்ளியே வழி காட்ட வேண்டும். வருங்கால உலகம் அங்கன்றோ வளர்கின்றது.

வேதம் ஓதி மந்திரம் பாடிச் சடங்குகள் செய்ய ஒரு சிலர் படித்தால் போதும். யான் ஆர்: என்ற கேள்வியில் ஈடுபட ஒரு சிலரே படித்தால் போதும். அரசியலில் ஏடும் எழுத்தாணியும் எடுத்து வேலை செய்ய வேண்டுமானால் ஒரு சிலர் படித்தால் போதும். இன்று எல்லாத் துறைக்கும் வழிகாட்டுவது பள்ளிக் கூடமானால்ஒருசிலர் அங்குப் புகுந்தால் போதுமா? எல்லோருமே கற்க வேண்டும். வாழ்வே கல்வியானால் ஒரு சிலர் மட்டுமா வாழ வேண்டும்; அடிமைகள், கூலியாட்கள் என ஒரு சிலரை ஒதுக்கிவையாமல் "எல்லோரும் ஒரு நிறை, எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற குடியரசுக்கொள்கைபரவி உள்ளது. எல்லோரும் ஒரே தன்மையர் என்பதற்கு இல்லை. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்று எளிது.

எறும்பும் தன் கையால் எண்சாண். ஆதலின் எல்லோரையும் ஒரே முறையில் பழக்கிப் பயன் இல்லை. அவரவர்கள் உயர்வு சிறந்து விளங்குமாறு கல்வித் திட்டம் அமைய வேண்டும். எல்லோருக்கும் ஒரே தன்மையான வாய்ப்புத்தரவேண்டும். அனைவரும் ஆள வரும் இந்நாளில் அனைவரும் அடிப்படைக் கல்வியறிவு பெற வேண்டாமா? கல்வி ஒளி இல்லாமல் இருட்டிலா நாட்டை ஆள முடியும்?

எல்லோரும் படிக்க வரும்போது பழைய முறைகள் செல்லாத காசாகும். வெறும் சொல்லார வாரமும் உருப்போடுதலும் மட்டும் பயன் தாராமற்போகும். எண்ணுவது என்றால் சொற்களைக் கொண்டுதான் எண்ண வேண்டும் என்பதில்லை. பசு என்ற சொல்லும் பசுவினை நினைப்பூட்டும். அந்தச் சொல்லை அறியக் கூடியவர் சிலரே பசுவின் படம் அதனைவிடப் பெரிய விளக்கம் தரும் பசுவைப் போலப் பொம்மை செய்து கற்றால் பசு என்ற எண்ணம் மறக்கவே மறக்காது. பசுவை நேரே கண்டாலும் அதனை வளர்த்துப் பழகிப் பால் குடித்தாலும் பசுவின் அனுபவம் மேலும் சிறந்து விளங்கும். முன் எல்லாம் புழு முதல் கடவுள் வரையில் அனைத்தினையும் இரண்டொரு எழுத்துக்களில் எழுதிக் காட்டி வந்தனர். இப்போது கூட்டம் கூட்டமாகப் பள்ளிக்கூடத்தில் புகுகின்ற குழவிகள் அத்தகைய சொற்பழக்கம் பழுத்தகுடும்பத்திலிருந்து வருகின்றவை அல்ல. வற்றுந்தரையைப் பச்சைப் பயிராக்கிப் பொன்னுகநெல்கொழிக்க வைக்கும் குடும்பம்; பாறையாய்க் கிடக்கும் இடத்தை வெட்டி ஆழத்திலிருந்து தண்ணீர்பொங்கிப் பாயச்செய்து பாலையை மருதமாகப் பாடுபடுங் குடும்பம், செத்த கல்லில் உயிருள்ள வடிவங்களைச் செதுக்கிப் பேச வைக்கும் குடும்பம்; வானுக்குப் படிகட்டுவதுபோலக் கோபுரங்களைக் கட்டும் குடும்பம் கைக்கும் உளிக்கும் அசையாத இரும்பையும் உருக்கி விரும்பியபடி வேலை வாங்கும் குடும்பம்—இப்படிப் பல குடும்பங்களிலிருந்து குழந்தைகள் வருகின்றன. இவர்கள் சொல்கொண்டு வெறுங்கையை முழம் போடுவதில்லை. படமெழுதிப் பார்ப்பர்; கையாலே செய்தே பார்த்து விடுவர். வாய்ப் பந்தல் போடுவது இவர்களால் முடியாது. கை

வரிசை காட்டவே முடியும். இவர்கள் தங்கள் கையையே மூளையாகக்கொண்டு எல்லா வகைச்சிறபத்தொழிலும் செய்து வருகிறார்கள்.

கைக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பினை நாம் அறிய வேண்டும். மனிதனுக்கும் விலங்குக்கும் என்ன வேற்றுமை? முன்னங்கால்களை நடக்கும் கால்களாகப் பயன் படுத்தாமல் கருவிகளைப் பயன்படுத்தும் கையாக மனிதன் மட்டுமே நீட்டிக் காட்டுகிறான்! கருவிகள்எல்லாம் நமது கையோடு கையாகி விடுகின்றன. உலகம் முழுதும் நம் கைக்குள் சிக்கி நம் விரல் அசைவதுபோல அசைகின்றன. கைகொண்டே உலகத்தினை அறிகிறோம். அறிவும் வளர்கிறது. நமது வலக்கையே நம் தொழிலில் பெரும் பங்கு எடுத்துக் கொள்கிறது. இந்த வலக்கையை வேலை வாங்குவது தலையில் இடப்பக்கமுள்ள மூளையே ஆம். அந்த இடப்பக்கமுள்ள மூளையே அறிவாராய்ச்சியிலும் ஈடுபடுகிறது. கைக்கும் மூளைக்குமுள்ள தொடர்பு இதனால் விளங்கவில்லையா? கற்பது என்றால் செய்து பார்ப்பதே ஆம். ஆகவே கல்விமுறை இப்போது புதிதாக வருவோரை நோக்கினாலும் சரி, கல்வி முறையின் அடிப்படையை நோக்கினாலும் சரி – சொல் முறைக் கல்வியாகாமல் செயல் முறைக் கல்வியாகவே அமைய வேண்டும். குழந்தையைப் பார்த்தாலும் இந்த உண்மை விளங்கும். விடாது பேசவும் குழந்தை விரும்புகின்றது; ஓய்வு இல்லாமல் தூங்கும் வரை ஓடி ஆடி இயங்கி வரவும் விரும்புகின்றது. எதையேனும் செய்துகொண்டே கிடக்கின்றது. செய்து பார்த்துக் கற்பது என்பதே இந்நாளையக் கல்வி முறை.

கல்வியே வாழ்வு. பள்ளியானது வாழ்வு முழுதினையும் ஒன்றாக்கிக்கொண்டு விளங்குகிறது. கல்வி எழுதப் படிக்கக் கற்பதுமட்டும அல்ல. வாழ்வதெல்லாம் கல்வியே என்ற கொள்கையும் விளங்கிக்கொண்டே வருகிறது. பிறந்தது முதல் இறக்கும் வரை கற்று வருகிறோம். வாழ்ந்துவரும்போது மக்களைப் பற்றியும் பொருள்களைப்பற்றியும் முன்தெரியாதனவற்றை ஒவ்வோர் இமைப்போதும் தெரிந்து காண்டே வரவில்லையா? “என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு” என்று திருவள்ளுவர் கூறுவதன் பொருள் இப்போது

விளங்குகிறது. சாகும் வரையும் கல்வி என்ருல் இளமையிற் கற்ப தோடு கல்வி முடியாது என்பது தாயிற்று. முதியோர் கல்வி இயக்கம் தோன்றியுள்ளது. காட்சி நிலேயம், நூல் நிலேயம், வாசகசாலே முதலியன சாகும் வரையிற் கற்க உதவாம். இவை இவை இருந்தால்தான் கற்றது மறந்து போகாது நிலேக்கும். இவை அனேத்தும்சேர்ந்த அறிவு நிலேயமே இந்நாளேய பள்ளியாம்.

நம்முடைய உலகம் அணுவினே எல்லாம் ஆராய்கின்றது. செல்வம் கொழித்து நிற்கின்றது. ஆனல் ஒருசிலரே இன்பமாக வாழ்கின்றனர். பலரோ வெயிலில் புழுப்போலத் துன்பத்தில் துடிதுடித்துச் சாகின்றனர். இந்த நிலே மாறவேண்டுமானல் கல்வி பரவவேண்டும். எல்லோரும் உண்மையை அறிந்து ஆள வருதல் வேண்டும். வாழ்வே கல்வியானல், பள்ளி ஏன்? உலகில் பலமூலேகளில் சென்று அனேத்தினேயும் கற்க நமக்கு நாளேது? உலகத்தில் உள்ள சூழலேக் கெடுதலுக்கு இடம் இல்லாமல் பள்ளிக்கூடம் தன்னிடத்தே அமைத்துக் காட்டுகிறது. இதுவரையிலும் உலகம் பெற்ற அனுபவம் நமக்கும் பயன்படும் வகையில் பள்ளிக்கூடம் அமைந்துள்ளது. ஆதலின் பள்ளிக்கூடம் இன்றியமையாது வேண்டும். சாகும் வரை இங்கிருந்தே கற்க முடியாது. இளமைப்பொழுதிலேனும் அனேவரும் பள்ளி வாழ்வு வாழ வேண்டும். எதிர்காலத்து மக்களே வளர்க்கின்ற பாத்திகளே பள்ளிகள். அங்கே நல்ல வழியில் வளர்ந்து ஓங்கிவிட்டால் பின் எந்தப் பெருங்காற்றுக்கும் பெருமழைக்கும் ஈடு கொடுக்கலாம். எதிர்கால உலகம் இன்பமாய் இனிக்கும்.

நம் இந்தியாவின் நிலே என்ன? பள்ளிக்கூடத்தில் புகுந்து வந்தவரிடம் படிப்பு வாசனே வீசும். பெயர் மட்டும் எழுதத்தெரிந்தவரிடம் எழுத்து வாசனே வீசும். நம் நாட்டில் நூற்றுக்கு 15 பெயர் மீதே இந்த வாசனே வீசுகிறதாம். இந்த இருட்டில் இன்பம் கொழிப்பது எங்கே? 150 ஆண்டுகளுக்கு மேல் நம்மை ஆண்ட ஆங்கிலேயர் நம்மை வளர்த்த முறை இது தான். ஆங்கிலேயர் பழைய பள்ளிக்கூடங்களேச் செத்து மடிய விட்டனர். ஆங்கில உடையிலும் நடையிலும் பழகி ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுத்தனர்.

அவர்களுக்கு நிறைய ஆள்கள் வேலை செய்யக்கிடைத்தனர். ஆனால் இத்தகைய புறஞ்சுவர்க் கோலம் செய்யும் கல்வி காற்றில் பறக்குமே அன்றி வேறொன்றுமது. இது பரவுதற்கு இடம் இல்லாது போயிற்று. ஒரு சிலர் கற்றால் அவர் வழியே பிறரும் கற்பர் என்ற எண்ணம் கனவாகியது. ஊர் எல்லாம் பள்ளிக்கூடம் திறக்கவேண்டும் என்ற அறிவு பிறந்தது. ஆனால் பணம் ஏது? தாங்களும் தங்கள் படையும் வயிற்றின்மேல் ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு பணத்தினை மிகுத்திப் படிப்பிக்க முடியுமா? படிப்படியாய் படிப்படியாய்ப் போகவேண்டும் என்ற பாட்டே பாடினர். இவ்வாறு பாட்டுப் பாடி உலகினை ஏமாற்ற முடியாத போது நல்ல பிள்ளைகளைப்போல வெள்ளையர் வெளியேறினர். அவர்கள் நாட்டில் கல்விக்காகத் தலைக்கு 33 ரூபாய் ஒவ்வோர் ஆண்டுக்கும் செலவாகிறது. நம்முடைய நாட்டில் தலைக்கு $\frac{1}{2}$ ரூபாய் தான் செலவு. என்ன செய்வது மனமுடைந்து போவதா? ருஷ்யாவில் இதனைவிடச் சீர்கேடான நிலைமை இருந்தது. இருபது ஆண்டிற்குள் அந்நாட்டில் பலரும் கற்றவராக மாறியுள்ளனர். அவர்கள் செய்தது போல நாமும் செய்ய முடியும் அன்றோ?

எல்லோரும் கற்றவர்களாக வேண்டும். கல்வி கரையில. கற்பவர் நாள் சில. அடிப்படைக் கல்வி எவ்வளவாக அமையவேண்டும்? 12 வயது வரை கற்க வேண்டும் என்பர் நம் நாட்டினர், பேராசை அற்ற பெருந்தவத்தினர். அப்போது காளைப்பருவம் கால் எடுத்துவைக்கிறது. பின் 15-16ல் ஒருபடி; 18வது வயதில் மற்றொருபடி. அப்போது இளைஞன் முற்றிய மனிதனாகிறான். இந்த இளமை முழுதும் கற்பதே சிறப்பு. முடியாது போனால் 15-16 வயது வரையேனும் கற்கவேண்டும். இதுவே இங்கிலாந்து காணும் கனவு. அவர்களே அவ்வாறு கனவு காணும்போது நாமும் அதனையே மேல்வரிச் சட்டமாக அமைத்துக்கொண்டு, முதற்படியாக 11-12 வரை எல்லோரையும் உடனடியாகக் கற்பிக்கத் திட்டம் வகுக்கவேண்டும். பின்னர் படிப்படியாக 18 வரை உயர்த்திப் போகலாம்.

கற்பது என்றால் கரும்பு தின்பதா? எல்லோரும் கற்க ஓடோடியும் வருவாரா? அப்படி இருந்தால் உலகம் இப்படி

இருக்குமா? ஆதலின் கட்டாயப் படுத்தித்தான்கற்பிக்கவேண்டும். உரிமை வாழ்வு எனப் பேசும் போது கட்டாயத்திற்கு இடம் உண்டா? தன் நன்மையை அறியாதவருக்குக் கட்டாயந்தான் பயன் தரும். வெறியனுக்கு உரிமைகொடுத்து என்ன பயன்? வறுமையின் கொடுமையால் பலர் வெறியராகின்றனர். தம் குழவியை விற்றும் பிழைக்க வருவர். வறுமை வெறியர் மிக்க இந்த நாட்டில் கட்டாயக்கல்வி வந்தால் மட்டுமே அந்த வெறி நீங்கும். கட்டாயக் கல்வி புதிதன்று. ஆனால் கட்டாயக் கல்வி எனச் சில இடங்களில் நடப்பது பெயரளவில்தான் கட்டாயக் கல்வி. நல்லவழியில் கட்டாய முறையைக் கையாளவேண்டும்.

5 முதல் 15 வயது வரை உள்ளவர்கள் 6 கோடி ஆம். அதில் $1\frac{1}{4}$ கோடி (1,19,85,486) கூடப் பள்ளியில் இல்லை. இதில் இன்னுமொரு கேடு. இதில் முதல் வகுப்பில் உள்ளவர் 52 லக்ஷம்; 2-ம் வகுப்பில் 24 லக்ஷம்; அதாவது பாதிகூட இல்லை; 3-வது வகுப்பில் 17 லக்ஷம்; 4-ம் வகுப்பில் 12லக்ஷம்; 5-ம் வகுப்பில் 7 லக்ஷம்தான். முதல் வகுப்பில் சேர்ந்தவர் அத்தனைபேரும் 5-ம் வகுப்பு முடியக் கூடக் கற்கக் காணோம். பள்ளியின் வாயிலில் புகுந்தவர்களில் அரைக்காற் பங்கினரே முற்ற முடியச் செல்கின்றார்கள். முக்காலே அரைக்காற் பங்கினர் அரை குறையாகப் பள்ளியை விட்டு வெளியேறுகின்றனர். முதல் வகுப்பிலேயே பாதிப்பேர் விட்டுச்செல்கின்றனர். இவர்கள் என்ன கற்றிருக்கமுடியும்? அரைகுறையாகக் கற்பதற்குச் செலவிட்ட பணம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தானே! வானம் பார்த்து வாழ்கின்ற உழவன் — அரை வயிறும் நிறையாது அல்லும் பகலும் உழைக்கின்ற உழவன் தரும் வரிப்பணம் இவ்வாறு பாழாகலாமா? வருகின்றவர்களேனும் நாள்தோறும் தவறாமல் வருகின்றனரா? ஆடிக்கு ஒரு நாள் அமாவாசைக்கு ஒருநாள் வந்தால் மேல் வகுப்புப் போவது எங்கே? அதே வகுப்பில்தேங்கித் தயங்கி வெறுப்பெடுத்து வெளியேற வேண்டுவதுதான். தேக்கமும் கூடாது; பாழ்போதலும் கூடாது. இவற்றினைத் தடுக்க வேண்டுமானால் "கட்டாயப்" படுத்தவேண்டும்.

இப்போது சில இடங்களில் வழங்கும் கட்டாயத் திட்டம் வெறும் பேச்சே. நகராண்மைக் கழகம் முதலியவை கட்டாயத்தி னைக்கையாளுவது அருமை. வாக்காளர் என்ன செய்வார்களோ என அஞ்சுவார்; கட்டாயத்தினை வற்புறுத்துவது எங்கே? இதற்கு வழி செய்யவேண்டும். ஊரைப் பெருக்கி வாரவும் பணம் போதாது அலையும் நகராண்மைக் கழகங்கள் இதற்குப் போதிய பணம் செலவுசெய்ய முடியுமா? மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ளது கல்வியே என்றால் அடிப்படைக்கல்வியின் முழுப்பொறுப்பினையேனும் துரைத்தனம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். பெற்றோரைக் கட்டாயப்படுத்தவேண்டும். சிறுவரை வேலைக்கு வைத்துக்கொள்வோரையும் தண்டிக்கவேண்டும்.

கட்டத் துணி இல்லை. கஞ்சிக்கு வழி இல்லை. எலும்புந் தோலுமான உடம்பு; புறாக்கூண்டு போலக்குவிந்தமார்பு; கொக்கிப் புழுபோல் வீங்கிய வயிறு; வெளுத்த கண்ணும் முகமும். இந்த வறுமைத் திருமேனி சில போது தீண்டாத் திருமேனியாகவும் இருக்கும். பள்ளிக்குத் தேடிப்போகவும் முடியாது? இங்கே கல்வி பூப்பது எப்படி?

ஊருக்கு ஒரு பள்ளி இருத்தல் வேண்டும். பெற்றோரது சமயக்கொள்கைக்கு மாறுபடாத பள்ளிகள் வேண்டும். நடுவேளைச் சோறு துரைத்தனமே போடுதல் வேண்டும். நடுவேளைச் சோறு இல்லையானால் சென்னையில் கட்டாயக் கல்வி பரவி இருக்க முடியாது. செல்வம் கொழிக்கும் தலைநகரின் தலைஎழுத்தே இவ்வாறானால் வறுமை பிடுங்கித் தின்னும் நாட்டுப் புறங்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? காசில்லாமலே கல்வி கற்கவேண்டும். கட்டத் துணியும் கொடுக்க வேண்டும். கற்கும் சுவடிகளும் எழுதும் பலகைகளும் இலவசமாகவே தருதல் வேண்டும். இல்லை என்றால் இவை எல்லாம் எங்கிருந்து ஏழைக் குழவிகளுக்குக் கிடைக்கும்?

தீண்டாமைஒழிந்தது எனச் சட்ட சபையில் பேசிக்கொள்ளலாம். சாதிச் செருக்கினால் மந்திரி சபையும் கவிழ நிற்கும் இந்தக் காலத்தில் சாதிக் கொடுமையைக் கண்ணும் கருத்துமாய் இருந்து தடுக்கவேண்டும். குழந்தையும் கடவுளும் கொண்டாடும் இடத்திலேதான் ஓங்கும். பிற்பட்டோர்க்கு என்றே அவர்கள் பள்ளிகளை ஏற்படுத்திப் பிறரை

யும் அங்குச் சேர்ப்பது நல்ல முறையாகும். மேல் வகுப்பில் படிப்பவர்க்கு வீட்டருகேயே பள்ளிகள் இல்லாமற் போகலாம். துரைத்தனம் அப்போதுபோக்கு வரத்திற்கு வேண்டிய வண்டிகளை இலவசமாகத்தந்துதவவேண்டும்.

கல்வி என்பது எழுதக் கற்பதுமட்டுமன்று; முழு ஆளுமையும் வளர்வதே கல்வி. உடலும் வளரவேண்டும். நோயில்லாதபடி தடுக்கவேண்டும. மருத்துவர் கல்வித் திட்டத்தின் நடுவிடமாக அமைந்தாலன்றிக் கல்வி பரவ இந்நாட்டில் வழி இல்லை. நோய் நீங்கியதும் உடலம் இனிதே வளரவேண்டுமானல் போதிய உணவு வேண்டும். ஆடலும் பாடலும் ஓய்வு நேரத்தினை இன்பமாக்கும்; உடலோடு மனமும் வளரும் நாட்டுப்புறத்தில் விளையாட நிறைய இடமுண்டு. நகரங்களிலோ நடுவாசல் அன்றி விளையாட இடமே இருப்பது இல்லை. இப்படிப்பட்ட இடத்தில் கற்பதனைவிடக் கல்லாமல் இருப்பதேமேல். உடற் கல்வி இல்லாதபோது கல்வியால் பயனே இல்லை. உடலை வளர்த்தேன்; உயிரை வளர்த்தேன் என்று திருமூலரும் வற்புறுத்த வில்லையா? கல்வி எல்லாம் செயல் முறைக் கல்வியாக இருக்கவேண்டும் என முன்னரே கண்டோம். இதுதான் வார்தாத் திட்டத்தின் அடிப்படை. ஆனல் எல்லாம் நூல் நூற்றலாகவே முடிதல் கூடாது. பலபல தொழில்களின் வழியே அந்த அந்த இடத்திற்குத் தக்கபடி கற்பிக்கவேண்டும். தொழில் வழியே கற்பிக்கமுடியாதனவற்றை வேறு வழியாகவும் கற்பிக்கலாம். இந்தத் தொழில் வழியே பணம் சேர்த்துக் கல்விக்காகும் செலவுக்குக் கொடுத்துவிடலாம் என்று இப்போது எண்ணுவார் ஒருவரும் இல்லை.

தங்கள் தங்கள் வேலைக்குக் குழந்தைகள் உதவவேண்டும் எனத் தாய் தந்தையர் விரும்பினல் கல்வி கற்க வழி ஏது? ''மயிலே மயிலே இறகு கொடு'' என்றால் கொடுக்குமா? கட்டாயப்படுத்தித்தான் கற்பிக்க வேண்டும். ஆனல் ஒன்று செய்யலாம் பள்ளிக்கூடத்திற்கு நிறையக் கட்டடங்கள் இல்லாதபோது இது நல்லவழியேஆம். மாற்றுக் கட்டுப் பள்ளிகள் நடத்துவதே இந்த வழியாம். காலையில் ஒரு கூட்டம்; மாலையில் ஒரு கூட்டம்; நடுப்பகலில் ஒரு கூட்டம்; என மூன்று பள்ளிகள் ஒரே கட்டடத்தில் நடத்தலாம். காலையில் பெற்றோர்க்கு உதவும் குழந்தைகள்

மாலையில் படிக்க வரலாம்; மாலையில் உதவும் குழந்தைகள் காலையில் படிக்க வரலாம். தங்கள் பெற்றோருக்கு உதவிய பின் ஓய்ந்த நேரத்தில் தங்களுக்கு ஏற்றவாறு வந்துபடித்துப் போகலாம். பெற்றோருக்கு உதவுவதும் ஒருவகைக் கல்வியே ஆம். உழவினையே நம்பி இருக்கும் நாட்டுப் புறங்களில் இத்தகைய ஏற்பாடு இன்றியமையாததே ஆம்.

பெண்களே இத்தகைய அடிப்படைக் கல்வியினை நடத்தித் தரவேண்டும். இதுவே கல்வி முறையில் சிறந்த அறிஞர்களது கனவு. பெண்களே ஆசிரியர்களாக வரவேண்டும். இந்த எண்ணம் நிறைவேற வேண்டுமானால் மணமான பெண்களும் வீட்டுவேலையை முடித்தபின்னர்ப் பள்ளியில் வந்து கற்பிக்க வேண்டும். மாற்றுக் கட்டுப் பள்ளிகள் இருக்குமானால் அவர்கள் ஒருசில நேரமாவது ஆசிரியர்களாகத்தொண்டு செய்ய வாய்ப்பு உண்டாகும். மணமான ஆசிரியர்கள் தங்கள் குழவிகளை எங்கே விடுவர்? ஒவ்வொரு பள்ளியிலும் கைக்குழந்தைப் பள்ளிகளும் உடன் இருக்கவேண்டும். ஆசிரியர்களின் குழவிகள் அங்கு வளரலாம். கைக்குழந்தைகளைப் பாராட்ட முடியாமல் வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழில் செய்யப்போகும் தாய்மாரின் குழவிகளும் அங்கு வளரலாம். பிறகுழவிகளும் அங்குக் கற்கலாம். என்ன கற்பது? ஓடி ஆடிப் பாடிக் கண்டு, கேட்டு, தொட்டு, முகர்ந்து,சுவைத்து அனுபவத்தினைப்பெற்று, உலகினை அறிந்து விளையாடுவதே அக்குழவிகள் கற்கும் கல்வி. ஒழுங்காக உடுக்க, உண்ண, பேச, நடக்கக் கற்றால் போதாதா?

இப்போது அடிப்படைப் பள்ளிகள் இரண்டு வகைக்காக அமைந்துள்ளன. தொடக்க நிலைப் பள்ளிகள் ஒருவகை. இவற்றில் படிப்பார் உயர்நிலைப் பள்ளிக்குப் போகாமலே நின்று விடுவர் என்று எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்த்தது போல நடக்கவில்லை. மற்றொரு வகையான பள்ளி உயர்நிலைப் பள்ளியோடு சேர்ந்தது. 5 வகுப்பு வரையிலும் முதல்நிலைப் பள்ளியாம்; இவை கீழ்நிலை தொடக்க நிலைப்பள்ளிகள் போன்றவை. மேலும் 3 வகுப்புகள், கீழ்நிலை இரண்டாம் பள்ளிகளாம். இவற்றை நடுப்பள்ளிகள் என்றும் வழங்குவர். இவை மேல்நிலைத்

தொடக்கநிலைப்பள்ளிகள் போன்றவை எனலாம். இவற்றிற்கு மேலாக மேல்நிலை இரண்டாம் பள்ளிகள் உள்ளன. இவையே உயர்நிலைப் பள்ளிகளாம். உயர் நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் தேர்ந்தவர் கல்லூரியில் படிக்கப் பல்கலைக்கழகத்திற்புகுகின்றனர்.

இப்போது தொடக்கநிலைப் பள்ளிக்கும் பிறவற்றிற்கும் உள்ள வேற்றுமை என்ன? தொடக்க நிலைப்பள்ளியில் ஆங்கிலம் கற்பியாமையே வேற்றுமை. இனி அந்த வேற்றுமைக்கு இடம் இல்லை. எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் நாட்டுக் குழவிகள் தமிழிலேயே அனைத்தினையும் கற்று வரும். மேல் வகுப்பில் ஆங்கிலம் கற்பர். ஆதலின் மொழியைப்பற்றிய வேற்றுமை வேண்டுவதில்லை. முதல் வகுப்பில் சேரும்போதே ஒரு குழவி உயர் நிலைப் பள்ளிக்குப் போகுமா போகாதா என்று எவ்வாறு கூற முடியும்? ஆதலின் இந்த வேற்றுமையை அறவே ஒழிக்கவேண்டும். அடிப்படைப் பள்ளிகள் (Basic School) என்ற பெயரில் ஒரே வகையான பள்ளிகள் நடைபெற வேண்டும். அடிப்படைக் கல்வி ஒருவகையில் நோக்கினால் ஒரு வகையான வாழ்விற்குக் கடைகாலாக முற்றுப் பெறவும் வேண்டும்; மற்றொரு வகையில் நோக்கினால் உயர்நிலைப் பள்ளிக்குக் கடைகாலாகவும் அமைய வேண்டும். உயர் நிலைப்பள்ளி முடிவுவரை மாணவன் விருப்பப்படியோ பெற்றோர் விருப்பப்படியோ கற்க வாய்ப்புகள் இருத்தல் வேண்டும். இடையே புகுந்து ஒரு சிலர்தான் உயர்நிலைப் பள்ளிக்குத் தக்கவர் எனப்பொறுக்கி எடுத்துப் பிறரைத் தள்ளி விடுவது கூடாது. கல்வி இங்கெல்லாம் இயற்கையாக மலர வேண்டுமே அன்றி தேர்வுகளின் இறுக்கமும் நெருக்கமும் புகுந்து அலைக் கழித்தல் கூடாது.

இந்தியாவில் ஆறு கோடி குழந்தைகள் படிக்கும் வயதில் உள்ளனர். 18 லக்ஷம் ஆசிரியர் வேண்டும். அதற்குச் செலவு 200 கோடியாகும் என்று சார்ஜண்டு என்ற பெரியார் தலைமையிற் கூடிய குழு கூறியுள்ளது. சென்னை மாகாணத்தினைப் பொறுத்த வரையில் நாட்டுப் புறங்களில் உள்ள 5 — 11 வயதுள்ள பிள்ளைகள் 52 லக்ஷம்; நகர்ப் புறங்களில் 10 லக்ஷம். ஆக மொத்தம் 62 லக்ஷமாம். இதற்கு வேண்டிய ஆசிரியர்கள் 30 பிள்ளைகளுக்கு 1 ஆசிரியர் என்ற கணக்கில் நாட்டுப் புறத்தில் $1\frac{3}{4}$ லக்ஷமும், நகர்ப்புறத்தில் காலேவீசம்

லக்ஷமும், ஆக மொத்தம் ஏறக்குறைய 2 லக்ஷம் ஆசிரியர்கள் வேண்டும். 30–1–35–3/2–50 என்ற ஊதியத் திட்டப்படி 14 கோடியும் செலவாகும்; பஞ்சப்படி சேர்த்தால் 20 கோடியுமாகும். பிறவகைச் செலவுகள் 6 கோடி என மேற்படி குழுவினர் கணக்கிட்டனர். நடுப்பகற் சோறும் பிறவும் சேர்த்தால் ஆண்டிற்கு 30 கோடி செலவாகலாம். 15 வயதுக் குட்பட்டவரோ நாட்டுப் புறத்தில் 23 லக்ஷமும், நகர்ப் புறத்தில் $4\frac{1}{2}$ லக்ஷமுமாக $27\frac{1}{2}$ லக்ஷம் பிள்ளைகள் உள்ளனர். இவர்களது கல்விச் செலவு 15கோடி; திட்டம்உயர்ந்திருப்பதால், 20 கோடியுமாகலாம். ஆக மொத்தம் அடிப்படைக் கல்விக்கு 50கோடி செலவாகும். தமிழ்நாடு வரையிலும் கணக்கெடுத்தாலும் 20 கோடிக்குக் குறையாது. பல்கலைக்கழகம் முதலிய செலவினைக் கணக்கெடுத்தால் மேலும் 5 கோடியாக மொத்தம் 25 கோடியாகும். இதற்குத் தமிழ் நாட்டினர்வகை செய்ய வேண்டும்.

பணமிருந்தாலும் ஆசிரியர்கள் எங்கே? உயிருள்ள கல்வி வேண்டுமானால் ஊக்கமுள்ள ஆசிரியர்கள் வேண்டும். கல்வி வெறிகொண்டவர்கள் வேண்டும். செயல் முறைக் கல்வி பரவ வேண்டுமானால் கற்பனை சக்தி மிக்கவர்கள் வேண்டும். ஏழாம் வகுப்பு முடித்தவர்கள் ஆசிரியர்களாக வந்தால், குருட்டுக்குக் குருடு வழிகாட்டிக் குருட்டாட்டம் ஆடிய கதையாக முடியும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் ஒருவகை ஆசிரியர்களாக கீழ் வகுப்பில் கற்பிக்க வரலாம். பல்கலைக் கழகக் கல்வி முடித்தவர்கள் மேல்வகுப்பில் கற்பிக்க வரலாம். ஆசிரியப் பயிற்சியோ கையாளும் முறைகளைக் கற்பிக்க வேண்டும். பழக்கமுள்ளவர்கள் கற்பிக்கவேண்டும். அந்த முறையை ஆசிரியர்களும் கையாள வேண்டும். 40 ஆண்டில் அனைவரையும் கற்றவராக்குவது என்று சார்ஜண்டு குழுவினர் முடிவு செய்தனர். நாம் அத்தனை ஆண்டுகள் காத்திருக்கமுடியுமா? ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்று வேண்டும். பல்கலைக்கழத்தில் படித்து முடிப்பார் கட்டாயமாக இந்தத் தொண்டில் ஓராண்டேனும் ஈடுபடவேண்டும் என்பது ஒருவழி. இல்லையானால் கல்வியை விரைவில் பரப்புவதற்கு வழி இல்லை.



அமேசானில்
ஆயிரத் தெட்டிதழ்த்
தாமரை

விருதைத்
திருக்குறள்
மாநாட்டிற்
பெரியார்

படம்: வி. உ. வீ. ப. நாகரத்தினம்.



தொலை பேசும்
இசையரசு



இயற்கையின் நடுவே
செயற்கை

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
வடக்கு பீச் ரோடு, மதராஸ்.

மதராஸ் ஆபீசுகள்:- எஸ்பிளனேட், எழும்பூர், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, மயிலாப்பூர், ராயப்பேட்டை, தியாகராய நகர், புரசைவாக்கம் & ராயபுரம்.

சென்னை ராஜதானியின் எல்லா இடங்களிலும், பம்பாயிலும் கிளைகளும் சப் ஆபீசுகளும் உண்டு.

அயல் நாடு கிளைகள்:- கோலாலம்பூர், பினங்கு, சிங்கப்பூர்.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	ரூ. 62,00,000

சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்கப்படும்.
விபரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது விண்ணப்பிக்க.

என். கோபால அய்யர், காரியதரிசி.

Telegrams: COOPFIRE. Telephone 4361

The Co-Operative Fire & General Insurance Society Ltd.,

MADRAS. 1

President: Sri. **T. M. CHINNAYYA PILLAI**, M. A., B. L.,

Transacts
Fire Insurance of all description and
Motor Vehicles Insurance.

For Particulars—Apply to:—

P. SHANMUGHAM, B. A.,

POST BOX No 1249. **MADRAS 1**

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.,

மதுரை—தூத்துக்குடி—அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்		நெம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்குவேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக் கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

தென்னுபிரிக்காத் தமிழ்ப் பேரன்பர்



டர்பன், திரு. ச. மு. பிள்ளை

அன்புடைமை

[தென் ஆப்பிரிகா - டர்பன் - திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

"அன்பு" என்பதற்குப் பிரியம், ஆசை, இரக்கம், நட்பு எனப் பொருள் கொள்ளலாம். உயர்வாகிய மக்கட் குலத்திற் பிறந்த ஒவ்வொருவருக்கும் அன்புடைமை இன்றியமையாத இலக்கணமாகும். "அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு" என்ற வள்ளுவரின் வாக்கின்படி அன்பு படைத்தவர்களே மனிதர்களாவர்; அன்பில்லாதவர்கள் மக்களுருக் கொண்ட மாக்களேயாவர்.

மிருகங்கள், பறவைகள் முதலிய பிராணிகளும் அவற்றுள் ஒன்றுக்கொன்று அன்பு காட்டி நடந்து கொள்ளுகின்றனவென்றால், ஆறறிவு படைத்த மக்களிடையில் எவ்வளவு அன்பு நிலைத்திருக்க வேண்டுமென்பதை ஊகித்துக் கொள்ளலாம். மக்கள் சகஜமாக ஒருவர்க் கொருவர் உதவி புரிந்து கொண்டு வாழ வேண்டிய இயல்பினராயிருக்கின்றனர். மேலும் மக்கள் பலர் கூடி குடும்பமாகவும், கிராமமாகவும், நகரமாகவும் வாழ்ந்து வருவதே, அவர்களுடைய சுபாவமாகும். ஆகவே, ஒருவருக் கொருவர் உதவி புரிந்து கொண்டு, பலர் கூடி ஒருங்கே வாழ வேண்டுமானால் அவர்கள் ஒற்றுமையோடிருக்க வேண்டும். அவ்வித ஒற்றுமையை யுண்டாக்குவதற்கு அன்பு மிக அவசியம்

மனிதனது உள்ளத்தில் இயல்பாக அன்பு அமைந்திருக்கிறது. அவ்வன்பை அவன் தன் அறியாமையினால் குறைத்தும், முறையற்ற துறையிற் செலுத்தியும் இடர்ப்படுகின்றான். மிகவுங் கொடிய துன்மார்க்கனென்றும், கொலைஞன் என்றும் பெயர் படைத்த ஒருவனும் தன் காதற் கிழத்தியினிடத்திலும், ஆசைக் குழந்தைகளினிடத்திலும் அளவற்ற அன்புகாட்டுவதை காணலாம். எனவே, உலகில் அன்பு இல்லாத உள்ளம் படைத்த மனிதர் இல்லையென்பது நிச்சயம். ஆயினும் இவ்வன்பை நேர்மையான வழியில் வளர்த்துப் பயன்பெறும் மக்களே மிக அருமையாவர்.

ஒருவன் தன்னைப் போன்ற பிறமக்களை அன்புடன் நேசித்தால் மட்டும் போதாது; உயிர் படைத்த

எல்லா ஜீவன்களையும் அன்புடன் நேசித்தல் வேண்டும். ஒரு புறாவின் உயிருக்காக வேண்டி தன் உடலையே அர்ப்பணஞ் செய்யத் துணிந்த சிபிச் சக்கரவர்த்தியின் உதாரணத்தைக் கவனியுங்கள். மகான்கள் பலர் உயிரற்றனவாகக் கருதப்பட்ட ஜடப் பொருள்களிடத்தும் அன்பு பாராட்டி யிருக்கின்றனர். "அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாள்?" என்றபடி அன்புக்கு எல்லை யென்பதில்லை, கொழு கொம்பின்றித் தவித்து நின்ற முல்லைக் கொடிக்குத் தான் ஏறிவந்த இரதத்தைக் கொழு கொம்பாக நிறுத்தி விட்டு, நடந்து தன் வீடு சென்ற தமிழ் நாட்டு மன்னனுடைய அன்பின் எல்லையை நினைத்துப் பாருங்கள்.

அவசியமான அளவுக்கன்றி அதற்கு மேற்பட்டு ஒரு சிறிதளவு காய் கனிகளையும் செடி கொடிகளினின்று பறிக்க ஒருப்படார் பெரியோர். உத்தமமான மனிதனது அன்பானது உலகமனைத்தையுமே இலக்கியமாகக் கொண்டு வளரும். அவ்வாறு அன்புபடைத்த மனிதனே தெய்வத் தன்மை வாய்ந்தவன். தெய்வமே அன்பின் வடிவமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர் "அன்பே சிவம்" என்று வரும் ஆன்றோர் வசனங்களை கவனிக்க. அவ்வாறு இருக்கையில் மனிதர் ஒருவர்க் கொருவர் அன்பின்றி சுயநலத்தைக் கைப்பற்றிக் கலகம் விளைவித்துக் கொண்டிருப்பது மனிதத் தன்மை யாகுமா?

உள்ளமென்னும் குளத்தில் எழும் அன்புஎன்னும் வட்டமானது முதலில் தன் குடும்பம், பிறகு தன் சுற்றத்தார், பின் தன் இனத்தார் என்று முறையே கிராமத்தார், தன் மொழி பேசுபவர், தன் சமயத்தார், தன் தேசத்தார், தன்னைப் போன்ற உலக மக்கள் என வளர்ந்து கடைசியில் இப்பிரபஞ்ச முழுதும் என்ற அளவில் விரிந்து பரவுகின்றது. அப்படி உலகத்தை நேசிக்கப்புகுந்த ஒருவனுக்கு இவ்வுலக முழுதும் சொந்தமாய் விடுகிறது. உலகமே அவரிடத்து அன்பு கொள்ளுகின்றது. அப்படிப்பட்டவருக்கு ஒரு ஜாதி, ஒரு பாஷை, ஒரு சமயம் ஒரு தேசம், என்ற கட்டுப்பாடுகளில்லை. அவை யனைத்தையுங் கடந்து அவரது அன்பின்வாழ்க்கை உலகமெங்கும் வியாபித்து விளங்குவதாகும்.

கவி ரவீந்திரநாத் தாகூருக்கு அன்புகாட்டி வரவேற்புக் கூறாத சாதியும், பாஷையும், சமயமும், நாடும், உலகில் ஒன்றிருந்ததா? ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய பல நாடுகளும் அவரை ஆவலுடன் ஏற்று உபசரித்ததின் இரகசியமென்ன? அவர் ஒரு வங்காளியர் என்பதைமுன்னிட்டா? அல்லது அவர் ஒரு இந்தியர்

என்பதை முன்னிட்டா? இல்லை; இல்லை. அவர் உலகை நேசித்ததை முன்னிட்டேயாகும்.

மகாத்மா காந்தியடிகளை இந்திய நாடு முழுதுமன்றி உலகமே நேசிப்பதன் காரணம் யாது? அவரது அன்பு வட்டம் எல்லை கடந்து சென்றிருப்பதே காரண மல்லவா? காந்தி யடிகளால் நேசிக் கப்படாத அல்லது அன்பு காட்டப் படாத ஒரு பொருள் உலகில் உண்டா? சிந்தியுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஏன் அவ்வாறு மகாத்மாக்களாகக் கூடாது? அவர் தனிப்பட்ட அவதார புருஷர் என் கிறீர்களா? அந்தோ இப்படித்தான் இந்தியர்களாகிய நீங்கள் எண்ணி எண்ணி இக்கதிக்காளானீர்கள். அவதார புருஷர் என்பது ஒரு தனிப்பிறவியன்று.

காந்தி யடிகளே யல்ல, அவ தார புருடர்களென்று நம்மால் பாராட்டப்படும் அனைவருமே சாமானிய மனிதர்களே யாவர். அவர்கள் தம் சுய முயற்சியினாலே யே அப்பேறு பெற்றார்கள். ஆகவே ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, ஒவ்வொருவரும் உங்களிடத் தில் தெய்வீகசக்தி நிறைந்திருக்கிற தெனக் கருதுங்கள். நீங்கள் முயன் றால் அவசியம் ஒவ்வொருவரும் அவதார புருஷர்களாகலாம். என வே இந்தியர்களாகிய நீங்கள் அனை வரும் ஒருவர்க்கொருவர் அன்பு கொண்டு நேசியுங்கள். உங்களில் யாவரும் சரிநிகர் சமானமெனக் கருதுங்கள். உங்களிடையில் குறுக் கிட்டு நிற்கும் சாதி, சமயம், மொழி, நிறம், அந்தஸ்து, உயர்வு, தாழ்வு, பணக்காரன், ஏழை, எஜமானன், அடிமை என்ற வேற்றுமை விளை விக்கும் முள் வேலிகளை யறவே வெட்டி வீழ்த்துங்கள். எல்லை கடந்த அன்பு உங்களிடையில் எழுச்சி யடையட்டும்.

மக்களிடையில் ஒருவர்க்கொரு வரை பிரித்துவைக்கும் வேற்றுமை யுணர்ச்சிகளை, வேரறக் களையும் சாதனம் பொது உடைமைத் தத்து வமே யென்று உலக பேரிகை முழங்கி வருகிறதைக் கவனியுங்கள். உங்கள் உள்ளத்தில் எழும் அன் பின் வட்டம் நமது நாட்டின் அள வுக்கு விரிந்து சென்று, உலக வட்டத்தை எட்ட முயலட்டும். அதுவே உலக சகோதரத்துவத் தின் இலக்கியமாகும். ஆகவே, ஒவ்வொருவரும் தங்கள் அன்பு வட்டத்தைப் பெருக்கி, உலகை நேசித்து, அவ்வழியே உலகில் திருட்டு, வஞ்சனை, பொறாமை, சூது, வாது, கொலை, பகை முதலிய தீமைகளை யொழித்து, எங்கும் இரக்கம், சிநேகம், உபகாரம், சந் தோஷம், சாந்தம் முதலியவற்றை வளர்க்க முயலுவீர்களாக!

கானலில் காதல்

[தூ. நரசிம்மன்.]

சேந்தழல் சூரியனும் — உச்சி
சேர்ந்து கனல் பொழிந்தான்
வெந்துவெந் தேவ்விடமும் — கனல்
விம்ம உயிர்க்குமடா!
வந்தலே மோதுமந்த — ஏரி
வாடி வேடிக்குதடா!
தன்தலே காட்டாமல் — புல்லும்
சாய்ந்து மறைந்ததடா! 1

ஏரிக் கவின் கரையில் — நின்ற
ஏழெட்டு மாமரமும்
வேரை வெளிக்காட்டி — இலே
வீழ்ந்து, கருகுமடா!
நேரும் இடத்திலெலாம் — தரை
நெருப் பெனக்கோதிக்கும்.
பேரும் தெரியாமல் — வெளி
பேய்க்குணம் கொண்டேரியும்! 2

மாடும் எருமைகளும் — மண்ணுய்
வாழ்ந்த சிறுபுல்லேத்
தேடிப் பெருவாயில் — இட்டுத்
தேனெனத் தாமகிழ்ந்து

ஆடி அசைந்தவணம் — நிழல்
ஆர்ந்து சுவைத்திடவே
நாடுமம் மாமரத்தின் — நீண்டு
நலிந்த இன்பநிழல்! 3

ஓட்டும் விழியுடையான் — துன்பம்
ஊறிய ஆயனவன்
கோட்டும் கனலிடையே — அந்தக்
கூட்டத்தை விட்டுவிட்டுப்
பட்ட மரத்தடியில் — நின்று
பாங்கியைப் பார்த்திருந்தான்!
வெட்டும் விழியுடையாள் — கோடும்
வெய்யிலில் காட்சிதந்தாள்! 4

கொளுத்தும் செங்கதிரை — அவன்
கொளுந்திடப் பழித்தான்!
முளைத்த பெண்வரவால் — புது
போகம் உருவெடுக்க,
விளைத்த தீயொளியை — வையம்
வேந்து பழிக்குமதை,
உளத்தும் கொள்ளவில்லை — அவன்
உவகை கொண்டிருந்தான்! 5

கானல் வெளியிலவள் — கனக
கள்ளொழு குஞ்சோலை!
தேனும், பழச்சாறும் — அவள்
தீஞ்சொல் தமிழ் அமிழ்தம்!
மீன விழிப்பார்வை — அலை
வீசும் பெருங்கடலாம்!
கானல் வெளியிலவன் — கண்ட
காட்சிகள் பொய்யிலையே! 6

"அமைதியும் அழகும்"

[எம். எஸ், கமலா.]

நிதானமாய் என் பின்னிருந்த கதவுகள் மூடப்பட்டன. இத்தனை நேரம் கலகலப்புடன் பேச்சும், நகைப்புமாய் நிரம்பி எதிரொலித்த அறை நிசப்தமாயிருந்தது. தரையைப்பார்த்துக் கவிழ்ந்த என் இமைகளைச்சிறிதே மேலெடுத்து அறையை ஒருமுறைபார்த்தேன். எல்லாம் நான் நினைத்தபடியேயிருந்தது. தூயவெள்ளைத்துப்பட்டிகள்விரித்து மூடியிருக்கும் இரு பஞ்சணை மெத்தைகள் பூச்சரங்களுடனும் உதிர்ந்த மலர்களுடனும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

அந்த இரவை நான் எத்தனையோ விதமாய் எண்ணி உற்சாகத்துடன் உணர்ச்சி வசப்பட்டு மகிழும்போது, எங்கிருந்தோ வெட்கம் தோன்றி என்னை நையாண்டி செய்யும். மெள்ள தலையை நிமிர்ந்துவெட்கத்துடன் அந்த இன்ப இரவிற்கு அதிநாதனைப்பார்த்தேன். என் தலை சுழன்றது. என்னைச்சமாளித்துக் கொண்டு மறுபடியும் பார்த்தேன், அதே காட்சி. கட்டிலின்மேல் அமர்ந்திருக்கும் என் கணவரின் கரிய உருவம், சிறிய கண்கள், பார்க்கவிகாரமாயிருக்கிறார். என்கால்கள் தரையில் நிற்கமறுத்தன. என் அறிவற்ற செய்கைக்கு என்னை நானே நொந்துகொண்டேன் வரனைப்பார்க்காமல் என் மணந்து கொண்டேன். என்பெற்றோர்கள் தான் பார்த்தார்களே! அவர்கள் என்சொல்லவில்லை? அவர்கள் அவரின் செல்வத்தைப் பார்த்தார்கள். அழகைப்பார்த்தார்களா? என்று தோன்றியதும் என் கோபம் அவர்கள் மேல் பாய்ந்தது அங்கிருந்து மெள்ள மெள்ள என் கோபம் என்னைப்படைத்தவன்மேல் தாவியது. அங்கிருந்து குதித்து என்னைத்தொட்டுத்தாலி கட்டியவர் மேல் போய் நின்றது. என்மனத்துள் ஆயிரமாயிரம் ஆலோசனைகள் தோன்றி மறைந்தன.

"ரவிப்ரியா! என்று அவர் எவ்வளவோ அன்பாய் மென்மையாய் அழைத்தபடி என் அருகில் வந்தார். எனக்கு அவர் அன்பையோ, மென்மையையோ அறியும் சக்தி அச்சமயமில்லை. அவர் என்முகவாய்க்கட்டையைப் பிடித்து குனிந்திருக்கும் என் தலையை நிமிர்த்தினார்.

நான்கண்களை மூடிக்கொண்டு 'எனக்கு தூக்கம் வருகிறது" என்றேன். அவர்போய்அவர்படுக்கையில்

படுத்தார் தயங்கியபடியே. நான் என் படுக்கையில் சாய்ந்தேன். என்மனம் நிலைகொள்ளாது துடிதுடித்தது. "அந்தோ கடவுளே! இந்தகுரூபியுடனு நான் காலம்முழுவதும் கூடிவாழ வேண்டும். நான் செய்தபாபம் யாது? என்வாழ்க்கைகானில்காய்ந்த நிலவா? எனக்கேன் இந்தக்கலியாணத்தைச் செய்தனர்? நான் என் முன்பே மணமகனைப் பார்க்காமல் போனேன். பாழாய்ப்போன இந்து சமூகத்தில் விவாகரத்தும் பயன் இல்லையே! இனிஎன் வாழ்வு இப்படியேதானு? என்று மூச்சுத்திணற யோசனை செய்து கொண்டிருந்தேன். மெள்ள அவர்படுக்கையைத்திரும்பிப்பார்த்தேன். அவர் நிச்சலமாய்தூங்கிக்கொண்டிருந்தார். என்தலையணைமுக்கால்பகுதிநனைந்துவிட்டது. என்விக்கலும் விம்மலும் யார் காதிலாகிலும் கேட்டு விட்டாலென்ன செய்வதென்ற அச்சமும் கூடவே தோன்றியது. தலையணைக்குள் முகத்தைப்பதித்துக் கொண்டேன். எப்பொழுது கண்ணயர்ந்தேனே அறியேன். விடிந்து வெகு நேரத்திற்குப்பின் விழித்துக்கொண்டேன். என்னை மாமியார் வீட்டுக்கழைத்து வந்து விட்டார்கள். குடித்தனம் செய்ய.

அன்று மாலை நான் தனியாய் என் அறையில் நிலைக்கண்ணுடி முன்நின்று நெற்றிக்கிட்டுக்கொண்டிருந்தேன். என் பின்புறமிருந்த சன்னல் கம்பிகளினூடே உள்ளே நுழைந்த ஒருரோஜாகிளையில் மலரும் மொட்டுகளும் குலுங்கிக்கொண்டிருந்தன. கண்ணுடியில் அந்த அழகான மலர்கிளையின் பிரதிபிம்பம் என்தலையைத்தழுவி முத்தமிட வருவதைப் போலிருந்தது. அந்த அழகில் என்னை மறந்து நின்றேன். என் அறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அவர் ஒருசிறிய பெட்டியுடன் உள்ளே வந்தார். என் கையில் அந்த பெட்டியை அளித்து,

"ரவி! இதிலிருக்கும் நகைகளை நீ இன்று அணிந்துகொள்ளவேண்டுமென்பது என் விருப்பம். என் தாயும், பாட்டியும் இந்த நகைகளை அணிந்திருந்தார்களாம். இது மகா அதிருஷ்டமுள்ள நகைகளென்பது அவர்களின் நம்பிக்கை" என்ருர்.

எனக்குக் கோபம் பற்றிக்கொண்டுவந்தது. 'அதிருஷ்டம்... இன்னும் எனக்கு அதிருஷ்டம் கூடவா? அவர், அதை நான் வாங்கிப் பார்த்து அணிந்துகொள்வேனென்றும், பார்த்துப் போகலாமென்றும் சிறிது நேரம் நின்ருர். நான் பேசாமலிருக்கவே அவர் சென்றுவிட்டார்.

அவர் சென்றபின் நான் பெட்டியைத் திறந்துபார்த்தேன். அதில் ஒரு வைர நெக்லெஸ், ஒரு ஜதை வைர வளையல், ஒரு வைர மோதிரம் இருந்தன. அவைகளின்

MADURA TAMIL

வேலைப்பாடு அதி அற்புதமாயிருந்தது. கண்ணாடிமுன் நின்று அவைகளை அணிந்துகொண்டேன். என் அழகைக்கண்டு நானே வியப்பிலாழ்ந்தேன். ஒவ்வொரு பெண்ணும் என்னைக்கண்டால் கட்டாயம் பொறாமைப்படுவாள். இதற்குள் என் கணவர் நினைப்பிற்கு வந்தார். அவர்மேலிருந்த வெறுப்பு நெக்லஸ் மேலும் தோன்றவே கழற்றி வைத்துவிட்டு, உடுத்தியிருந்த பட்டுப் புடவையையும் அவிழ்த்து சாதாரண நூல் சேலையுடுத்தி வெளியில் வந்தேன். என்னைக் கண்ட அவர் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்துகொண்டு பார்த்தார்.

அன்று மாடிப்படிகளில் இறங்கி வந்துகொண்டிருக்கிறேன். "இவளைப் பார்த்தாயா? சௌந்தர்யத்தை உருக்கி உருவாக்கியது போலிருக்கிறாள்" என்றாள் பெருமையாய் என் கணவரின் அத்தை மகள்.

"அவள் கணவன் மிருகம் போலிருக்கிறான். என்ன தாம்பத்யமோ?" என்றாள் அவள் மாமியார். இவைகளை கேட்டுக்கொண்டேவந்த எனக்கு கர்வம் தலைக்கேறியது. அழகுக்கேற்ற குணமுமிருப்பதாய் அனைவரும் நினைக்க வேண்டுமென்று வேலைக்காரர்களிடம் கருணையுடன் நடந்துகொள்வேன். அவர் மேல் கடுகத்தனை இஷ்டமில்லாவிடினும் பிறர்முன் அவரிடம் அன்பாய் ஓர் மனைவிக்குரிய கடமைகளை செய்து என்னை அனைவரும் புகழும்படி நடந்தேன்.

அன்று இரவு அவர் "ரவீ! நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்! எத்தனை நல்லவளாயிருக்கிறாய்?" என்றதுமே என்னுள் ஒளிந்துகொண்டிருந்த கர்வமும் பொறாமையும் தலையெடுத்தன. "அது எனக்குத் தெரியும்" என்று சீறினேன். பாவம். அவர் அழகுக்குள் புதைந்திருப்பது சாதாரண அன்பு மனைவியல்ல. அருவருப்புக்கொண்ட ஒரு பெண் என்பதை அறியாத அவர் ஆச்சரியத்துடன் என் முகத்தை உற்று நோக்கினார். அங்கும் அந்த எண்ணமின்னல்களே தோன்றவும் அவர் வாய் பேசாமல் போய் படுத்துக் கொண்டார்.

காலை நான் கண் விழித்த போது மேஜையின் மேல் சில ரோஜா மலர்கள், மோதிரமிருந்தன. அவைகளை யார் அவ்விடம் வைத்தார்களென்பது எனக்குத் தெரியும். நான் முதல் நாள் யாரிடமோ எனக்கு ரோஜா மலர்களின் மேலிருக்கும் ஆசையை சொல்லும் போது அவர் கேட்டார். சாப்பாட்டிற்குச் சென்றால் எனக்கு விருப்பமான சமையல் செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும் நான் விழித்துக் கொள்ளும்போது ஏதாவது ஒரு வெகுமதியுடன் சில மலர்கள் மேஜையின் மேல் காட்சியளிக்கும். அந்த வெகுமதிகள் விலையு

யர்ந்த பொருள்களாயிருக்கும். வீட்டை அலங்கரிக்கும் முறையிலிருந்து விதவித தின்பண்டங்கள் செய்யும் வரை எனக்குப்பிடித்தமான முறையில் சித்தப்படுத்துவதைப் பார்த்து எனக்கே ஆச்சரியமாகிவிட்டது. என் விருப்பு வெறுப்புகளைஇவர்எப்படி அறிந்தார்?

அவர் அத்தனை அன்பும், ஆதரவும், பரிவும் காட்டினாலும் நான் மாத்திரம் அவர் என் முன் வந்தால் முகத்தைத் திருப்பிக் கொள்வதை விடவில்லை. ஓரிரண்டுமுறை அவர் என்னிடம் பேச வந்தபோது சீறி விழுந்ததால் அவர் என்னிடம் பேசுவதை விட்டுவிட்டார். ஆயினும் அவர் என்னிடம் காட்டும் அன்பு கடுகத்தனையும் குறையவில்லை. அதற்குப்பதில் வளர்ந்துகொண்டே போயிற்று. நான் என் வெறுப்பை நிர்தாக்ஷண்யமாய் காட்டக் காட்ட அவர் சாந்தம் ஆதரவில் அன்பில் பிரதிபலித்தது. ஒவ்வொரு சமயம் என்மேல் எனக்கே கோபம் வரும். நான் கடினமாய் அவரை வெறுக்க வெறுக்க அவர் என்பால் அன்பின் உருவாய் தோன்றுவதை நினைத்து, அன்று என் சௌந்தர்யத்தையும் அவர் அழகையும் ஒப்பிட்டு ''என்ன தாம்பத்யமோ?'' என்று அவர் உறவினர்கள்சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்து என்னை நிலைகலக்கச் செய்யும். அத்துடன் என் குணம் பழைய பாதையிலேயே செல்லும்.

அன்பும், வெறுப்புமாகவே நாட்கள் கரைந்தன. வாரங்கள் வந்து வந்து நின்றன. மாதங்கள் மறைந்தன. ஒருநாள் இரவு பதினொரு மணியும் அடித்துவிட்டது. தூக்கம் வரவில்லை. ஒருத்தியாயிருப்பது அருவருப்பாயிருந்தது. வர வர எத்தனை நிறைந்திருந்தாலும் என்னிடம் ஏதோ ஒரு குறைவு ஒண்டியாயிருப்பதில் வேதனை அதிகரித்து என்னை வதைத்தது. ஒன்றும் தோன்றவில்லை. ஏதாவது புஸ்தகமாவது எடுத்துவந்து படிக்கலாமென்று புத்தக அறைக்குச் சென்றேன். அந்த அறையில் கண்ட காட்சி என்னை ஆச்சரியத்திலாழ்த்தியது.

அவர் நாற்காலியில் சாய்ந்து கையிலொரு புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டிருந்தார். அவர் கையில் புத்தகமிருந்ததேஒழிய அவர் அதைப் படிப்பதாய்த்தோன்றவில்லை. எங்கோ வெட்ட வெளியை உற்று நோக்கிக்கொண்டு வேதனையுடன் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் அறைக்குள் போகலாமா? வேண்டாமா? என்று ஒருக்ஷணம் யோசித்து என் அறைக்குச்செல்லத் திரும்பினேன்.

என் கை அறைக் கதவின்மேல் பட்டு வளையல்கள் ஒலித்தன. அந்த ஓசை கேட்டு அவர் திரும்பிப் பார்த்தார். நான் இரண்டடி முன் வைத்தேன்.

"ரவி! கொஞ்சம் இங்கு வருகிறாயா? உன்னுடன் பேசவேண்டும்" என்றார். அவர் குரலில் அன்புடன் கெம்பீரமும் சேர்ந்து ஒலித்தது. நான் தயங்கியபடி அறைக்குள் சென்றேன்.

அவர் சொன்னார் "ரவி! உன்னை எனக்குக் கொடுத்து மணமுடித்தது அநியாயம்தான். உன் அழகிற்கு நான் ஏற்றவனல்ல. உன் அவஸ்தையை நான் அறிந்துகொண்டேன். உன்னை நான் முழுமனதுடன் நேசிக்கிறேன். நீ என்னை நேசிக்கவில்லையென்பது எனக்குத் தெரியும். ஆனால் ஆனதென்னவோ ஆகிவிட்டது. உன் வாழ்க்கை இப்படி வீணாவதை நான் விரும்பவில்லை. நேற்று ஒரு சட்ட நிபுணரிடம் விஷயத்தைச் சொல்லி வழியைக் கேட்டேன். "நான் மனப்பூர்வமாய் உன்மேலிருக்கும் உரிமைகளை உதறிவிட்டதாக எழுதிக்கொடுத்தால் நீ மறுமணம் செய்துகொள்ளலாம்" என்று சொன்னார். ஆகையால் உனக்குகந்த அழகான வாலிபனை மணந்து நீ சந்தோஷமாய் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது என் மனமார்ந்த விருப்பம்" என்றார்.

என் காதுகளை நான் நம்பவில்லை. நின்றுகொண்டிருந்தவள் சுவரில் சாய்ந்து அவர் முகத்தையே பார்த்தேன். எனக்கு அவர் சொல்வது விளங்கவில்லை. மறுபடியும் அவர் சொல்லத் தொடங்கினார்.

"ரவி! நான் சொல்வதை நன்கு கவனித்துப் புரிந்துகொள். நான் மறுபடியும் மணம்செய்து கொள்வேனென்று நினைக்கிறாயா? அது இனி இந்தஜென்மத்திலில்லை. உன்னை அறிந்து, உன் குணத்தை தெரிந்துகொண்டபின் நான் அந்த விஷயத்தைக் கனவிலும் நினைப்பது கடினம்" என்றார்.

அச்சமயம்...அந்த நிலையில்... என் உள்ளம்விழித்துக்கொண்டது. என் உடல் கிடுகிடென்று ஆடியது. அவர் சிறிய கண்களில் ஏதோ "சௌந்தர்யம், சாந்தத்தின் கவர்ச்சி அந்த கரிய உடலில் தூய உள்ளம். அந்த உள்ளம்தான் எத்தனை விரிந்தது. அலைகடலைவிட. எத்தனை உதாரம். என் உதடு துடித்தது. கண்கள் நீரை வடித்தன. குலுங்கிக் குலுங்கி அழுதேன்.

"அழாதே ரவீ! வேதனையுடன் வெளி வேஷத்துடன் ஏன் வெந்து மடிகிறாய்?" என்றார்.

இதைவிட அவர் என்னை சித்திரவதை செய்தாலும் இன்பமாய் இருக்கும் போல் தோன்றியது.

‘என்னை மன்னிக்க மாட்டீர்களா’’? என்று அவர் கால்களில் வீழ்ந்தேன்.

“ரவீ! எழுந்திரு!! உன் மனம் சரியான நிலையிலில்லை! நன்றாய் யோசனை செய்’’ என்று என்னை எடுக்கவந்தார். நான் அவர் கால்களைவிடவில்லை.

“என்னை மன்னியுங்கள். நான் முதலிலிருந்து உங்களை என் இதயத்தின் மூலையில் எங்கோ நேசித்துக்கொண்டேயிருக்கிறேன். அது இன்றுதான் வெளிப்பட்டது. என்னை மன்னியுங்கள். தயவு செய்து மன்னியுங்கள்’’ என்று கதறினேன்.

அவர் என்னை எழுப்பி “உன் மனம் சரியானநிலையிலில்லை. நிதானமாய் யோசனை செய்’’ என்றார்.

“இல்லை. யோசிக்கவே வேண்டாம். நான் உங்களை நேசித்துக் கொண்டே யிருக்கிறேன். நீங்கள் என்னை நேசிப்பதை விடவில்லையே?’’ என்றுஅவர் மார்பில் சாய்ந்தேன்

“உன்னை நேசிப்பதை மறப்பதென்பது என் சக்திக்கு அதீதமானது. நேசிப்பதை மறக்கச் செய்பவளல்லவே நீ!’’ என்று அவர் என்னை அவர் உள்ளத்துடன் அழுத்திக்கொண்டார்.

மறுநாள் விடிந்ததும் சௌந்தர்யம் மிருகம் என்பது நினைவிற்கு வந்தது. அந்த எண்ணம் அறவே மறந்துவிட்டது. முதல்நாள் இரவே என் அழகிற்குள் புகுந்திருந்த மிருகத்தனமும், அவர் அமைதியுள் இருந்த தெய்வீக அன்பும் என்முன் நின்று என்னைத் தலைகுனியச் செய்தது. உண்மையில் “அழகும் அமைதியும்’’ நிறைந்துள்ள அவர் குணத்திற்கு முன் நான் ஒரு மிருகக்குணம் படைத்தவள்தானே. கடவுள் இப்போதாவது என் கண்ணைத் திறந்துவிட்டதற்கு அவரை நான் என்றும் போற்றிக் கொண்டிருக்கிறேன்.

நடுவு நிலைமை

[திக்குறள் மணி, தி. ப. சுப்பிரமணிய தாஸ்]

நடுவு நிலைமை என்பது உலக வாழ்க்கையில் தங்கி மனை மக்கள் சுற்றத்தாரொடு வாழ்கின்றவர்கள் நடுவு நிலைமையோடு நின்று இவர் பகைவர், இவர் நட்பினர், இவர் சுற்றத்தார், இவர் அயலார், இவர் ஏழை, இவர் செல்வர் என்ற எவ்வித வேற்றுமையும் கருதாது யாவரிடத்தும் ஒப்ப ஒழுகுவது. இந் நடுவு நிலைமை என்கின்ற அறம் மனதின் தூய்மையைப் பொறுத்து நிற்றலால் மன மாசற்றவர்க்கே இவ்வறம் பயன் படுவதல்லது மாசறுதார்க்குச் சிறிதும் பொருந்துவதன்று. அதனால்தான் வள்ளுவனார் நடு நிற்றல் என்கின்ற இப்பேரறத்தை மல்லா அறங்களிலும் மேலாக வைத்துக் கூறினர். அதனை ......யில் வருமாறு காண்க.

"தகுதி யெனவொன்று
நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப்பெறின்"
— குறள்

அதாவது, நட்பினன், உறவினன், மேலோன், கீழோன் என்ற வித்தியாசமில்லாமல் யாவரையும் ஒன்று போல் மதித்து நடுநிலைமை தவறாது வாழ்வாரையின் அவனுக்கு இந்த ஓரறமுமே அமையும் வேறெந்த அறமும் வேண்டுவதின்று என்கின்றார். இதில் "பாற்பட்டு ஒழுகப் பெறின்" என்றமையால் யாவரையும் ஒன்று போல் மதித்து ஒழுகுந் தன்மை ஒருவனிடத்து அமைவது அரிதுதான். ஆனால் அது அமையுமாயின் அதனை ஒத்த அறமேயில்லை என்பது இதனால் நன்கு விளங்கும். உதாரணமாய் சென்னைச் சட்ட மந்திரியாயிருந்த திரு. கிருஷ்ண நாயர் என்ன சொன்னார் தெரியுமா? எனது மலையாளிகளுக்கெல்லாம் வேலை கொடுத்து முடிந்த பின்னர்தான் மற்றவர்கள் கவனிக்கப்படுவார்கள். அதுகாறும் எந்த மனுவையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று

சொன்னது நினைவிருக்கலாம். இவர் இவ்வாறு கூறியது நடுவு நிலைமைதானா? இல்லவேயில்லை. தகுதி வாய்ந்தவன் எவனோ அவனை நியமிப்பது தானே நடு நிலைமை. இது மாத்திரந்தானோ! சென்னையில் 6 மாதம் இடைக் கால கவர்னராயிருந்த திரு. உஸ்மான் சாகிப் அவர்களும் இவ்வாறே என்ன கூறினார் தெரியுமா? எங்கள் முஸ்லீம் களுக்கெல்லாம் வேலை நிரம்பிய பின்னர்தான் மற்றவர்கள் வேலைக்கு உரிமையுடையராவர் என்றார். இனப்பற்று அவசி யம் - வேண்டப்படுவதாயினும், மனித சுபாவத்தில இதுவும் ஒன் றாயினும் நடுவு நிலைமை என் கின்ற பேரறங் கலவாத மனித சுபாவம் என்றுதான் கூறு கின்றார் வள்ளுவனார்.

இந்தக் குறட்பாவால் என்ன விளங்கிற்றெனின், மிகச் சிறந்த மேலோர்களிடத்தும் நடுவு நிலைமை என்கின்ற ஓர் ஒப்பற்ற அறத்தைக் காண்பதென்றால் கலீலியோ கண்டுபிடித்த தொலை நோக்காடி இல்லாமல் முடியா தென்றே கூறிவிடலாம். இன் னும் எத்தனையோ மேலோர்களை உதாரணங்காட்டுவதென்றால்அது ஓர் பெரு நூலாகவே போமென் பதை உணர்ந்தே நிறுத்து கின்றோம். ஒரு சின்ன உதா ரணத்தை மாத்திரம் கூறவிரும்பு கின்றேன். அதாவது தமிழ் நாட்டிலே மிகவும்சிறப்புவாய்ந்த ஓர் கோவிலுக்குச் சென்றபோது அங்குள்ள சேவகர்களும் இன் னும் சில வேலைக்காரர்களும் தெலுங்கு பேசுவதையே பெரும் பான்மையும் கேட்டேன். தமிழ் நாட்டிலே தெலுங்கு பேசும் காரணத்தை அறிவான் கருதி இங்கு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் யாரென்று கேட்டேன். அதற்கு அவர் பெயர் சொல்ல வருந்தி ஓர் நாயுடு என்றார். போதும் போதும் காரணம் நன்றாய் விளங்கிற்று என்று என்னிடம் அவ்வுண்மையினை விரித்துக் கூறினார் ஓர் நண்பர். சாதி, மதம், சாத்திரம், கோத்திரம் முதலிய விடங்களிலே நடுவு நிலைமைக்கு இடமே கிடைப்ப தில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

மனிதர்களிடத்திலே நேருக்கு நேராய் ஒருவர் நடுநிலைமை தவறி நடப்பராயின் சாதாரண பொது மக்களிடத்தில் அதனை எவ்வாறு காண முடியும்?

பொருள் சம்பாதிக்கும் போதும் நடுவுநிலைமையை மறத்தல் கூடா தென்பது வள்ளுவனார் கருத் தென்பதை அடியிற்காண்பீராக.

"செப்ப முடையவன்
ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து"
— குறள்

அதாவது, செப்பம் என்றால் நடுவு நிலைமை என்று பொருள். இந்த செப்பமாகிய நடுவு நிலைமையை மறவாதவனது செல்வம் ஒரு காலத்திலும் அழிந்து போகாமல் அவனது வழித் தோன்றலாகிய மக்களுக் கும் துணைசெய்யும் என்கின்றார். இதனால் நடுவு நிலைமையை மறந்து சம்பாதிக்கின்றவனது செல்வம் அவன் காலத்திலேயே அழிந்துவிடும் என்பது உண்மை என்பதாய் அறிகின்றோம். தற் கால மக்களிலே சிலர் என்ன கருதுகின்றார்கள் என்றால் எப்படியும் பணத்தை மிகுதி யாய்ச் சேர்த்துவிட வேண்டும். ஏகதேசமாய் அவருக்கு இணை யாக இவரும் உயர்ந்துவிட்டார் என்று சொல்லவேண்டும் என்று நினைப்பதல்லது நமது செல்வம் எக்காலமும் அழியாமல் நிற்க வேண்டும். நமது மக்களுக்கும் நின்று உதவ வேண்டும் என்று நினைப்பதேயில்லை. எத்தனையோ அரசர்கள், சமீன்கள், பெருஞ் செல்வர்களெல்லாம் தற்போது என்ன கதியை அடைந்திருக் கிறார்கள் என்பதை உணராமல் மனந் தோன்றியவாறு நடப்பது மனித சுபாவத்திற்கே பேரிழுக் காம் என்பதறிக. அன்றியும்

"நன்றே தரினும்
நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல்"
— குறள்

என்ற அருமைத் திருக்குறளை அறிஞர்களே நன்கறிவர். அதா வது நடுவு நிலைமைக்கு மாறாக வரும் செல்வமானது ஒரு நன்மையையும் பயவாது என் பது உண்மை. ஆனால் பல நன்மைகளைத் தருவதாயிருப்பி- னுங்கூட அச்செல்வத்தை அன் றே, அப்பொழுதே ஏற்றுக்கொள் ளாது விட்டுவிடவேண்டும் என் கின்றார். இதனால் நடுவின்றி வரும் செல்வம் அதி விரைவில் அழிவது உறுதி யென்பது நன்கு விளங்கிற்று.

இந்த நடுவு நிலைமை என்ற பகுதியில் ஒரு குறட்பாவின் பொருளைப் பலவிடங்களிலும் இன்றும் ஓர்முடிவுக்கு வராமலே பேசிக் கொண்டிருக்கின்றனர்.

அதனை அடியில் வருமாறு ஆராய்வாம்.

"தக்கார் தகவிலர்
என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"
—குறள்

அதாவது, இவர்நடுவுநிலைமையை யுடையவர். இவர் நடுவு நிலைமை யில்லாதவர் என்று ஒருவரது பெருமை சிறுமைகளை அளந்தறிதற்கு அவரவர்களின் மக்களது அறிவு குணம் சீலங்களால் மாத்திரமே அறியமுடியும் என்கின்றார்.

அதாவது மக்கள் பழிபிறங்காப் பண்புடை மக்களாயிருப்பின் தந்தையும் தகுதியுடையவர்தான். மக்களிடத்து சாலச்சிறந்த சீல மில்லையாயின் தந்தையும் சீர்கேடுற்றவர்தான் என்பது இதன் கருத்து.

இதனால் நல்லோர்க்கே நல்ல பிள்ளைகள் பிறத்தலும், தீயோர்க்கு அப் பிள்ளைகள் பிறவாதிருத்தலும்உண்டாமென்பது பெற்றும்.

இவ்வுண்மையினை உலகத்தாராகிய பாமரரும் மற்றையோரும் எவ்வாறு கூறுகின்றனர் எனின் வள்ளுவனார் வாக்கின்படி பிள்ளைகளைக் கொண்டு தான் தந்தையாரின் மேன்மை கீழ்மைகளை அறியமுடியுமாயின் நல்ல தந்தைக்குப் பொல்லாத பிள்ளைகளும், பொல்லாத தந்தைக்கு நல்லபிள்ளைகளும் பிறக்கின்றனவே! அங்ஙனமாயின் பிள்ளைகளைக் கொண்டு தந்தையின் தன்மையை அறிவதெப்படி? இது பொருந்தாத முரணாகவிருக்கின்றதே! என்கின்றனர்.

ஒரு தந்தையை, நல்லவர் அல்லது தீயவர் என்று சொல்லுதற்குக் காரணமாயிருந்தது எது? அவரது செயல்தானே காரணமாய் இருந்தது. செயலைக் கொண்டுதானே நல்லவர் அல்லது தீயவர் என்று சொன்னார். அங்ஙனமாயின் செயலைக் கொண்டு நடுவு நிலைமையை அறியவே முடியாது. நடுவு நிலைமை என்பது மனத் தூய்மையைப் பொறுத்திருக்கின்றது. மனமாசுடையார் நல்லவர் போல் நடித்துவாழலாம். நடிப்பால் நல்லவரென்று சொன்னதல்லது மன[illegible] நுழைந்து பார்த்திருக்கவே இல்லை. ஆதலால் யோக்கியரைப் போல் நடித்து வாழ்கின்ற மனமாசுடைய அயோக்கியருக்குக் கெட்ட பிள்ளைதானே பிறக்கும்.

For Everything in
Artistic Engraving Half tone
Line and Tricolour Blocks and
Rubber Stamps

PLEASE CALL AT
OR RING UP 86729

NEWTON & CO.,
80, Wallajah Road, Mount Road,
MADRAS 2.

[108-ம் பக்கத் தொடர்ச்சி]

நடிப்பால் நல்லவரென்று பட்டம் பெற்ற ஒருவரை நோக்கி ஐயா உமக்கு இப்படியும் பிள்ளைகள் பிறக்கலாமா, மிக நல்லவராயிற்றே மிகவும் உத்தமரல்லவா என்று கூறினால் அவர் நல்லவர் என்பதை அவரே ஒத்துக் கொள்ளமாட்டார் ஏன்? நாம் நல்லவரென்று நடித்து வாழ்ந்ததல்லது உண்மையில் நம்மைப் போல எந்த மனிதனும் அயோக்கியனாய் வாழ்ந்திருக்கவே முடியாது; ஆதலால் அயோக்கியனுக்கு இந்தப்பிள்ளை பிறந்தது சரிதான் என்று வெளியில் கூறாவிடினும் தன் மனதோடு கூறிக் கொண்டுதான் இருப்பர். இதனால் நல்லவன் கெட்டவன் என்பதைச் சொல்லாலும் செயலாலும் அறிதல் அரிது. இவர்களுக்கெல்லாம் பதில் கூறுவது போல் ஒரே குறட்பாவினால் கூறிவிட்டார். அதனை அடியிற்கண்டு தெளிக.

"மனந்தூயார்க் கெச்சம்
நன்றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை"-குறள்

நடுவு நிலைமை என்பது மனதின் தூய்மையைத் துணையாகக் கொண்டிருத்தலால் மனமாசற்றவர்க்கே நல்ல பிள்ளைகள் பிறக்குமென்றும் மனமாசற்ற நடுவு நிலைமையைச் சொல்லாலும் செயலாலும் அறிய முடியாதென்றும், மக்களது அரிய குணங்களால் மாத்திரமே தந்தையின் தன்மையை அறிய முடியுமென்றும் இதனால் நன்கு விளங்கிற்றல்லவா?

மகளிர்க்கு விஞ்ஞான உதவி

★

"விஞ்ஞானிகள் எவ்வளவோ புதிய புதிய சாதனங்களைக் கண்டு பிடிக்கின்றனர். ஆனால் வீட்டிலும் ஒருத்தி இருக்கிறாளே, அவள் பொழுது புலர்ந்து பொழுது போகும் வரை எவ்வளவோ வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறதே; காலையில் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு புறப்படுவதற்கு முன் சாப்பாடு தயார் செய்யவேண்டும்... அந்தக் கவலை தீருவதற்குள் கணவர் ஆபீசுக்கு புறப்பட்டாகவேண்டும்... எங்களுடைய வேலைகளைச் சுலபமாக்க ஏதாவது சாதனங்கள் தயாரிக்கக்கூடாதா?" என்று மனைவிமார்கள் விஞ்ஞானிகளிடம் குறைப்பட்டு வந்த காலம் மலையேறி விட்டது.

வீட்டுவேலைகளின் காரணமாக ஸ்திரீகளுக்கு ஏற்படும் சிரமத்தை நீக்குவதற்கான வழிதுறைகளைக் கண்டுபிடிப்பதற்காக லண்டன் சுகாதாரப் பள்ளியைச் சேர்ந்த பேராசியர் மேக்கின்டோஷ் தற்போது ஆராய்ச்சி செய்துவருகிறார். இவருடைய மேற்பார்வையின் கீழ் 50 வைத்திய மாணவர்கள் பிரிட்டனிலுள்ள பல்வேறு குடும்பங்களுக்கு விஜயம்செய்து மனைவிமார்கள் வேலை செய்வதை நேரில் கவனித்து அதுபோது கிடைக்கும் உண்மைகளை சேகரித்து வருகின்றனர். இவர்களுடைய இக் குறிப்புகளிலிருந்து காலவிரயமின்றி சுலபமாக வீட்டு வேலைகளைச் செய்வதற்கான பல புதிய முறைகள் கண்டுபிடிக்கப் படலாம். உலக முழுவதிலும் "மனைவியே பிரதம வாடிக்கைக்காரர்" என்று நினைக்கும் உற்பத்தியாளர்களுக்கு இவ்விஞ்ஞான குறிப்புகள் முக்கியமாகப் பயன்படும்.

பர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர், ஸாடீக்கர்மேன் என்பவரும் மனைவிமார்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு வழி கண்டுபிடிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளார். இவர் சமீபத்தில் கண்டுபிடித்துள்ள ஒரு சாதனத்தைக்கொண்டு வீட்டுவேலைகள் செய்யும்போது தேகத்திற்கு எவ்வளவு சிரமம் ஏற்படுகிறதென்பதைக் கண்டுபிடித்துவிடலாம். வீட்டு வேலைகளைப்பற்றி மனைவிமார்களின் எண்ணம் என்ன என்பதை மனோதத்துவ ரீதியில் அறிவதற்கான திட்டங்களும் தற்போது

தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் மூலம் வீடுகளுக்கான சாதனங்கள் தயாரிக்கும் தொழிலுக்கு பிரிட்டன் விஞ்ஞான ரீதியில் உதவி அளிக்க முடியும்.

வீட்டுவேலைகளைச் சுலபமாக்க பிரிடிஷ் உற்பத்தியாளர்கள் மனைவிமார்களுக்கு இதுவரை உதவவில்லையோ என எவரும் நினைத்துவிடக் கூடாது. ஏற்கனவே பல பிரிட்டிஷ் தொழில் நிலையங்கள் தங்களுடைய சொந்த முயற்சிமூலம் பல சாதனங்களைத் தயாரித்துள்ளது. இவைகள் தற்போது மலிவான விலையில் மார்க்கெட்டுகளும் கிடைக்கின்றன. இந்த உற்பத்தியாளர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சி உதவியும் கிடைத்தால் ஒருவேளை குடும்ப வாழ்க்கையிலேயே ஒரு புதிய சகாப்தத்தை அவர்கள் ஆரம்பித்துவிடுவார்கள். இனி அவ்வுற்பத்தியாளர்கள் இதுவரை தயாரித்துள்ள சாதனங்களைப் பார்க்கலாம். உங்களுடைய மனைவி லட்சுமிக்குக்கூட இவை நிரம்ப பிடித்துவிடும்!

உதாரணமாக இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ்வாக்கூம், கிளீனர் தொழிற் ஸ்தாபனம் தயாரித்து வரும் "தானாக டீ போடும்" சாதனத்தை எடுத்துக் கொள்வோம். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் லட்சுமி ஒரு பிரிசெட் கடிகாரத்திடம் எத்தனை மணிக்கு டீ தயாராக வேண்டுமென்பதை சொல்ல வேண்டியதுதான். குறித்த மணிப்படி இக்கடிகாரம் மின்சார கெட்டிலுள்ள தண்ணீரைக் கொதிக்க வைத்து, வெந்நீரை தேயிலை உள்ள பாத்திரத்தில் ஊற்றி உறங்கிக் கொண்டிருக்கும் லட்சுமியை எழுப்புவதற்காக மணி அடிப்பது மூலம் சமிக்ஞை தருகிறது. "டீ தயாராகிவிட்டது படுக்கையிலிருந்து எழுந்திருக்கவும்" என்பதற்கான சமிக்ஞைதான் அந்தமணி. இதற்கிடையில் மற்றொரு "மின்சார நீர் கொதிப்பான்" இரவு நேரத்தில் போதுமான அளவு தண்ணீரைச் சுடப்படுத்தி காலை ஸ்நானத்திற்கு தயாராக வைத்திருக்கிறது.

"ரேடியோ அடுப்பு"

மிடில் செக்ஸிலுள்ள மின்சார தொழில் ஸ்தாபனத்தார் அபிவிருத்திசெய்துள்ள ஒரு "ரேடியோ அடுப்பு" குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் புறப்படுவதற்குள் ஐந்து நிமிடத்தில் காலை உணவை சமைத்துவிடும்.

வீடு முழுவதையும் நன்றாக சுத்தம் செய்து அலம்புவதென்பது சில சமயங்களில் லட்சுமிக்கு கஷ்டமான காரியம்தான். இனி அந்தக் கவலை இல்லை. வாக்டிரிக் லிமிடெட் என்ற பிரிட்டிஷ் தொழிற் ஸ்தாபனம் தயாரிக்கும் ஒரு சாதனம் வீட்டை நன்றாகப் பெருக்கி, தண்ணீர்போட்டு கழுவி தரைகளுக்கு பாலிஷும் கொடுத்து விடுகிறது. இச்சாதனத்தை உபயோகிப்பவருக்கு கொஞ்சங்கூட சிரமம் ஏற்படாது.

அடுத்தபடியாக ஜி. பி. யு. கம்பெனியார் தயாரிக்கும் "சகல வேலைகளையும் செய்யக்கூடிய மின்சார வேலைக்காரி" என்ற சமீபத்திய சாதனம்கூட லட்சுமிக்கு மிக்க உபயோகமாக இருக்கும். ஒருஅடி உயரமும் ஏழு அங்குல விட்டமுமுள்ள இச்சாதனத்தை சமையல் அறையிலுள்ள ஒருசுவரில் சுலபமாக மாட்டிவைத்துக்கொள்ளலாம். மோட்டாரின் சக்தியால் இயங்கும் இச்சாதனத்தில் பல்வேறு வேலைகளைச் செய்வதற்கான கருவிகளும் உள்ளன. இச்சாதனம் பானை, இருப்புச்சட்டிகளை நன்றாக தேய்த்துக் கொடுக்கிறது; பூட்ஸ்களை சுத்தம் செய்கிறது; துணிகளை துடைக்கிறது; முட்டைகளை உடைத்துக் கொடுக்கிறது.

ரொட்டியைத் துண்டாக்குவதற்கும், உருளைக்கிழங்கிற்கு தோலுரித்து வறுவலுக்காக நறுக்கித் தருவதற்கும், கத்திகளுக்கு சாணை பிடிப்பதற்குமான இதர சமையல் சாதனங்கள்கூட பிரிட்டனில் தயாரிக்கப்படுகின்றன.

சிறிய வீட்டில் குடித்தனம் செய்யும் லட்சுமிக்கு குழந்தைகள் இல்லையென்றால் ஹாக்கின்ஸ் கம்பெனியார் தயாரிக்கும் புதுவித மடிக்கக்கூடிய "டின்னர் மேஜையை" உபயோகிக்கலாம். இம் மேஜையின்மீது வைக்கப்படும் உணவுப்பொருள்கள் குளிர்ந்து போகாமலிருப்பதற்காக உஷ்ணப்படுத்தும் சாதனமொன்றும் இதில் பொருத்தப்பட்டுள்ளது. சமையல் பாத்திரங்களை கழுவவேண்டுமே யென்ற கவலையும் இனி லட்சுமிக்கு வேண்டாம். ஏனெனில் ஹார்லி மெஷின் கம்பெனியார் தயாரிக்கும் "சுத்தம் செய்யும் சாதனம்" லட்சுமியின் கைகளுக்கு வேலை கொடுக்காமலேயே சகல பாத்திரங்களையும் நன்றாக சுத்தம்செய்து துடைத்துக் கொடுத்துவிடுகிறது!

சலவை செய்தல்

எவ்விதமான தொந்தரவுமின்றி துணிகளை வீட்டிலேயே சலவை செய்துகொள்ளவும் பிரிட்டிஷ் தொழில் ஸ்தாபனத்தார் ஒரு சாதனத்தைத் தயாரித்துள்ளனர். சலவை செய்யவேண்டிய துணிகளை இந்த இயந்திரத்திற்குள் போட்டு கொஞ்சம் சோப்பையும் சேர்த்து "ஸ்வீட்சை"ப் போட வேண்டிய ஒரே வேலைதான். அதன்பின் இந்த சாதனம் துணிகளுக்கு சோப்பு போட்டு நன்றாக துவைத்து மூன்று தடவை தண்ணீரை நன்கு பிழிந்துவிட்டு இறுதியாக உலரப் போடுகிறது. துணிகள் எல்லாம் நன்கு உலர்ந்தவுடன் இந்த இயந்திரம் தானாகவே நின்றுவிடும். 50 நிமிடங்களில் இச்சாதனம் ஒன்பது ராத்தல் நிறையுள்ள துணிகளை சலவை செய்கிறது.

இவைகளைத் தவிர இன்னம் பல நூதன சாதனங்களும் பிரிட்டனில் தயாரிக்கப்படுகின்றன. இவைகளிலிருந்து மனைவிமார்களின் உதவிக்கு விஞ்ஞானம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறதென்பது நன்கு விளங்கும்.

வே. வ. இராமசாமி

தமிழ்த் தென்றல் ஆசிரியர் - விருதைத் தமிழ்க் கழகத் தலைவர்

அதிசயம் ஆனால் வாஸ்தவம்

மொராக்கோ தேசத்து ஷரீப் சக்ரவர்த்திகளின் வம்சத்திலுதித்த இஸ்மாயில் மன்னர், உலகத்திலேயே அதிக மக்களைப் பெற்றவர். அங்குள்ள அரசியல் சமூக சம்பிரதாய ரீதிப்படி அவருக்கு அநேக மனைவிகளிருந்தனர். 1727-ம் வருடம் காலமுற்ற சமயம், 548 ஆண் மக்களையும், 340 பெண் மக்களையும் விட்டுச்சென்றார்.

★

பட்டணம் பொடிச் சக்ரவர்த்தி **N. V.** ஷண்முகம் தனது வர்த்தக முறை தத்துவத்தால், நூற்றுக் கணக்கான ஏஜண்டுகளையும் ஆயிரக் கணக்கான அபிமான வியாபாரிகளை வைத்துச்சென்றதே, இன்று என். வி. எஸ். விலாசம் எங்கும் பரிணமிக்கிறது.

: நீங்கள் எப்பொழுதும்

என். வி. எஸ். பொடியே

: : உபயோகியுங்கள் : :

N. V. ஷண்முகம் கம்பெனியார்

தபால் பெட்டி 555. : : மதராஸ்.

ஸ்ரீ ஆண்டாள் சாலியர் நெசவாளர் கூட்டுறவு சங்கம் Ltd., A. 1675.

ஜக்கம்பட்டி AT ஆண்டிபட்டி.

பிராஞ்சுகள்:—

தேனி, சின்னமனூர்,
கம்பம், கோம்பை.

1. அழுத்தமான நெசவு,
2. அழகிய பார்டர்கள்,
3. உத்திரவாதமான கெட்டிச்சாயம்,
4. நியாயமான குறைந்த விலை
5. நீடித்த உழைப்பு

இவையே எமது உற்பத்திகளின் சிறந்த அம்சங்கள்.

அனைவரும் இவற்றையே நாடுவதன் காரணமும் இதுவே.

நீங்கள் மட்டும் ஏன் போலிச்சாயமுள்ள உதவாக்கரை ஜவுளிகளை வாங்கி ஏமாற்றமடைய வேண்டும் ?

சித்திரைத் திருவிழாவை உத்தேசித்து அதிகப்படியான கமிஷன் உண்டு.

குறிப்பு:— சோழவந்தான் எமது கிளை விற்பனை நிலைய திறப்பு விழாவை எதிர்பாருங்கள்.

சேவையே எமது இலட்சியம்.

D. கருப்பையா,
காரியதரிசி.

அலை ஒதுக்கிய சிப்பிகள்

[சேதுக்கரையோன் சேகரித்தது]

மொழிவாரியாக

மாகாணங்களை அமைக்கும் பிரச்சினையைத் தீர்க்க நியமிக்கப் பெற்ற மூவர் தம்முடிவைத் தெரிவித்துவிட்டனர். 'மொழிவாரியாகப் பிரித்து விடவேண்டியதுதான். ஆனால் இப்பொழுது தேவையில்லை. அவசரப்படக்கூடாது எனினும் அந்தந்த மக்கள் அவசியமாகக் கருதினால் "பிரிக்கும் விஷயம் கவனிக்கப்பட வேண்டியதுதான்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த வழவழா யோசனை ஆங்கில அரிஜன் ஆசிரியருக்குக் கூடப் பிடிக்கவில்லை. பல்லாண்டுகளாக படாடோப வாழ்வு நடத்தி நிலைபெற்றிருந்த உள்நாட்டு மன்னர்களையும் அவர்கள் ஆண்ட நாடுகளையும்ஒழித்துக்கட்டிய வீரர் பட்டேல் மொழிவாரிப் பிரச்சினையில் திட்டவட்டமில்லாது போனது வியப்பாகதானிருக்கிறது. யாருக்கும் சிறிது தன்காரிய நினைவு தென்பட்டால் தடுமாற்றம் ஏற்படும் என்பது புலனாகிறது.

சர்தார் படேலுக்குப் பம்பாய் நகரம் உயிர்போன்றது. அந்நகரத்தின் பிற்காலநிலை சுமுகமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால், மற்ற திட்டங்களை எல்லாம்ஒருநொடிப்பொழுதில் சாதித்து விடுவார் என்பதில் ஐயமேயில்லை. ஆனால் சென்னை நகரத்தைப்பற்றி ஆந்திரர்கள் நினைக்கக் கூடாது என்று சொன்னது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்தத் திட்டத்தை வெளியிட்ட மூவரின்செல்வாக்கைச்சிறிது நினைவில் இருத்தவேண்டும். காங்கிரஸ் சபையிலே தலைவர்சொல்லுக்கு இரண்டு இல்லைஎன்ற சம்பிரதாயத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள். அதோடு பட்டேலும் நேருவும் காங்கிரசுக்கும் தேசத்துக்கும்செய்த தியாகத்தினாலும் இன்று அவர்களால்தான் நாடு அமைதியாகஇருக்கின்றது என்ற மக்களின் நம்பிக்கைகுப்பாத்திரமாகவுள்ளவர்களாயிருப்பதினாலும்அவர்கள்கருத்துக்குமாறு சொல்லுவதற்கு ஆளேயில்லை. எனவே ஜெய்ப்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் புத்திக்கூர்மை யுள்ளவர்கள் இந்த மூவர் பொறுப்பில் மொழிவாரித் தொல்லையை ஒப்புவித்தனர்.

நேருவைக்காட்டிலும் பட்டேல் நிதானமும் நடைமுறை

யில் சாத்தியமானவைகளைத் தேர்ந்தெடுக்கும் நுண்ணறிவுபடைத்தவர். தென்னாட்டில் உள்ள தமிழர் ஆந்திரர், பிராமணர், அல்லாதார், திராவிடர்- ஆரியர் என்ற விதமான குழப்பங்களை யெல்லாம் பட்டேல் நன்குணர்ந்திருக்கிறார் என்று [ஒரு மந்திரியே] சொல்லக்கேள்வி. ஆந்திரப்பிரச்சினைக்கே மூலகர்த்தாவாகிய டாக்டர் பட்டாபியே ராஷ்ட்ரபதியாயிருக்கின்ற நிலைமையில் சென்னையை ஆந்திரர்கைவிட்டு விடவேண்டுமென்ற தீர்ப்பில்ஒப்பிக் கையெழுத்திடச் செய்திருக்கிறார். அடுத்தபடியாக இந்த மூவர் அறிக்கையை காங்கிரஸ் காரியக்கமிட்டியையும் ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டார். எனவே இந்தக்காரியக் கமிட்டியில் உறுபபினர்களாகிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், ஆந்திரக்கமிட்டித் தலைவரும் ஒப்புக்கொண்டதாய் விட்டது. ஆகவே இந்தத்தீர்ப்பைசென்னையில் அமுலுக்குக் கொண்டுவரும் பொறுப்பு, டாக்டர்பட்டாபி, ரங்கா, காமராஜர் ஆகிய மூவருடையதாகச் செய்த தந்திரம் பட்டேலைச் சேர்ந்ததே.

சுமுகமாக உட்கார்ந்து எல்லைகளை நிர்ணயித்துக் கொண்டால் கனவில் தோன்றிய ஆந்திரநாடு 1950-எப்ரல் முதல் நாளில் உருவாகிவிடும். அதைவிடுத்துசென்னையை விடோம் என்று சொந்தி ராமமூர்த்தியும் புலுசு சாம்பமூர்த்தியும்,சலசலப்புக் காட்டினாலும் ரங்கா தன் இனநேர்மையை கைவிடமாட்டார் என்றே நம்புகிறோம்.

தமிழர்களும் சும்மா இருக்கப்படாது.எல்லாக் கட்சியினரும்ஒன்றுகூடி ஆந்திர - தமிழ் எல்லையை நிர்ணயிக்கவேண்டும்.அதோடு கேரளநாட்டையும் ஏற்படுத்த முன்னேற்பாடுசெய்ய வேண்டியதும் அவசியமாகஇருக்கிறது.அதில்திருவாங்கூர் தமிழ் பிராந்தியங்களை தமிழகத்தோடு இணைத்துவிட வேண்டும். பின்னர் தமிழ் நாட்டில் உள்ள ஜில்லாக்களின் எல்லைகளையும் திருத்தி அமைக்கும் விஷயத்தில் கவனஞ்செலுத்தலாம்.

உடுமலைப்பேட்டையிலே பெரியார்

நகராட்சி மன்றத்தின் வரவேற்பை பெற்றுக்கொண்ட பின்னர் மாலையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதாயிருந்தார். அங்குள்ள அதிகாரி தடையுத்தரவைக் கொடுத்தார். மீறின பெரியாரைக் கைது செய்து நள்ளிரவில் விட்டு விட்டனர். பொறுப்புள்ள சர்க்காரானால் மிகவும் கண்டிக்கத்தக்கது. சிறுபிள்ளை வேடிக்கைத்தனமானால் இரங்கற்பாலது. பெரியார் பேச்சுக்கு என் தடை?

பழனி நகரசபையின் வரவேற்புக்குப் பதில் அளித்த திரு

காமராஜ் பின்வருமாறுகூறினாராம். "காங்கிரஸ் காரருக்கு விரோதமாக இன்று தோன்றியவர்களல்ல இந்தச் கருப்புச் சட்டைக்காரர்கள். பிரிட்டிஷ் ஆட்சி நடந்தகாலத்தில் பிரிட்டிஷாருக்கு மிகவும் தாசர்களாக இருந்தவர்கள் இந்தக்கருப்புச் சட்டைக்காரர்கள். பிரிட்டிஷ்ஏகாதிபத்யம் அஸ்தமித்த காலத்தில் மீண்டும்வெள்ளையர்களை அழைத்து அவர்களை ஆதரிப்பதற்கே இந்தக் கருப்புச்சட்டையினர் குழப்பம் செய்கின்றனர்" வெள்ளைக்காரன் இனி திரும்பி வரும்நிலையில் இல்லை என்று உலகம் அறியும் வருவதாய் இருந்தால்கருப்புச் சட்டைக்காரனை நம்பி வரமேமாட்டான். ஆனால் வெள்ளையன் சாம்ராஜ்யத்தையே பூண்டோடு ஒழிப்போம் என்று வெளியில் சொல்லிவிட்டுஅவனோடு கள்ளக் காதல் கொண்டு உறவாடும் காங்கிரசார் கூப்பிட்டால்ஒருவேளை தைரியமாக வரக்கூடும். ஆனால் "தோழர்கள்" விடுவார்களா?

மேலும் காமராஜர் "அதே போன்று கம்யூனிஸ்ட் தோழர்கள் இன்று ரஷ்யாவின் ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த அவர்கள் ஒருபுறம் நாசவேலை செய்கிறார்கள். இந்த இரண்டு கட்சிகளும் வெளி நாட்டு ஆட்சிக்கு இந்தியாவை அடிமைப் படுத்துவதில் தீவிரமாக வேலை செய்கின்றன" என்று புலப்படுத்தியிருக்கிறார்கள். ஆங்கிலேயன் ஆண்டகாலத்தில் நாசவேலைசெய்த காங்கிரசாருடன் சேராமல் நாட்டின் அமைதியை முன்னிட்டு அரசாட்சியின் பக்கமாக நின்றதற்காக கருப்புச் சட்டைக்காரரை குறை கூறலாம்.

இப்பொழுது கருப்புச் சட்டைத் தலைவர் யாது கூறுகிறார். அவர் காமராஜர் பிறந்த ஊரிலேதெரிவித்தாராம் "எங்களுக்கும் காங்கிரசாருக்கும் விரோதமில்லை. அவர்கள் ஆட்சியைக்கைப்பற்றவிரும்பவில்லை அதற்காகவே தேர்தலில் சம்பந்தப்படாமல் இருக்கிறோம். இன்றே நாட்டில் இனி பார்ப்பனன் பறையன் என்ற 'வித்தியாசம் இருக்கப்படாது' என்று சட்டபூர்வமாக தீர்மானம்நிறைவேற்றினால்போதும் நான் திராவிட கழகத்தைக்கலைத்து விடுகிறேன்" என்று வருந்திக்கேட்டிருக்கிறார். அதற்கு இதுவரைஎந்த காங்கிரஸ் தலைவராவது நேர்மையான பதில் கூறியதுண்டா? காணோமே! ஆனால் திராவிடகழகத்தார் சொல்வதை சன்னஞ்சன்னமாக காங்கிரசார் நடைமுறையில் கொண்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது.

ராஜாஜி காலத்தில் மேல் சபை கீழ்சபைத் தலைவர்கள் அவர்களே. மந்திரிசபையில் வகுப்பு விகிதாசாரத்துக்குமேல் அதிகபங்கு

எடுத்துக்கொண்டவர்களும் அவர்களே! ஆனல் இன்று பெரியார் வலியுறுத்துகிற கணக்குப்படிதானே இருக்கிறது. ஆபாசமாகவும், கேவலமாகவும் நடைபெற்றுவரும் அறநிலையங்களைச் சீர்படுத்தவும், அவைகளின் சொத்துக்களையும், ஆபரணங்களின் மதிப்பையும் கணக்கு எடுக்க முன்வந்துவிட்டார்களே. வகுப்பு பேதம் ஒழியவேண்டுமானல்கலப்பு மணம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப் படவேண்டுமென்பது திராவிட கழகத்தார் அபிப்பிராயம். கலப்பு மணம் செய்து கொள்வோருக்குத் தனி சலுகைகாட்டுவதற்காக சட்டமியற்ற ஆலோசித்துக் கொண்டிருப்பதாக மந்திரி பக்தவத்சலம் கூறக் கேள்வி. ஆகையால் இரண்டுபேரும் ஒத்துப் போவார்களானல் பலமான கட்டிடம் கட்டலாம். அதைத் தவிர்த்து வரப்போகும் தேர்தலை மனதில்வைத்துக்கொண்டுதிராவிட கழகத்தாரும் 'தோழர்களும்' ஒன்றே என்று கூறுவது பெருமையுடையதல்ல. காலச்சக்கரம் வேகமாக சுற்ற ஆரம்பித்து விட்டது என்று கடற்கரையில் அடிக்கும் அலை அலறுகிறது!

"தோழர்கள்" செய்யும் பாதாள வேலைகளும், நாசவேலைகளும் ஒருநாளும் நினைத்த பலன்தரா. ரஷ்ய மக்களின் பரம்பரை வேறு, நம்மக்களின் குணமும் பண்பும் வேறு. இப்போது எதாவது பலன் அடைந்தார்கள் என்றல் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று பொருள் அல்ல. ஆனல் ஆளவந்த காங்கிரசாரிடம் நல்லதோர் கொள்கையோ, உருப்படியான திட்டமோ, நடத்த தூயதான திடமோ மக்கள் இன்னும் காணமுடியவில்லை. கம்யூனிசம் பரவுகின்றதென்றல் காங்கிரஸ் ஆட்சிதான்பொறுப்பாளி. காமராஜர் என்ன சொன்னலும் தூரத்தில் வருகின்ற (கம்யூனிச) பெருவெள்ளத்தின் ஈரம் ஆற்றில் இங்கே தட்டுப்படுகிறது. கடற்கரைக்கும் வந்துவிடும் போலிருக்கிறது.

தென்னட்டவர்களுக்கு

இருக்கும் புத்திக்கூர்மை வடநாட்டாருக்குக் கிடையாது என்பர். "தென்பகுதியில் உள்ள நிலச்சுவான்தார்கள் தங்கள் வசமுள்ளநிலங்களை நஷ்டஈடு கேட்காமலே கூட்டுப் பண்ணைகளில் சேர்த்துவிட வேண்டும். மற்ற மாகாணங்களுக்கு முன் மாதிரியாக நடத்திக் காட்ட வேண்டுமென்றும்" தமிழ் நாட்டு காங்கிரஸ் அதிபர் வரவேற்கக் கூடிய ஆலோசனை கூறியிருக்கிறர். நமது இந்திய நாட்டிலே பெரிய கப்பல் கம்பெனியாக விளங்குவது பம்பாயில் உள்ள சிந்தியா ஸ்டீம்நாவிகேசன்கம்பெனியார்தான் இவர்களுக்குச் சொந்தமாகத் தான் விசாகபட்டினத்தில் கப்பல்கட்டும் நிலையமும் இருக்

கிறது. இங்கே கட்டப்பட்டுள்ள கப்பல்களை நேரடியாக நேருவும், டில்லியிலிருந்தே பட்டேலும் கடலில் மிதக்கவிட்டிருக்கிறார்கள். விசாகபட்டினக் கப்பல் கட்டும் நிலையம் கட்டும்படியாயில்லை. ஆகையால் அங்கு வேலை செய்யும் 363 நிபுணர்களுக்கு இனி வேலை கிடையாதென்று நோட்டீஸ் கொடுத்து விட்டதாக கம்பெனியின் முதலாளியாகிய சாந்திக்குமார் N. மொரார்ஜி சென்ற மார்ச்சு மாதம் 25-உ பம்பாயில் தெரிவித்தார். ஆனால், 27உ புதுடில்லிபோய்ச் சேர்ந்ததும் ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிறார். "அதாவது வேலையாட்களுக்கு நோட்டீஸ் கொடுத்த காரணம் மத்திய சர்க்கார் ஊக்கம் கொடுக்காமல் இருந்ததல்ல கைத்தொழில் மந்திரியிடம் விவாதித்த பிறகு அவர் அறிவு புகட்டியதை உத்தேசித்து 363 பேருக்குக் கொடுத்த எச்சரிக்கையை வாபீஸ் வாங்கிக் கொள்கிறோம்" இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென்று கரையோரம் இருந்து அலசிப்பார்க்க வேண்டியதாயிற்று. சென்னைமெயில் பத்திரிகையின் டில்லி நிருபர் விளக்கம் கூறியிருக்கின்றார். "சென்ற வருடம் தங்கள் கப்பல் கட்டும் நிலயத்தை சர்க்கார் வாங்கிகொள்ள வேண்டுமென்று சிந்தியா கம்பெனியார் கேட்டனராம். சர்க்காரும் ஒப்பமிட்டனராம் ஆனால் கிரையம் முதலியவைகளைப்பற்றி கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறதாம். இது விபரம் திரு. S. N மொரார்ஜிக்கும் தெரியும். சர்க்கார் விலைக்கு வாங்கிக்கொள்வதினால் நிபுணர்களுக்கு (வேலையில்லாமல்) கொடுக்கும் ஊதியம் சிந்தியாவைப் பாதிக்காதே. இந்நிலையில் பம்பாயிலிருந்து கம்பெனி முதலாளி அறிக்கை விட்டது சர்க்காரிடம் இருந்து நல்ல விலைபெற்றுக்கொள்ளச் செய்யும் அரசியல் ஃமுக்கடி வேலையேயாகும் என்று கருதப்படுகிறது" இந்தக் கெட்டிக்காரத்தனம் மேற்குக் கடற்கரையாருக்கு வருமே யொழிய கிழ்ப்பக்கத்துக்காரருக்கு வருமா?

இரண்டாவது உலகப் போர்

நடந்துகொண்டிருந்த சமயம் இங்கிலாந்து முதலமைச்சர் வின்சண்ட்சர்ச்சில் அமெரிக்காவுக்கு ஒரு தடவை சென்றார். அங்குள்ளவர் இங்கிலாந்தில் அச்சமயம் நடந்துகொண்டிருந்த கட்சிப் பூசலைப்பற்றி ஒரு கேள்வி கேட்டனர். அதற்கு எங்கள் சொந்த நாட்டு விஷயங்களைப்பற்றி வெளிநாட்டில் விவாதிக்கமாட்டேன் என்று பதிலிறுத்தனராம். இம்மாதம் முதல் வாரத்தில் அமெரிக்காவுக்குப்போன ஆங்கிலேய வெளிநாட்டு மந்திரி திரு பெவினிடம்

சர்ச்சிலேப்பற்றி ஒரு கேள்வி போட்டார்களாம். வெளிநாட்டிலிருக்கும் போது சர்ச்சிலேப்பற்றி விவாதிப்பதை நான் பொறுக்கமாட்டேன். அதே போன்று என்னைப்பற்றியும் சர்ச்சில் பொறுக்கமாட்டார். பாராளு மன்றத்தில் சண்டை போட்டுக் கொள்வோம் என்று தெரிவித்து விட்டாராம்.

ஆங்கிலேயரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது அநேகமிருக்கிறதென்று கூறிக்கொள்ளும் மேதாவிகள் குறிப்பாக அரசியல் வாயாடிகள் சர்ச்சில் பெவின் திருக்கூட்டத்தைக் கேலி செய்யத்தான் செய்வார்கள்.

இந்தியா லைப்
பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி லிமிடெட்.
தலைமை ஆபீஸ்; கோயமுத்தூர்.

தமிழ் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்து வரும்
இன்ஷ்யூரன்ஸ் தாபனம்.

1942—45 வருஷங்களுக்கு போனஸ் பிரிவினை { முழு ஜீவிய பாலிசிக்கு ரூ. 40. எண்டௌமெண்டு ,, ரூ. 30.

தங்கள் தேவைக்கு ஏற்ற திட்டங்களுக்கு
உடனே எழுதவும்.

T. A. ராமலிங்கஞ் செட்டியார், B. A., B. L.
அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர், தலைவர்.

C. R. சுப்பிரமணியம், B. A., செக்ரேடரி. | M. S. பழனியப்ப முதலியார், B. A., மானேஜிங் டைரக்டர்.

சென்னை வெலிங்டன் சீமாட்டி போதனுமுறைக்
கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை

திரு. ஆர். இராசரத்தினம்மாள் எம். ஏ., எல். டி.

மின்சாரத்தின் மாண்பு

[திரு, ஆர். இராசரத்தினம்மாள் எம். ஏ., எல். டி.]

மின் என்பது ஒளி. சாரம் என்பது ஆற்றல் அல்லது சத்து. மின் சாரம் என்பதைப் பார்த்தவுடனே சேலத்தில் செய்யப்படும் 'மின்சார ரஸம்' என்னும் மருந்தைப்பற்றிய விளம்பரம் என்று நினைக்கவேண்டாம். மின்சாரத்தின் மகிமையை உணர்ந்து அதனை மக்கள் பயன்படுத்திய வழிவகைகளைக் கூறுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ் நாட்டிற் பிறந்து வாழ்ந்து தவத்திற் சிறந்த தாயுமானவ அடிகளார், மனிதனால் சாதிக்க முடியாத செயலில்லை என்று கூறியவர், அதே மனிதனால் தன் சிந்தையை யடக்கியே சும்மாவிருக்க இயலாதென்றும் கூறி யிருக்கின்றார். அரிய காரியங்களையும் எளிய முறையில் சாதிக்கும் மனிதனால் படைக்கப் பட்டவன்தான் மின்சாரமனிதன் என்னும் யந்திரம்.

சிவ குமாரனாகிய கந்தன் வரலாற்றினைக் கூறும் புராணங்களில், படைப்புக் கடவுளாகிய பிரமன் ஒரு முறை மிக்க கர்வங் கொண்டதாகவும், அதனையறிந்த குமரன் அவன் மீது வெறுப்புக் கொண்டு அவனைக் குட்டித் தளைப்படுத்திச் சிறையில் அடைத்ததாகவும், படைப்புக்குரிய நான்முகன்சிறையிலிருந்ததால் அத்தொழில் தடைப்படக் கண்ட கந்தன் தானே அத்தொழிலை மேற்கொண்டு செய்ததாகவும், அதனைக் கண்ணுற்ற மற்ற தேவர்கள் சிவனிடம் முறையிட்டுச் சதுர்முகனைத் தளை நீக்கியதாகவும் ஒரு கதையுண்டு. இவ்வாறு பங்கயச் செல்வனோடு போட்டி போட்ட குன்றுதோறாடியைப் போலவே, இக் கலியுகத்திலும், 'பார்னெட்' என்பவர் மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு 'எலெக்ட்ரோ' என்ற மனிதனையும் 'ஸ்பார்க்கோ' என்னும் நாயையும் படைத்தார்,

புராணிகர்கள் விஸ்வாமித்திர சிருஷ்டி என்பார்கள். அதைப்போலவே 'பார்னெட்' என்பவர் படைத்த எலெக்ட்ரோ என்னும் மனிதன், நன்றாகப் பேசுவான், பாடுவான், ஆடுவான், அது மட்டுமா, ஓடுவான், சிகரெட்டுக் குடிப்பான். எலக்ட்ரோ மனிதனின் நண்பனாயிருக்க 'பார்னெட்' என்பவர் ஒருநாயையும் படைத்தார் என்றேனல்லவா? அந்த நாயின் பெயர் "ஸ்பார்க்கோ' என்பது. அது, ஓடும், உட்காரும், நிற்கும்; நன்றாகக் குரைக்கும்.

மேற் கூறப்பட்ட விஷயங்களெல்லாம் பல பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வெளியாயின. ஆனால் யாரைக் கேட்டாலும் படிக்கவில்லை என்றனர். ஆகையால் விஞ்ஞானிகள் அரிதில் முயன்று அருமையாகக் கண்டுபிடித்த விவரங்களையெல்லாம் தமிழ்த்தென்றல் வாசகர்கள் படிக்க வேண்டுமென்றே இங்கே எழுதப்பட்டது.

உங்களில் எத்தனை பேர் சென்ற டிசம்பரில் சென்னைக்கு அருகிலுள்ள "கிண்டி" என்னுமிடத்திலுள்ள பொறிஇயற் கல்லூரியில் நடந்த கண்காட்சியைக் கண்டு களித்தீர்கள்? அக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அருமையான பல விஞ்ஞான விஷயங்களை வியக்கத்தக்க முறையில் காட்டியிருந்தனர். அவற்றுள் ஒன்றுதான் நாம் முன்கண்ட யந்திரமனிதனை ஒத்தவன். அவனைக்கண்டவர்கள் எந்த மொழியில் என்னகேள்வி கேட்டாலும் அவன் அவர்களுக்குரிய விடையை ஏற்றமொழியில் விளக்கமாகக் கூறினான். அங்குச் சென்றபெண் ஒருத்தி "ஓ மனிதனே! நீ எப்படிப்பேசுகிறாய்?" என்று கேட்டதற்கு, அம் மனிதன் "என் போர்வையைக் கழற்றிப்பார்த்தால் தெரியும்" என்றான். மூடியைக் கழற்றிப் பார்க்கச் சற்று தூரத்திலிருந்து பேசப்படும் மொழிகள் தான் யந்திரமனிதன் வாயிலாக வெளிவருகின்றன என்று தெரிந்தது.

அதே 'என்ஜினியரிங்' கல்லூரியின் கண்காட்சியில் வைக்கப்பட்ட மற்றொரு அதிசய அம்சம் "பிரம்மச்சாரியின் தோழன்" என்பது அந்த விளம்பரத்தைப் பார்த்த உடனே உள்ளே போக அஞ்சிய பெண்கள் பலர். ஏன்? எத்தகைய காட்சியைக் காண்போமோ என்று ஐயம் எழுந்தது அவர்களுக்கு. ஆனால் துணிந்து

உள்ளே சென்று பார்த்தால் ஒரு கடிகாரமும், சிலபாத்திரங்களும் மட்டும் காணப்பட்டன. இவைகள் எவ்வாறு பிரம்மச்சாரியின் தோழனாகக் கூடுமென்று ஐயம் எழுகின்றதல்லவா? பார்ப்போம்.

தனியாக இருக்கும் ஒருவன் காலையில் எழுந்தஉடனே, அதாவது படுக்கையிலிருந்து எழுந்த உடனே 'காப்பி' சாப்பிடவேண்டுமென்று விரும்பினால், அவனுக்கு இத்தோழன் உதவுவான். அவன் யார்? மின்சார மித்திரன் 'காப்பி' எப்படித் தயாரிக்கிறானென்று பார்ப்போம், எத்தனை மணிக்குக் 'காப்பி' சாப்பிடவேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தநேரத்தைக் கடிகாரத்தில் காட்டிவிட வேண்டும். பிறகு வேண்டிய காப்பிக்கு ஏற்றவாறு தண்ணீர், பால், சர்க்கரை, காப்பித்தூள் முதலியவற்றையும் அவைகளுக்குரிய இடங்களில் வைத்துவிட்டு மின்சார இயக்கியின்பொத்தானையும் வேலை செய்வதற்கேற்ற நிலையில் வைத்துவிட்டுப் படுத்துத் தூங்கினால் காலையில் குறித்த நேரத்தில் 'காப்பி' பானம் தயாரித்துக் கோப்பையில் விட்டுத்தருவானும் மின்சார நண்பன். இதைப் பார்த்த நண்பர்கள் விவரிக்கும் முறையைக் கேட்க வேண்டுமே! அடுத்தமுறை கண்காட்சியைக் கட்டாயமாக நாமும் காண வேண்டும்போல் தோன்றும். கண்ட பிறகு நண்பர்கள் கயிறு திரித்ததுஎவ்வளவு? கைச்சரக்கு எவ்வளவு? உண்மை எப்படி? என்றெல்லாம் நன்றாகத்தெரிந்து கொள்ளலாமல்லவா?

இதைக் கேட்கும் போது நமக்கு 'அல்லாவுதீன்' என்பவன் வைத்திருந்த அற்புதத்தீபத்தின் நினைவு வருகிறதல்லவா? ஏன் தீபம் மட்டுந்தானா? அவன்ஏவலை ஏற்ற பூதத்தையும் நினைக்கத் தோன்றுகிறது, ஆனால் நம் அத்தைப்பாட்டி இதையெல்லாம் நம்புபவளா? அவள் சொல்லுகிறாள்: பழைய காலத்திலே நம் நாட்டிலே பதினெட்டுவகை சித்தர்கள் இருந்தார்களாம். அவர்கள் எத்தனையோ சித்துக்களையெல்லாம்செய்வதுண்டாம். வெகு தூரம் போவானேன்? நம்மதுரையிலுள்ள சொக்கலிங்க மூர்த்தியே ஒரு சித்தராக வந்து கல்யானையைக் கரும்பு சாப்பிடச் செய்தாரே! இப்போதும்கடவுள் தான் கலியுக மக்களுக்கு மின்சார வடிவமாக இருந்து வேண்டியதெல்லாம் செய்கிறார் என்பது அத்தைப் பாட்டியின் வேதாந்தம். நம் தாயுமானவர்

கூட விண்ணவரையும் ஏவல் கொள்ளலாம் என்றூரே! அது போல இயற்கையும் ஏவல் செய்கிறது என்கிறூர், இயற்கையில் ஈடுபட்டவர் ஒருவர்.

ஆதிகால மனிதன், அறிவின்மையால் கல்லையும் மரக்கட்டையையுமே தனக்கு ஏவல் புரியச் செய்தான். இடைக் காலத்தவனோ, விலங்குகளையும் பறவைகளையும், பழக்கிப் பணியேற்றான். அறிவு வளர்ச்சி மிக்க இக்காலத்தவனோ, பஞ்ச பூதங்களையும் அடக்கி யாண்டு இருந்த இடத்திலேயே எண்ணிறந்த காரியங்கள் செய்து வருகிறான். அப்படியானல் இக்காலத்தவனுக்குத் திடீரென்று அறிவு குதித்துவிட்டதா? இல்லை. பலகாலத்து மக்கள் அருமையாக ஆராய்ந்து பல விஷயங்களைக்கண்டு பிடித்தனர். சிலர் இம் முயற்சியில் உயிரையும் கொடுத்தனர். பலனையும் புகழையும் இக்காலத்தவன் நுகருகின்றான். உழைப்பினால் வராத உறுதிகள் உளவோ?

பழைய காலத்திலேயே மீனிடமும், பூனை முடியிலும், பளபளப்பான மணலிலும் அம்பர் என்னும் பொருளிலும் மின்சாரம் உண்டு என்று அறிந்திருந்தனர். நம் நாட்டு "நாரத்தை" என்ற காயிலும் கூட மின்சாரம் இருப்பதாகக் கண்டறிந்திருந்தனர். அந்த அறிவின் பயனான ஆராய்ச்சி பெருகவே நாம் இப்போது அதனைப் பலவகைகளில் பயன் படுத்திக் கொள்ளுகிறோம். உதாரணமாக, வீட்டைச் சுத்தம் செய்தல், உணவுப் பொருள்களை சமைத்தல், விளக்குக் கொளுத்துதல், விசிறி இயக்குதல் முதலிய பலவேலைகளும் மின்சாரத்தினால் செய்யப்படுகின்றன.

உட்கார்ந்த இடத்திலிருந்தே உலகச் செய்திகளைப் படிக்கலாம்; பாட்டைக் கேட்கலாம்; நாடகம் பார்க்கலாம்; நண்பருடன் தொலைபேசி மூலமாக உரையாடலாம். மேலும் மக்களும், மாக்களும் உழைத்துச் செய்யக்கூடிய அரியவேலைகளைக்குறைந்த நேரத்தில், விரிந்த முறையில் நமக்குச் செய்தளிப்பதும் மின்சாரமே யாகும். எதற்கும் மின்சாரத்தையே சரண் அடைந்த நம்மைக்காணும் சில பழைமைப் பித்தர்கள் மிகவும் வெறுப்பை மேற்கொள்ளுகின்றனர்.

UNDERWOOD TYPEWRITERS

THE MACHINES OF THE DAY.

Famous for its rhythm touch, increased speed,
ease of operation simplicity & durability.

UNDERWOOD is an asset to every home, firm and company.

PORTABLES TOO — NOW IN A LIMITED STOCK.

For Sales and Service Consult :–

T. N. ARUNACHALAM,
AGENT, UNDERWOOD TYPEWRITERS,
16, NORTH VELI STREET,
MADURA.

(Repairs with guarantee undertaken for all kinds of typewriters)

[125-ம் பக்கத் தொடர்ச்சி]

இயற்கை யன்னையின் எழிலில் ஈடுபடாத காரணத்தினால்தான் செயற்கை மழைக்குக் காத்திருக்க நேர்ந்தது என்று நம்மீது குறை கூறுகின்றனர். அணுகுண்டின் அழிசக்தியினாலும், ஆகாயவிமானத்தின் இடையறாத் தொல்லையாலுமே, வருணபகவானும், மேகராஜனும் கோபமுற்றுக் கால மழையை வாராது தடுத்தனர் என்று கூறுகின்றனர். மேகராஜன் மழை பொழியாவிடினும், மின்சார வேந்தன் விந்தைகள் புரிந்து சிந்தைகளிக்கவே விண்ணிலிருந்து பொழிவான் என்று விவேகிகள் கூறுகின்றனர். வெளிநாடுகளில் செயற்கை மழையை உண்டாக்கும் செய்தி நமக்கு மிக்க ஆறுதலை யளிக்கிறதல்லவா? இருந்த போதிலும் "கற்பூரமாமோ கடலுப்பு"? வாழ்க விஞ்ஞானம்! வீழ்க பெரு மழை! சூழ்க நலம் எவர்க்கும்!

A 2012 கீழக்கோட்டை

ஸ்ரீ முருகன் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிமிடெட்,

கீழக்கோட்டை,

சின்னாளபட்டி. P.O.

தற்சமயம் எங்கள் சங்கத்தில் 30, 40, 60, 80 நிர். உயர்ந்த நூல்களைக் கொண்டு 6, 7, 8, 9 கெஜம் சேலைகளில் நவ நாகரிகமான பார்டர், முந்தாணிக்கு பட்டு நூல்களாலும், உத்திரவாதமுள்ள சாயத்துடன் அழுத்தமான நெசவுகளால் பட்டுப் புடவைகளும் தயாராகி வருகின்றன.

ஆர்டர்களுக்குத் தகுந்தபடி தக்க கமிஷனும், விலை சகாயமாய் கொடுத்து வருகிறோம். ஒரு முறை நேரில் விஜயம் செய்து திருப்தி அடையக் கேட்டுக்கொள்கிறோம்.

N. B:- V. P. ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

ம. சொ. சொக்கலிங்கம் செட்டியார்,
தலைவர்.

சி. மு. ராஜமல்லையன் செட்டியார்
உப-தலைவர்.

ஆல் இந்தியா நேஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: விருதுநகர்.

போர்டு ஆப் டைரக்டர்கள்

திரு. வே. வ. இராமசாமி
,, பெ. சி. சிதம்பர நாடார்
,, மு. செ. பெரியசாமி நாடார்
,, கூ. மு. அ. சி. வெயில்முத்துசாமி நாடார்
,, சூ. அ. முத்து நாடார்
,, ரா பொன்னையா ஆச்சாரி
,, பெ. சிவ. பெ. ஏனாதிநாதன்
,, வா. அ. ப. சிவசாமி
,, கு. ச. சண்முகவேல் நாடார்
,, பெ. ப. சபாபதி நாடார்

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.
தினம் ஒரு அணா சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம்.

ரூ.250, ரூ.400, ரூ.500, ரூ.750, ரூ.900க்கு

எண்டௌமென்ட் பாலிஸிகள் பெறலாம்.

விபரத்திற்கு எழுதவும்,

மாதச் சம்பளம் ரூ. 100 அல்லது கமிஷனில் வேலை செய்ய ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

வே. வ. இராமசாமி,
மானேஜிங் டைரக்டர்.

குடும்பத்தில் ஒருநாள்!

[வள்ளுவன்]



இந்தா சரோ...... ஏ... உன்னைத்தான்... இங்கே வா!

ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்... கழுதை மாதிரி!

இங்கே வா கழுதை!... கூப்பிட்டவுடனே... வருவதற்கென்ன? ஆடி அசைந்து வருகிறாயே எருமை மாதிரி!

கூப்பிட்டவுடனே வருவதற்கு நான் என்ன திருவள்ளுவர் மனைவியா? அவளைப்போல் இருந்தால், இறைத்துக்கொண்டிருந்த வாளியை வள்ளுவர் கூப்பிட்டவுடனே விட்டு விட்டு வந்தாலும் அது தானாக நின்றுவிடும். நான் வாளியை அவ்வாறு விட்டு விட்டு வந்தால் வாளி கிணற்றில் விழுந்துவிடும்!

நீ அப்படி வாளியை விட வேண்டாம். இந்தக் காலத்தில் அப்படி வாளியை விட்டால் உன்னை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியதிருக்கும்! சரி... இப்பொழுது என்ன செய்துகொண்டிருந்தாய்?

சாப்பிட்ட தட்டைக் கழுவி சாமான்களை ஒதுக்கி வைத்துவிட்டு வந்தேன். அப்படியே இருந்தால் சாப்பிட்ட இடம் நாறிப்போயல்லவா இருக்கும். நாய் சாப்பிட்ட இடம்போல் இருந்தது!

நீயும் என் கூடத்தானே உட்கார்ந்து சாப்பிட்டாய்? நீ சாப்பிட்ட அழகுதான் அப்படி இருந்திருக்கிறது.

ஆமா, என்னைப் பார்த்தால் உங்களுக்கு நாய்போல் இருக்கிறது. பிறகு, எப்படி கல்யாணத்திற்கு சம்மதித்தீர்களோ?

இப்பொழுது அதை நினைத்து என்ன செய்வது! சரி... சரி... தள்ளு குப்பையை.

'தள்ளுவதற்கு இங்கே குப்பை ஒன்றும் காணோமே!'

'அட அந்த விஷயத்தைவிட்டு விடுஎன்று சொன்னேன்! சரி இந்தப் பொட்டலத்தைப்பிரி, பார்ப்போம்!

'இதென்ன உள்ளே வாயல் சேலை இருக்கிறதே! இது யாருக்கு?

வேறு யாருக்கு! இது சாட்சாத் திருமதி சரோஜினி தேவி யாருக்குத்தான்!

'அப்படியா! இந்த வேட்டி? திருவாளர் தியாகராஜருக்கா?

ஆமாம்...ஆமா ... இதென்ன பேச்சோடுபேச்சாய் என் பெயரைச் சொல்லி விட்டாயோ?

'சொன்னால் என்னவாம்? கணவன் பெயரை சொல்லப் பயப்படுவது அந்தக் காலம்! சொல்லிக் கூப்பிடுவது இந்தக் காலம்!

'நல்ல காலம் போ! எந்தக் கெட்ட காலத்துக்கோ இதெல்லாம்'

விஷயத்தைச் சொல்லுங்கள். புதுச் சேலை, புது வேட்டி எல்லாம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். என்ன விசேடம் புரியவில்லையே!

நமக்கு நாளைக்கு கலியாணம் நடக்கப்போகிறதேஇதுதெரியாதா! நம் இரண்டு பேரையும் சேர்த்து வைத்த நாளைக் கொண்டாட வேண்டாமா? அதற்குத்தான்!

'ஆம். நம் கல்யாணம் நடந்து ஒருவருடம் ஆகிறது. நான்கூட மறந்துவிட்டேனே!

'நீ இன்று தானா புதிதாக மறந்துவிட்டாய் அது உன் வழக்கம் தானே! அன்று ஒரு நாள் பாலை உறைய வைக்க மோர் ஊற்றுவதற்குப் பதிலாக மறந்து பக்கத்திலிருந்த நல்லெண்ணையை ஊற்றி விட்டாயே!

மற்றொரு நாள் விருந்தினர்கள் வந்த சமயம் சாப்பிடச் சொல்லுவதற்கு முன்னால் வெற்றிலைத் தட்டைக் கொண்டுபோய் வைத்து வெற்றிலை போடச் சொன்னாய்' அதனால் அவர்கள் கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டார்கள்.

சோற்றிற்கு உப்புப் போட அநேக தினங்கள் மறந்துவிடுகிறாய்! இப்படி எத்தனையோ விஷயங்களின் மறதியினால் எட்டிக்குப்பூட்டியாகச் செய்து விடுகிறாய். பிறகு நான் தான் அவதிப்பட வேண்டியதிருக்கிறது.

எட்டிக்குப் பூட்டியில்லை, எட்டிக்குப் போட்டிதான்! எட்டின்னு உங்களைச் சொல்லுவார்கள் அல்லவா, உங்களுக்குப் போட்டியாக குறுக்கே வந்துவிட்டேன்.

ஆம்! என் பிரம்மச்சரிய வாழ்க்கைக்கு குறுக்கே வந்து வழிமறித்திருக்கிறாய் நந்தி மாதிரி!

'நந்தியா? ஏது உங்கள் பெரிய மாமா ஞாபகம் வருவது போல இருக்கிறது'

இல்லை ... இல்லை ... உங்கள் ஐயா ஞாபகம் தான்!

'என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். எங்கள் ஐயாவை வம்புக்கிழுக்காதீர்கள்!

'நீ எங்கள் பெரிய மாமாவைச் சொல்லாதே எனக்குக் கெட்ட கோபம் வரும்!.

'அப்பா! கோபம் வருமாம்! துர்வாச முனிதான் போல!'

போல என்ன! முனியேதான் சில விஷயங்களில் தான்! பயப்படாதே!'

'உங்களுக்கு எதற்கு நான் பயப்பட வேண்டும், நீங்கள் என்ன சிங்கமா புலியா?' •

'அட, பெண் என்றால் கொஞ்சம அடக்கம், ஒடுக்கம், மட்டு, மரியாதை எல்லாம் இருக்க வேண்டும் தெரிந்துகொள்!'

'ஆண் பிள்ளை என்று அகம்பாவம் கூடாது. தன்னைப் போல பிறரையும் நினைக்கவேண்டும். மனைவியின் இஷ்டத்தை பூர்த்தி செய்யவேண்டும்! தெரிந்துகொள்ளுங்கள்.'

'ஏது... ஏது... பெரிய அரட்டையாய் இருக்கிறாயே! எதற்கு எடுத்தாலும் பதில் சொல்லிவிடுகிறாயே! எனக்கு சரியான ஜோடி தான்!'

'சரி, நாளைக்காவது நான் எழுப்பும்போது எழுந்திருப்பீர்களா?'

'நீ எழுப்ப வேண்டிய அவசியமே இருக்காது! பாரேன்!'

'ஒரே உறக்கம் தானா!'

'சீ இன்றைக்கு இரவு உறங்கப் போவதில்லை. எனக்கு ஏகாதசிப் பலன் கிடைக்கப்போகிறது.'

'என்னங்க நாளைக்கு வேற விழித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுவீர்கள்...!'

'ஆம்! இவரு சொன்னால் சொன்னதுதான்! எவரு?'

செவரு!

JUST UNPACKED

LATEST STYLE OF
SAREES
CALICO MILLS
MOSQUITO
NETTING
AT

BHARATI TEXTILES

B. K. KRIPALANI,
228/5, Govindappa Naick Street,
MADRAS

(ESTD) அருப்புக்கோட்டை (1932)

ஆறுமுகம் களிம்பு

REGD (103710)

ரணங்களுக்கு சிறந்தது
டப்பா, அணா 2.

A. R. M. ஆறுமுக பாண்டியன்
அருப்புக்கோட்டை.

காமமும் குறளும்

[வித்துவான், ந. சேதுரகுநாதன்]



தூய காதலின் சிறந்த தன்மையை ஏனைய மொழியினரும் ஏனைய நாட்டினரும் நினைக்கவுங் கூறவும் ஒண்ணாத உயர்நிலையாய் ஒரு சொல்லால் இனிது அமைத்துக் கூறிய பெருமை நமது தமிழ் மொழிக்கே உரியது. அதனைத் தெளிய விளக்கிய பெருமை, அருமைத் திருவள்ளுவர்க்கே உரியது. அதனை நன்கு உணர்ந்து எல்லோரும் பாராட்டும்படி செய்யாத பெருமை நம் தமிழர்க்கே உரியது. அதனை உணரவிடாது மறைத்து மயக்கத்தைத் தந்த சிறுமை வடமொழிக்கே உரியது. இத்தகைய சூழ் நிலைகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த ஒருமயக்கத்தை நீக்கினாலன்றித் தமிழ்ச் சொற்களை அறிதலும், அவற்றின் பொருள்களை அறிதலும் கடினமான செயலாகும். வடமொழியைப் படைத்துக் கொண்டவர்கள் தமிழ்ச் சொற்களை முழு உருவத்துடனும், சிதைத்தும், திரித்தும், பல்வகை மாற்றங்கள் செய்தும் எடுத்து அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அமைத்ததுமல்லாமல் அது கடவுளால் படைக்கப்பட்ட மொழி என்றும், அதுவே காலத்தால் முற்பட்டதென்றும், அதனை ஏனையோர் படிக்கவும் கேட்கவும் கூடாதென்றும் மறைத்து வைத்திருந்து, பின்பு

அம்மொழிச்சொற்களே தமிழில் வந்து கலந்துள்ளன என்று பொருந்தாத பொய்யுரைகளைக் கூறிவந்தனர். அப்பொய்யுரைகளை உண்மை என்று கருதினமையால், காலம், உலகம், நீர் என்ற அருமைத் தமிழ்ச் சொற்களைக்கூட வடமொழியிலிருந்து வந்தன என்று பிதற்றினவரும் உளர். இத்தகைய மனப் பான்மையை வளரவிட்டதனால் "காமம்" என்ற இனிய அரிய தூயதமிழ்ச்சொல்லையும்தமிழல்ல என்று கருதி அதன்பொருளைத் தமிழர் ஆராயாமல்விடநேர்ந்தது. அதனை ஆராயாமல் விடவே, காதல் என்றசொல்லின் உண்மைப் பொருளும் தெளிவாகாது போயிற்று. இனி அவற்றின் பொருளை நோக்குவோம். ஒரு காமரத்தண்டின்-(காவடித்தண்டு —காவட்டுத்தண்டு) இருபக்கத்திலும்அமைந்தஇரண்டு உறிகளில் வைத்த இரண்டு தேன் குடங்களில்ஒன்றன் பாரத்தை ஒன்று கவர்ந்து இழுத்து நின்று, ஒன்றையொன்று கீழே விழவிடாமல் காத்துச் சீரொப்ப நிற்பதுபோல, தலைவியின் உள்ளம், நாணம், உணர்வு இவற்றைத் தலைவன் கவர்ந்துஇழுத்து நிற்க, தலைவனின்உள்ளம்நாணம், நலம், இவற்றைத் தலைவிகவர்ந்து இழுத்துநிற்க, இருவரும் ஒத்த அன்புஒத்த காதல்உடையவராய் ஒருவரையொருவர்தாழவிடாமல் காத்துச் சீரொப்ப நிற்கும் நிலைக்குக் "காமம்" என்பது பெயர், கா என்பது பகுதி; காதல் என்பதற்கும் பொருள் இதுவே. காவுதல் என்ற சொல்லே காதல் என்றாயிற்று. விரும்புதல் என்பது, விருப்பம் என்று அம் விகுதி பெற்று வருவதுபோல, "காவும்" என்பதும் அம் விகுதி பெற்றுச் செயுமெனச் சத்து ஈற்றுஉயிரும் மெய்யும் நீங்கிக் "காமம்" என்றாயிற்று. "நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" "காவிக் கொண்ட நுகமருள் நூறை" என்று மலைபடு கடாத்திலும், "காவினம் கலப்பை" என்று புறநானூற்றிலும் "கா" என்பதனடியாகப் பிறந்த சொற்கள் காவட்டுச் சுமையின் இருபக்கமும் கவர்ந்து நிற்கும் நிலையை உணர்த்தவருதல் காண்க. காவட்டுத் தண்டின் இருதலையிலுந் தூங்குந் தேன் குடத்தில் ஒன்று வீழ்ந்து உடைந்தால் ஏனையதும் உடனே வீழ்ந்து உடையும்; அதுபோல தூய காதலுடையார் இருவரில் ஒருவர் மாய்ந்தால் மற்றவரும் உடனுயிர்

நீப்பர். நெடுஞ் செழியன் கண்ணகியின் வழக்குரை கேட்டுத் தன் தவறுணர்ந்து வீழ்ந்து உயிர் நீத்தவுடன், கோப்பெருந்தேவியும் உடனுயிர் நீத்த தன்மை இதற்கு எடுத்துக் காட்டாகும். காவட்டுப் பாரத்தைச் சுமந்து செல்லும்போது அதன் ஒரு தலையில் தூங்குங் குடத்தை வழியோரத்திலுள்ள முள் இழுத்தால், அதனை அக் குடம் அலைந்து ததும்பித் தடுமாறி, அடுத்ததலையில் தொங்குந் தன் துணைக் குடத்திற்கு அறிவியாமல் இராது. மற்றக்குடமும் தனக்கு இடுக்கண் நேரின் அவ்வாறே அறிவிக்கும். அது போன்று காதலர் வாழ்வில்வரும் இன்பதுன்பங்கள் இருவர் நிலையிலும் ஒத்ததன்மையாய்நிற்கும். ஒருவரை ஒருவர் மறைத்துச் செய்யும் இழிதகவு இராது. ஒரு தலையில் தூங்கும் பாரம் அதன் மறுதலையில் தூங்கும் பாரத்தையன்றி வேறுஒன்றையும்கவர்ந்து இழுக்க நாடாத தன்மைபோல காதலர் இருவர்தன்மையும்வேறு நோக்கமின்றிச் சிறந்திருக்கும். இவ்வளவு உயரிய பொருள் உணர்த்துஞ் சொல் "காமம்" "காதல்" என்ற இரண்டும். இவற்றின் பெற்றி யறிந்த ஆசிரியர் திருவள்ளுவனார்,

"ஒருதலையான் இன்னாது
காமம் காப்போல
இருதலையானும் இனிது" —

என்று கூறி அச் சொல்லின் பொருள் விளங்கும்படி அருளிச் செய்தனர். மற்றும்ஓர் இடத்தில்,

"காமமும் நாணும்
உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பின் அகத்து"
—என்ற

அருமைக் குறளில் உயிரைக் காவட்டுத் தண்டாகவும், அதன் ஒரு தலையிற் காம வேட்கையும், மறு தலையில் நாணமும், தூங்குவதாகத் தலைவியின் கூற்றாக அமைத்துக் கூறிய பாடலுக்கு நிகர் வேறு எம்மொழியில் வேறு எவர்பால் காண்டல்கூடும்? இத்தகையசிரியதிறன் ஆசிரியர்வள்ளுவனார்க்கேசிறப்பாகஅமைந்துளது. இப்பாடல்களின் பொருள் நயங்கள் தனிக்கட்டுரையாக எழுதுதற்கு உரியன. ஆதலால் ஈண்டு விடப்படுகின்றன. இக்குறட்பாவின்சிறப்பினை அறிந்த ஆசிரியர் நல்லந்துவனார் நெய்தற்கலியில்,

"நலிதருங் காமமுங்
கௌவையு மென்றிவ்
வலிதினி உயிர்காவாத்
தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு"

என்று எடுத்தாண்டுள்ளனர். இச்சொல்லின் தன்மையறிந்த ஆசிரியர் திருவள்ளுவனார், காமத்துப் பாலிலுள்ள இருபத்தைந்து அதிகாரங்களுள் பதினெட்டு அதிகாரத்தில் காமம் என்ற சொல்லையும், அவற்றினடியாகப் பிறந்த சொல்லையும் நாற்பது இடங்களில் கையாண்டிருக்கிறார். ஏனைய அறத்துப்பால், பொருட் பால்களில் பதினைந்து சொற்கள் கையாளப் பட்டுள்ளன. காமத்துப்பாலில் ஒரு அதிகாரத்தில் ஆறுமுறை வரை இச்சொல் கையாளப்பட்டுளது. ஆகவே, ஐம்பத்தைந்து இடங்களில் இச்சொல் கையாளப்பட்டிருத்தல் காணலாம். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலும், பழைய தொகை நூல்களிலும் பல இடங்களில் பயின்று வழங்குதல் காணலாம். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"காமக் கூட்டங் காணுங் காலை"
(களவியல்—1) என்றும்

"காமத்திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய"
(களவியல்—18) என்றும்,

"காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்"
(களவியல்—19) என்றும்

"காமக் கிழவன் உள்வழிப் படினும்"
(களவியல்—23) என்றும்,

"உருவு நிறுத்த காம வாயில்"
(மெய்ப்பாட்டியல்-25) என்றும்,

"காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்"
(களவியல்-29) என்றும்,

"காமக் கடப்பினுட் பணிந்த கிளவி"
(கற்பியல்-19) என்றும்,

"காமநிலை யுரைத்தலும்"
(கற்பியல்-36) என்றும்,

"காமஞ் சான்ற கடைக் கோட் காலை"
(கற்பியல்-51) என்றும்,

"காமங் கண்ணிய மரபிடை தெரிய"
(பொருளியல்-2) என்றும்,

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும்"
(செய்யுளியல்-178) என்றும்,

"காமம் நீத்த பாலினானும்"
(புறத்திணையியல்-17) என்றும்

"புரைதீர் காமம் புல்லிய வகையினும்"
(புறத்திணையியல்-21) என்றும்,

"காமப் பகுதி கடவுளும் வரையார்"
(புறத்திணையியல்-23) என்றும்

"காமஞ் சாலா இளமையோள் வயின்"

அகத்திணையியல்-53) என்றும் "மிக்க காமத்து மிடல்" (அகத்திணையியல்-54) என்றும், இன்னும் பலஇடங்களிலும் இச் சொல்லை ஆட்சி செய்திருக்கின்றார். இன்னும் இச் சொற்களின் இனமான சொற்களையும் அறிதல் வேண்டும்.

'கமம்' என்ற சொல் நிறைந்து இயங்கக்கூடிய பொருளுணர்த்தும். 'கமநிறைந்தியலும்' என்பது தொல்காப்பிய நூற்பா. இந்தக் 'கமம்' என்ற சொல்லுக்கும் 'காமம்' என்ற சொல்லுக்கும் இனஒற்றுமைஉண்டு. 'கவவுதல்' என்ற ஒரு சொல்லுண்டு: ஒன்றையொன்று தழுவியணைத்துக் கொள்ளுவது என்ற பொருளை அச் சொல் உணர்த்தும். "கவவு அகத்திடுதல்" என்பது தொல்காப்பிய நூற்பா. 'காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்' என்பது சிலப்பதிகாரம். இந்தக் 'கவவுதல்' என்ற சொல்லுக்கும், காதல் என்ற சொல்லுக்கும்இன ஒற்றுமை உண்டு. வகரமும் மகரமும் ஒன்றற்கு ஒன்று மோனையாய் மாறி வரும் இயல்பு உடையன. ஆகவே 'கமம்' 'கவவுதல்' என்ற இரண்டு சொற்களைப் போல 'காமம்' 'காதல்' என்ற இரண்டு சொற்களுந் தூய தமிழாய்ப் பண்பு நிறைந்த சொற்களாக வுள்ளன. இவற்றின் பகுதிகளை ஒற்றுமையாகக் கொள்ளினும் வேற்றுமையாகக் கொள்ளினும் பொருள் ஒற்றுமை தருதலில் தவறுதல் இல்லை. காதல் காமம் என்ற இரண்டு சொற்களுள் 'காமம்' என்ற சொல்லை வடமொழியாளர் எடுத்துக் கையாண்டு அதன் உண்மைப் பொருளை உணராமல் இழிந்த பொருளிலும் கையாண்டு வழங்கி விட்டனர். ஆதலால் 'காமம்' என்பது 'இழிபொருளுணர்த்துவது' என்றும்'காதல்' என்பது போன்று 'தூய பொருளுணர்த்துவதாகாது' என்றும் ஒரு தவறான எண்ணம் வளர்ந்தது; ஆதலால் காமம் என்ற சொல் பண்டு வழங்கியமதிப்பின் நிலையை அறிதல் அரிதாயிற்று. காதலன் என்று தலைவனைக் குறிப்பது போன்று, 'காமக் கிழவன்' என்றுதலைவனைத்தொல்காப்பியர்குறித்துள்ளனர். 'காமக் கிழவன் உள்வழிப் படலும்' என்று தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. காதல் என்ற சொல்லுடன் ஒத்த எதுகையாய் ஓதல், சாதல், போதல், நோதல்,

ஷீதல், ஈதல், ஆதல் என்ற தமிழ்ச் சொற்களிருத்தல்போல, 'காமம்' என்ற சொல்லுடன் ஒத்த எதுகையாய், ஏமம், ஈமம், நாமம் (நாமம்-அச்சம்) பாமம், ஓமம் என்ற தமிழ்ச்சொற்களுள் ளன. காவிய (காவட்டுப்போல் ஒன்றையொன்று கவர்ந்து நிற்கிற) தன்மை 'காமம்' என்பது போன்று, பாவிய [பரவிய] தன்மை என்ற பொருளில் 'பாமம்' என்றசொல், 'பாமமார் இடங்காக' என்று வந்து 'காமம்' என்ற சொல்லின் தன்மையைப் பெற்றிருத்தலுங் காண்க.

காவட்டின் இருதலையிலு முள்ள பாரத்தை இணைத்து வைக்கும் ஒருவனைப்போல, ஒருவனுடன் ஒருத்தியை ஒத்த தன்மையாக இசைத்துவைக்கும் ஆற்றலை 'காமன்' என்று வழங்குவது உண்டு. இதனைத் திருவள்ளுவர்,

'பருவரலும் பைதலுங்
காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகுவான்'

— என்று

கூறுகிறார். இந்தக் 'காமன்' என்ற சொல்லால் குறிப்பிடுவது இயற்கை ஆற்றலையே யாகும். இவனை 'உருவிலி' என்று கூறுவதும் அவன் ஒரு மனிதனோ தேவனோ அல்லன் என்பதை வற்புறுத்தும். இக் காமன் இருவரையும் இணைத்துப் பொதுமை செய்து வைப்பவன். இந்தக் 'காமம்' என்ற சொல் பிறமொழிகளிலும் சென்று கலந்துள்ளது. 'காமன் வெல்த்' என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள 'காமன்' என்ற சொல்லுக்கும் தமிழில் வழங்கும் 'காமம்' என்ற சொல்லுக்கும்

பொருளொற்றுமை உண்டு. இருவருக்குள் பொதுமையாய் நின்று இணைத்து வைக்கும் காமப் பண்பினைப் போன்ற பொதுமை குறித்தும் அச்சொல்வழங்கப்படும். உலக மொழிகள் எல்லாவற்றிற்கும் உள்ள தொடர்பினை மொழி நூல்களின் வாயிலாக ஆராய்ந்து காண்போருக்கு இவ்வாறு கூறுவதில் வியப்பில்லை. ஆனால் தமிழ்ச் சொற்களை எடுத்து வடமொழி படைத்தவர்கள், தாம் தமிழிலிருந்து எடுத்த சொற்களுக்குக் கற்பனையாக வேறு புதுப்பகுதி களைக் கற்பித்துப் பொய்மை எழுதி அமைத்துக் கொண்டனர். அப் பகுதிகளைக் காட்டி இன்னும் ஏமாற்ற முயல்வார்களெனின், அதற்கு நாம் வியப்பு அடைவதற்கில்லை. இத்தகைய நெறியில் தமிழ்ச்சொற்களை ஆராய்ந்து அவற்றின் பொருளுணர்ந்து தமிழர்கள் பாராட்ட முயன்றால் 'உலக மொழிகளில் தமிழ் சிறந்தது' என்பதனை எல்லோரும் நன்றாகஅறிந்துபாராட்டும்படி செய்வதற்குத் தடையில்லை. அத்தகைய முறையில் உழைத்துவெற்றிபெறுவோமாக.

விருதைத் திருக்குறள் மாநாடு

இராமநாதபுர மாவட்டத்து முதலாவது திருக்குறள் மாநாடு, வ. ஆ 1980, பங்குனி 21-ம் நாள் (3—4—49) ஞாயிற்றுக் கிழமை விருதுநகர் புதிய முத்துப் படக்காட்சி யரங்கத்தில் (நியூ முத்துடாக்கீஸ்) நாவலர், ச. சோமசுந்தர பாரதியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலை 8-30 மணிக்கு: தலைவர் பாரதியார், பெரியார், கவிஞர்பாரதிதாசன், வரவேற்புத் தலைவர் ஆகியோர் நான்கு குதிரை பூட்டிய இரதத்தில் ஊர்வலமாக மாபெரும் கூட்டத்திடையே அழைத்து வரப் பெற்றனர்.

[படம்: வீ. உ. வீ. ப. நாகரத்தினம்.]

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களி லிருந்து அறிஞர்களும், தொண்டர்களும் பலவேறு கட்சித் தமிழன்பரும் திரளாய் வந்து குழுமியிருந்தனர். நெல்லைத் தமிழிசைமணி திரு. கா. சங்கரனூர் திருக்குறள் இசையரங்கு நிகழ்த்தினர். வரவேற்புக் குழுத் தலைவர் பேராசிரியர் திரு. சி. இலக்குவனூர் எம். ஓ. எல். வரவேற்புரை

கூறினர். மாநாட்டுத் திறப்பாளர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திறப்புரை யாற்றினர். மாநாட்டுச் செயலாளர், பேராசிரியர் உயர்திரு. நாவலர் சோமசுந்தர பாரதியாரவர்களைத் தலைமை தாங்கும்படி வேண்டினர். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் அதனை ஆமோதித்துப் பாராட்டுரை வழங்கினர். முற்பகலில் நாவலரின் தலைமையுரையும், பெரியாரின் சொற்பொழிவும் நிகழ்ந்தன.

பிற்பகல் மீண்டும் இசையரங்குடன் தொடங்கி நாவலர் தலைமையில் புலவர் திரு. ந. சேதுரகுநாதன், திரு. என். வி. நடராசன், அறிஞர் சி. என். அண்ணாத்துரை இவர்களின் சொற்பொழிவுகளுடன் மாநாடு மிகச் சிறப்பாக நிறைவேறியது. அன்று மாலை 5 மணிக்கு விருதுநகர் நகராட்சி மன்றத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு வரவேற்புரை நகராட்சி மன்றத் தலைவர் திரு. மு. செ. பெரியசாமி அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது. ஏராளமான பெருமக்கள் அந்நிகழ்ச்சியிற் கலந்துகொண்டனர்.

The Match Corporation of Madras

SIVAKASI (South India)

Manufacturers of Superior Victory Horse, Divali, Welcome brand Safety Matches, Bengal Colour Matches, Sparklers & many other varieties of fancy Wonderful Toy Fire Works.

"எது வெற்றிபெறுவது"

என்று கேட்டார் ஓமந்தூரார்

[புரசை அரசியல் வாதி]

பிரகாசத்தை அனுப்பிவிட லஞ்சம் முதலிய ஊழல்கள் தாண்டவமாடுவதாகச் சொன்னார்கள். துறவிபோன்ற வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த ஓமந்தூராரைப் பிடித்து வைத்தார்கள். ஏன்? இவர் பேருக்கு மாத்திரம் (இலாகா இல்லாமலே) மந்திரியாக இருப்பார் என்று எண்ணினார்கள். மந்திரி சபை அமைக்கும்போது இந்து அறநிலைய இலாகா வேண்டுமென்று எடுத்துக்கொண்டார். உடனே இவரைத் தூக்கிவைத்த நண்பர்களுக்குத் திகைப்பும் ஆத்திரமும் தோன்றின. இலாகா இல்லாத பிரதம மந்திரியாயிருந்தால் தங்களிஷ்டம்போல் ஆட்டிக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தவர்களுக்குத் தொல்லைதானே. இதுதான் ஆரம்பக் கட்டம்.

அதோடு அவினாசிலிங்கஞ் செட்டியாரையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பிடிவாதஞ்செய்தாராம். மனவேதனையுடன் ஒப்புக்கொள்ளப்பட்டதாம். கல்வி மந்திரி சும்மா இருந்தாரா? மற்ற மந்திரிகளைக் கலக்காமலே தன் காரியங்களைச்செய்து வந்திருக்கிறார். இன்று ஒரு உத்தரவு நாளை மற்ற ஒன்று.

காலஞ்சென்ற மந்திரி டானியல் தாமஸ் அவர்கள் இறந்தவுடன் யாரை நியமிப்பது என்பதைக் காமராஜரைக் கலவாமலே அவருக்குத் தெரியாமலே டாக்டர் குருபாதத்தை நியமித்தது கொஞ்சமும் பிடித்தமில்லாத காரியமாய்ப் போய் விட்டது.

கவர்னர் - ஜனரல் ராஜாஜி முதல் தடவையாக சென்னைக்கு வந்தபோது விமான நிலையத்தில் காமராஜர் மாலை போட விடாமல் தடுக்கப்பட்டதைப் பக்கத்தி

விருந்து பார்த்த பிரதமர் ரெட்டியார் சும்மா இருந்தது பொறுக்க முடியாத வேதனையாய்விட்டது. ஆனாலும் அந்தச் சம்பவம் விஷயமாக திருக்குற்றாலத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆலோசித்தபோது ரெட்டியார் தான் வராது பக்தவத்சலத்தை அனுப்பி சமாதானஞ் சொன்னது திருப்தி அளிக்கவில்லை.

வீணாக துஷ்பிரசாரஞ் செய்யும் சில பத்திரிகைகளின் வாயை அடக்க ஒரு பெரிய வீட்டுப் பிள்ளையை ஹைகோர்ட்டு நீதிபதியாக்க உறுதி கொண்டிருந்ததை உலேத்ததுதான் பெரிய வேட்டாகவெடித்துவிட்டது.

இப்பொழுது அமுலில் இருக்கும் சட்டசபைக்குத் தேர்தல் நடந்த காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். வெள்ளையன் வெளியேறிவிடுவான் என்று யாரும் நம்பவில்லை. ஆகையால் சட்ட சபையைக் கைப்பற்றி நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கம்தான் காங்கிரஸ் தலைவர்களிடம் குடிகொண்டிருந்தது. திறமைசாலிகளையோ பொறுப்பு வகிக்கும் லாயக்குள்ள அனுபவசாலிகளையோ சிந்தியாதுகண்ணை மூடிக்கொண்டு கை தூக்கும் ஆட்களேபோதுமென்று காங்கிரசார் நபர்களை நிறுத்தி வெற்றி பெற்றனர். இருந்த ஆச்சாரியாரையும் விரட்டியடிக்கப்பட்டது. நிர்வாகப் பொறுப்பேற்று நாணயமாகவும், நலமாகவும் ஆட்சிபுரியக்கூடிய ஆட்களோ அபூர்வம். இங்கிலேயில் தன் வாழ்நாட்களிலே கனவிலும் கண்டறியாத பவிசுகளைப் பெற்ற உறுப்பினர்கள்தான் மெஜாரிட்டி. ஒவ்வொருவரும் தான் தான் மந்திரியாகக் கருதிக்கொள்ளுகின்றனர். தங்களுக்குக் கிடைத்த செல்வாக்கை இரண்டு வகையில் உபயோகிக்க முடிவு செய்துள்ளனர். ஒன்று தங்கள் அரசியல் விரோதிகளுக்கும், வீட்டு விரோதிகளுக்கும் எவ்வாற்றாலும் தொல்லையும் சஞ்சலத்தையும் உண்டுபண்ணுவது. இரண்டாவது, 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்', என்ற வேதவாக்குப்படி தங்களைக் கனப்படுத்திக் கொள்வது. இந்த இரண்டு வகைக்கும் ஜில்லா மாகாண அதிகாரிகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ள எல்லாப் பிரயத்தனங்களும் செய்து கொள்ளுகிறார்கள்.

இவைகளைக்கண்டு வெட்கப்

பட்ட ரெட்டியார் எந்த சட்ட சபை அங்கத்தினரும் அதிகாரிகளை அனுவசியமாக தொந்தரவு செய்யக் கூடாது, அதிகாரிகளும் தகாத காரியங்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது என்று துணிகரமாகக் கூறினார். ஆனால் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியோ, மாகாண அரசாங்கமானாலுஞ்சரி, ஜில்லா நிர்வாகமானாலுஞ்சரி, அந்தந்த காங்கிரஸ் கமிட்டியுடன் தான் இசைந்து நடக்க வேண்டுமென்று தீர்மானித்தது.

(1) காங்கிரசார் சேவா உணர்ச்சியோடு நடக்க வேண்டுமே ஒழிய தியாகத்துக்குப் பிரதி உபகாரம் எதிர்பார்க்கக் கூடாது.

(2) சட்டசபை உறுப்பினர்களோ கட்சி வேறுபாடு இல்லாமல், சுய நலம் இல்லாமல் பொதுப்பணி ஆற்றவேண்டும்.

(3) மந்திரிகளோ தயை-தாட்சண்யம் காட்டாது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நிர்வாகம் நடத்த வேண்டும்.

இம் மூன்று தான் ஓமந்தூர் சன்யாசியின் கட்டுப்பாடுகள். அவருக்குச் சரிதான். மற்றவர்களால் அப்படி நடக்க முடியவில்லையே. பொது மக்கள் எல்லோரும் முதல் மந்திரியைப் பாராட்டினர். அகமகிழ்ந்தனர். வாழ்த்தினர். இது ஏனையோருக்கு அதாவது சட்ட சபைக்குள் இருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் வெளியில் சொல்லப் பயம். யோக்கியனைக் குறை கூறினால் தங்களுக்கு என்ன பட்டங்கிடைக்குமென்று தெரியும். ஆகையால் தலைவர் தேர்தல் வரை மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர். வந்தது மார்ச்சு 31உ. ரெட்டியார் எல்லாரையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொண்டார். பதில் கிடைக்கவில்லை. ஒருவராவது ரெட்டியாரே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. உடனே விலகிக்கொண்டார்.

இந்த சூழ் நிலையின் காரணமாக, ஒதுங்கியிருந்த குமாரசாமி ராஜாவுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனினும் ரெட்டியாரை விரட்ட வேண்டுமென்ற ஆதிக்க சக்திக்குத்தான் உள் எண்ணம் நிறைவேறவில்லை.

இந்த ஓமந்தூர்ப் படலத்தால் என்ன காண்கிறோம்? ஓ. பி. ராமசாமி ரெட்டியாரை அம்பலத்துக்குக்கொண்டுவந்து இப்பேர்ப்பட்டவரும் ஒருவர்உண்டுஎன்று ஆதிக்கவாதிகளைத் திணறச் செய்யும்படி செய்து, "உணர்ச்சி"யின் செல்வாக்கை நாளாவட்டத்தில் தேய்த்து மாய்த்துவிட சூது செய்யும் "ஆற்றல்" கொண்ட வெற்றியே இது.

M. K.
தியாகராஜ்
அன் சன்ஸ்

★

எங்களின்
புது வருட
வாழ்த்துக்கள்.

★

எங்களின் சேவல் மார்க் பீடிகளையும் உபயோகித்து மகிழுங்கள்.

M. K. T. ராஜ் அன் சன்ஸ், முக்கூடல்.

PYRETHEX - பைரதெக்ஸ்

விஞ்ஞான ரீதியில் தயாரித்த ஒப்பற்ற ஓர் பூச்சி மருந்து.

விவசாயத்திற்கேற்ற விஷமற்ற அழிவற்ற மருந்து.

பூச்சிகளை ஏராளமாய் அழிப்பதாலும், விரைவில் அழிக்கும் சக்தியிருப்பதாலும், விவசாயத்திற்காக, "பைரதெக்ஸ்" உலக முழுவதும் உபயோகப்படுகிறது.

அஸ்பிஸ், காட்டர்பிலர், வீவில், பீட்டில், கேப்வலிட்பக், மாத் ஆப்பிள் உறிஞ்சி, ப்ளீபீட்டில், உட்லைஸ், எறும்பு, லோகஸ்ட், முதலிய புழுப்பூச்சிகள் எவற்றையும் உண்மையாய் அழிக்கும் வல்லமையுள்ளது.

கிடங்குகளிலும், தொழிற்சாலைகளிலும், உணவுச்சாலைகளிலும், புழுப் பூச்சிகளை அழிக்க உபயோகமாகிறது.

விஷமற்றது என்பதனால், தானியம், மாவு, காய்ந்த பழங்கள் கோக்கோ, பெப்பர்மெண்ட், கேக், வாசனைப் பொருள்கள் மற்றுமுள்ள உணவுப் பொருள்களின்மீது தெளித்த பின் சிலமணி நேரத்தில் அவைகளை உபயோகிக்கலாம்.

எளிதான முறையிற் பிரயோகிக்கலாம்.

சோல் எஜண்ட்ஸ் :— **தி மதர் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்,**
217, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை 1.

கவிஞர். செ. சிவகருப்பையா.

மன்னிக்க வேண்டும்! மதியழகா!!

[கவிஞர். செ. சிவகருப்பையா.]

1 செவ்விதழ் கொண்ட குறுநகையாள் — ஒளிர்
சேலைப் பழிக்கும் விழி யுடையாள்.
"ஒளவிய மின்றி யுரை பகர்வோன் — தமிழ்
ஆற்றல்மிகும், மதியழகன்.

2 மாமன் மகன் இளங்காளை" யிவனுடன்
மட்டிலாக் காதலுட் பட்டிருக்க,
காமவேளின் விளையாடலி லோர்சுழல்
கண்டதிவர் வாழ்வுத் தேப்பத்திலே.

3 மாமதியழகன் அம்மை நோயுற்றதால்
மேனி யழகின்றிப் பல வடுவாய்த்
தேமமிகும்புறக் காட்சியுறுத்திட
தேள்ளிய காதலியும் வெறுக்க — இவள்

4 உள்ளக் கருத்தினை நன்கறிந்தும் தன (து)
ஊழ்வினைக் கென்செய்வ தென்று நொந்தே
எள்ளளவேனும் தன் காதலியாள், தன்னை
ஏமாற்றம் செய்திடாள் என்றிருந்தான்:-

5 மெல்லடி வைத்துக் குடமெடுத்துக் கேணி
மேவிநீர் கொண்டு வரும் வழியே,
கல்லடி பட்டுத் தன் காலிடறிக் குடம்
"கப்பெ"ன்று வீழ, உடைந்த சில்லும்

6 அவ்வழி வந்த ஓர் வாலிபன் காலில்
அடித்திட மங்கையை நோக்கி நின்றான்,
கவ்வியது காதல்! நாணியது முகம்!!
கண்ணோடு கண்ணிணை பாயவிட்டார்.

7 அன்றிருந் தார்வங்கோள் தன்புதுக் காதலன்
அன்பினிற் சோக்கி மகிழ்ந் திருக்க,
தென்ற லுயர் தமிழ் மதியழகனை
"தேனைப் பழித்தலைப் போல்" விடுத்தாள்:—

8 அன்பின் அறிவழகை விடுத்து வெளி
அழகைத் தஞ்சமென்றே யடைந்தாள்.
துன்பம் தொடருங்கால் கைவிடு மிவனைத்
தூயவ னென்றே மதித்து விட்டாள்!

9 "வானுயர் பரிதி மாறிடினும் காதல்
வல்லி உன் சொல்லினை மாறுவனோ?
தேனுயர் அமுதம் நீயெனக்" கென்றிவன்
செப்பிப் பிரிந்த மறு தினமே,

10 கண்வலி மிக்கதால் மண்டை யிடித்திரு
கண்ணிலும் வெள்ளை விழுந்த தையோ!
என்செய்வ தென்றிவள் தத்தளிக்கும் வேளை
இன்னுயிர்த் தாயும் இறந்துவிட்டாள்!

11 "கண்ணொளி யற்றனள் காதலி" யென்றந்தக்
காமுகன் கேட்டதும் தான்வெறுத்து
"கண்ணிலாள் தன்னழ கென்ன பயனுறும்?
கைவிடல் நன்றே"னத்தான் மறைந்தான்!

12 "நல்ல மரத்தை நரையான் அரித்தல்போல்"
நங்கை யிவளிரு கண்ணொளி போயதை
உள்ளம் சிலிர்க்க மதியழகன் கேட்டு
ஓடி மருத்துவர் தன்னை வேண்டி

13 கூட்டிவந் திவளுக் கேற்ற மருந்தீயக்
கோதையள் தன்னொளி பெற்றவுடன்
'தாட்டிகனே! எந்தன் மெய்யொளிர் காதல!
தம்மைப் பழிசெய்த பாவியேன் நான்,

14 "மன்னிக்க வேண்டும்! மதியழகா!" என
மங்கை கண்ணீர் மல்கக் கூறிநின்றாள்—
கண்ணீர் துடைத்தோரு முத்தமிட்டான், அவள்
கள்வெறி யுற்றனன் சற்று நேரம்.

லித்தோ கலர் பிரிண்டிங்

லேபிள் :: போஸ்டர் :: படங்கள்

நேஷனல் லித்தோ பிரஸ்,

ரயில்வே பீடர் ரோடு, :: சிவகாசி.

NATIONAL LITHO PRESS, SIVAKASI.

Dealers in: Printing Materials

பேப்பர், போர்டுகளுக்கு, பிரதான ஸ்தாபனம்

பழனியப்பா அன் கோ.,

இறக்குமதி வியாபாரிகள்

STOCKISTS FOR

Birla Banyans (at Madras & Madura)
Punalur Paper of all kinds (at Madura)

தலைமை நிலையம்:	கிளை:
தந்தி விலாசம்: "LEDGER"	88, தெற்கு ஆவணி மூலவீதி,
45, பத்ரியன் தெரு, மதராஸ்.	மதுரை.

நாங்கள் எல்லாவிதமான பேப்பர்களும், போர்டுகளும், எல்லா கலர்களிலும் மேல்நாடுகளிலிருந்து வரவழைத்து, கட்டுப்பாடு விலையிலிருந்து மலிவான விலைக்கு சப்ளை செய்கிறோம்.

பிர்லா தயாரிப்புப் பனியன்களும் மலிந்த விலைக்கு மொத்தமாக விற்பனை செய்கிறோம்.

தமிழகத் தலைவர்கள் :-

புரட்சிப் புலவர்

திரு. மு. வரதராசனர்

[கே. வீ வீ.]

தமிழன் தலைநிமிர்ந்து நடக்கக் கூடிய காலம் பிறந்துவிட்டது. 'உலகமே நிலைகுலைந்து போனாலும் ஆங்கில மோகத்தினின்று விடுபட மாட்டேன்' என்று உரைக்கக் கூடிய சென்னை பல்கலைக் கழகம் கூடத் தமிழுக்கென்று தனி இடம் அளித்து, பேராசிரியர் பதவி ஒன்றைப் புதிதாய் ஏற்படுத்த இசைந்து விட்டது என்பதைஎண்ணும்போது தமிழருக்கு யோகம்பிறந்துவிட்டது என்றுகூடக் கூறலாமல்லவா?

அதே சென்னைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஆசிரியராய்ச்சேர்ந்து, ஆடம்பரத்தை அற வே வெறுத்து, இன்பவாழ்க்கை நடத்தும் வரதராசனாரைப் பற்றித் தமிழுலகம் நன்குணர்ந்ததாகத் தோன்றவில்லை.

ஆடம்பரத்தை அவர் விரும்பவில்லை; ஆனால், தமிழாசிரியர் குழாத்திலே பெறற்கரிய பேறு பெற்று அவர் இன்று 'டாக்டர் வரதராசன்' ஆகிவிட்டார். "பி. எச். டி." என்னும் பட்டம் இது வரையில்சிதம்பரநாதன்செட்டியார் ஒருவருக்குத்தான் தமிழ்ப்பேராசிரியர்களுக்குள் கிடைத்திருக்கின்றது. இத்தகையபெருமைக்கும் "டாக்டர் மு. வரதராசனார், எம். ஒ. எல், பி. எச். டி." என்ற நீண்டபெயருக்கும் அவரதுதூய, எளியவாழ்க்கைக்கும் பொருத்தம் காண்பது கடினம்.

வடார்க்காடு மாவட்டத்தில் 'வாலாசாரோட்' என வழங்கும் புகைவண்டி நிலையத்தருகில் வேலம் என்ற ஒரு சிறு கிராமத்தைச்சேர்ந்தவர் திரு. மு. வ. பலஆண்டுகளாக பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராய்த் தொண்டாற்றியவர். சென்னைக்கு வருமுன் திருப்பத்தூர் போன்ற சில இடங்களில் உயர்-நிலைப்பள்ளி ஆசிரியராயிருந்தவர். அடிக்கடி பல சங்கங்களிலும் கழகங்களிலும் பேசும்படி அழைப்பு வருவதும், அழைப்புகளை எப்படியாவது மறுக்க முயல்வதும், அன்பு மேலீட்டால் சிலவற்றுக்கு ஒப்புக்கொண்டு அழகழகான சொற்பொழிவுகள் ஆற்றுவதும் இன்றளவில் அவர் வாழ்க்கையில் ஊறிப்போய் விட்ட வழக்கம். பேச்சுப் பணியைவிட எழுத்துப்பணியே மிகவும் முக்கியம் என்றுகருதுவதால், இம்மாதிரி

இளைஞர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கிவிட்டால் அதனால் எழுத்துப்பணி தடைபட்டு விடுகிறதே என்று மிகவும் வருந்துகிறவர்.

இத்தகைய தொல்லைகள் நேரக் கூடாதென்பதற்காகவே சனி, ஞாயிறு விடுமுறைகளில் கூட வேலம் கிராமத்துக்குச் சென்று விடுவார். "ஓய்வெடுத்துக்கொள்ள" ஆனால், அவருக்கா ஓய்வு? அங்கு போய் எதையாவது எழுதித் தள்ளிக் கொண்டிருப்பார்!

இராணிப்பேட்டையில் நாங்கள் நடத்திவந்த 'கலையன்பர்கழக' சார்பில் கவிமணி: தேசிகவிநாயகம் அவர்களைப்பற்றி பேசும்படி அவரை அழைக்க நான் சென்றிருந்தேன். ஒரு முறை வேலம் கிராமத்தில் சென்று "இராணிப்பேட்டைக்கு வந்து பேசவேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். "வருகிறேன்" என்று வாக்களித்து விட்டார். ஊர் திரும்பியதும் நண்பர்களெல்லாம் ஆச்சரியக் கடலில் மூழ்கிவிட்டார்கள்; "உண்மையா. மு. வரதராசனாரா வருகிறேன் என்றார்" என்று வியப்புடன் கேட்டனர் பலர்.

சொன்னபடி அவரும் வந்தார். அவரை அழைத்துவர நாங்கள் அனுப்பிருந்த ஆள் போய்ச்சேரு முன் அவராகவே புகைவண்டி எறி வந்து சேர்ந்து விட்டார். ஊருக்கு வந்ததுமே ஒருவர் அவரை வழிமறித்து "ஐயோ! அங்கேயா பேசப்போகிறீர்கள்? ஆளேஇருக்க மாட்டார்களே அங்கு!" என்று அநுதாபப்பட்டாராம். அவருக்கு மு. வ. விடுத்த விடை காரசாரமாயிருந்தது.

"கூட்டத்தின் எண்ணிக்கை பற்றி எனக்குக்கவலையில்லை; நண்பரிடம் வருகிறேன் என்று சொன்னேன்; வந்துவிட்டேன். நீங்களும் இதோ இருக்கும் இரு நண்பர்களும் இருந்தாலேபோதும்; போனவுடன் தொடங்கி விடலாம்; நான் பேசத்தயார்!" என்று கூறினார் தமிழகத் தலைவர் மு. வ.

மு. வரதராசனாரைத் தமிழகத்தின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராகவே நான் மதிக்கிறேன். பிணக்குகள் நிறைந்த அரசியல் வாழ்க்கையில் போர்க் கோலம் பூண்டுநிற்கும் வீரர்கள் மட்டுமின்றி தமிழுக்கும் கலைக்கும் தன்னடக்கத்துடன் தொண்டாற்றும் பெரியோரும் தமிழகத் தலைவர்களேயன்றோ?

வரதராசனார் எழுதியுள்ள பல புத்தகங்களைப் படித்தறிதல் உங்கள் கடன். "கள்ளோ காவியமோ" 'பாவை' போன்ற நாவல்கள் ஒரு புறம்: 'அறமும் அரசியலும்'. 'அறிஞர் பெர்னார்ட்ஷா' போன்ற அறிவுரை நூல்கள் ஒரு புறம்; 'திருக்குறளும் வாழ்க்கை விளக்கமும்' போன்ற ஆராய்ச்சி நூல்கள் ஒரு புறம். இவற்றின் மேன்மையைப்

பாகுபடுத்திக் கூறமுற்பட்டால் இக் கட்டுரை அளவுக்கு மிஞ்சி வளரு மென அஞ்சி விட்டுகிடுறேன்.

அவ்வப்போது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததை என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும்பேறு எனக் கருதுகிறேன். உடலோம்பல், உளப்பண்பு, அறிவுத் துறை இம் மூன்றிலும் அவருடைய அறிவுரை களைப் பொன்னேபோல் போற்றி வருகின்றேன்.

புலவர் குழாத்துள் புரட்சி பொதிந்த கருத்துக்களை எடுத்து வீசித் திகைக்க வைத்தவர் மு. வ. தொழிலாளி, பாட்டாளிகள் துய ரைப்பற்றிப் பேசவும் எழுதவும் பொதுஉடைமைக் கட்சியினருக்குத் தான் தனி உடைமை உண்டு என் றிருந்த தமிழ்நாட்டின் நிலைமை மாறி, பள்ளி ஆசிரியரும் பாட்டாளி யும் ஒரே கொடுமையின் சின்னங் கள்; தாழ்த்தப்பட்டவர்கள் எழுச் சிக்கு ஈனக்குரல், ஓலக்குரலுடன் உயிருள்ள சீவன் சதும்பும், கலைக் குரலும் சேர்த்து ஒலித்தல் அவசி யம் என்பது இவரது வாழ்க்கை யின் குறிக்கோள்.

தமிழாசிரியர் மாநாட்டில் 1947ல் இவர்செய்த பேருரை சரித் திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

"இந்தக் குறையை எண்ணும் போது நாம் தமிழாசிரியர்கள் என்ற அளவில் நின்று எண்ணுகின்றோம். இந்த நிலைகடந்து நோக்கும்போது நாம் தமிழ் மக்கள் என்ற உணர்வு பிறக்கின்றது. அப்போது தமிழ் மக்களின் வாழ்க்கையில் உள்ள இடர்கள் நம் கண் முன்னே வந்து நிற்கின்றன. அவற்றைப் போக்க முயல்வதும் நம் கடமை ஆகும்...

இவ்வாறு அமைதி நிலவ, அறம் வாழ, அன்பு செழிக்க நம் மால் இயன்ற முயற்சி செய்யவேண் டும். பண்டைத் தமிழ் மக்கள் ஆண்மையோடு ஏந்திய வாளும் வில்லும் நம் கையில் இல்லை; அவை இன்று வேண்டுவனவும் அல்ல. அவற்றினும் சிறந்த கருவிகள் நம் மிடம் உள்ளன. தமிழ்ப் பேச்சும் தமிழ் எழுத்துமே நாம் இன்று ஏந்தும் வாளும் வில்லும். அந்தப் பேச்சு எழுத்து என்னும் உயரிய கருவிகள்கொண்டு ஆக்க வேலை செய்வோமாக."

கரிய, உயரமான உருவம்; நண்பர்களைக் காணும்போதே நகை முகம் கொள்ளும் பான்மை; பற்க ளின் வெண்மை பளிச்சென்று தோன்றும்படி அழகுறச் சிரிக்கும் இயல்பு; நண்பர்களை வரவேற்றுப் பேசுவதில் ஒரு தனிக் கவர்ச்சி. இதுதான் "புரொபசர் வரதராசன்" அவருடைய "ஆபீசு உடை": ஒரு சாதாரண ஜிப்பா அல்லது வெள்ளை சர்ட்டு; அதன்மேல் மடிப்புடன் ஒரு தளுவம்: இவ்வளவே!

முதல் முறை கண்டபோதே என் 'உளங்கவர் நண்பன்' ஆகிவிட்டார் மு. வ. கண்டவுடனே "என்ன உங்களுக்கு மூச்சு வாங்குகிறது?" என்று விசாரித்து எனது மூச்சு முட்டு வியாதியை ஊகித்தறிந்து தம் வீட்டில் வெந்நீர் போடச் சொல்லி எனக்குக் கொடுத்துச் சிரமம் தணிந்த பின்பே பேசத் தொடங்கினர். அதன்பின் அந்தி வேளையில் அவரது கிராமத்துக் குளக் கரையில் பட்சிகள் பறப்பதைப்பற்றியும் மாடுகள் வீடு சேருவதுபற்றியும் நாங்கள் நேரில்கண்ட காட்சிகளைப் பற்றியும் பேசிய பின்னர்தான் நாட்டுப் புறங்களின் இனிமை எனக்கு நன்கு விளங்கிற்று.

இவ்வளவுக்கும் அவரிடம் வந்து பேசும் ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போல் நானும் ஒருவன்; அவ்வளவே ஒழிய எனக்கு ஏதோ தனித்த நட்புரிமை இருப்பதாய் நீங்கள் நினைத்தால் தவறு என்னுடையதல்ல. சிலகாலம் பழகினலும் என் வாழ்க்கையில் ஊக்கமளித்ததுபோல் எத்தனை இளைஞர்கள் இன்று அவரிடமிருந்து தமிழார்வம் தழைத்தோங்கக்கண்டு களித்துள்ளார்கள் என்பதைக் கணக்கிடவும் முடியுமோ!

வாழ்க வரதராசனர்!

வாழ்க தமிழார்வம்!!


ஹிந்துஸ்தான் பீடி சக்கரவர்த்தி
TINNEVELLY. S. INDIA.
D.S.COMPANY. MUKKUDAL
SUPERIOR QUALITY TOBACCO
கிளி மார்க் பீடி.
கிளி பீடி
மார்க்
மனோரம்மியமானது
டி. எஸ். கம்பெனி. முக்கூடல்,

கோடூர் ஆர்ச்சட்ஸ் லிமிடெட்,

147, பூந்தமல்லி ரஸ்தா, கீழ்பாக்கம்,

மதராஸ்.

முதல் தரமான கோடூர் சாத்துக்குடி ஆரஞ்சுச் செடி, விதை நாற்றுகளும், மொட்டு ஒட்டு நாற்று செடிகளும், எலுமிச்சை நாற்று செடிகளும், விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன, வெளியூர் ஆர்டர்கட்கு நல்ல முறையில் பேக்கிங் செய்து கோடூர் ரயில்வே ஸ்டேஷன்மூலம்அனுப்பிவைக்கக்கூடும்,

இன்றையத் தேவைகள்.

புது மணம்! புது உணர்வு! புது மலர்ச்சி!

இவற்றிற்கென நம் சுதந்திர நாட்டில் வெள்ளி முளைப்பென

எஸ். ஆர். ஷண்முகம்

பட்டணம் பொடி

அரும்பியுள்ளது.

என்றும் குன்றாத காரமும், மணமும், பரிமளிக்கச் செய்வதே எங்களது நோக்கம்,

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

ஏஜெண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

தயாரிப்போர்:-

S. R. ஷண்முகம் தொழிற்சாலை,

வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

A. 1614. பழனி நெசவாளர்

கோவாப்ரேடிவ் சொசைட்டி லிமிட்டெட்,

ப ழ னி .

பலவித நவீன கைத்தறி சேலைகள்,

வேஷ்டிகள், பீஸ்கள், உறுதியான நெசவு,

கெட்டிச் சாயம், புது ரக பார்டர்,

முந்தாணிக்குசாதாரணமாகவும், பட்டுகலந்தும்,

ஸ்பெஷல் ஆர்டர்கள்படியும்

தயாராகி வருகின்றன.

40, 60, 80, முதலிய உயர்ந்த நம்பர்

நூல்களிலும், பட்டுப் புடவைகளும்,

30×36 புடவைகளும் தயாராகி வருகின்றன.

நெடுநாளாக பல மில் ஸ்டோர்களுக்கும்,

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும்,

பல பிரமுக வியாபாரிகளுக்கும் ஜவுளி

சப்ளை செய்து வருகிறோம்.

தேவைக்குத் தக்கபடி தகுந்த கமிஷனும்

விலை சரசமாகவும் கொடுக்கக்கூடும்.

ஒருமுறை உடனே ஆர்டர் கொடுத்து

திருப்தி யடையக் கோருகிறோம்.

இப்படிக்கு

K. அண்ணமலை,

சீனியர் இன்ஸ்பெக்டர்—ஸ்பெஷல் ஆபீஸர்.

கோடூர் ஆர்ச்சட்ஸ் லிமிடெட்,

147, பூந்தமல்லி ரஸ்தா, கீழ்பாக்கம்,

மதராஸ்.

முதல் தரமான கோடூர் சாத்துக்குடி ஆரஞ்சுச் செடி, விதை நாற்றுகளும், மொட்டு ஒட்டு நாற்று செடிகளும், எலுமிச்சை நாற்று செடிகளும், விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன, வெளியூர் ஆர்டர்கட்கு நல்ல முறையில் பேக்கிங் செய்து கோடூர் ரயில்வே ஸ்டேஷன்மூலம்அனுப்பிவைக்கக்கூடும்,

இன்றையத் தேவைகள்.

புது மணம்! புது உணர்வு! புது மலர்ச்சி!

இவற்றிற்கென நம் சுதந்திர நாட்டில் வெள்ளி முளைப்பென

எஸ். ஆர். ஷண்முகம்

பட்டணம் பொடி

அரும்பியுள்ளது.

என்றும் குன்றாத காரமும், மணமும், பரிமளிக்கச் செய்வதே எங்களது நோக்கம்,

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

ஏஜெண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

தயாரிப்போர்:-

S. R. ஷண்முகம் தொழிற்சாலை,

வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

A. 1614. பழனி நெசவாளர் கோவாப்ரேடிவ் சொசைட்டி லிமிட்டெட், பழனி.

பலவித நவீன கைத்தறி சேலைகள்,
வேஷ்டிகள், பீஸ்கள், உறுதியான நெசவு,
கெட்டிச் சாயம், புது ரக பார்டர்,
முந்தாணிக்குசாதாரணமாகவும், பட்டுகலந்தும்,
ஸ்பெஷல் ஆர்டர்கள்படியும்
தயாராகி வருகின்றன.

40, 60, 80, முதலிய உயர்ந்த நம்பர்
நூல்களிலும், பட்டுப் புடவைகளும்,
30 × 36 புடவைகளும் தயாராகி வருகின்றன.

நெடுநாளாக பல மில் ஸ்டோர்களுக்கும்,
கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும்,
பல பிரமுக வியாபாரிகளுக்கும் ஜவுளி
சப்ளை செய்து வருகிறோம்.

தேவைக்குத் தக்கபடி தகுந்த கமிஷனும்
விலை சரசமாகவும் கொடுக்கக்கூடும்.

ஒருமுறை உடனே ஆர்டர் கொடுத்து
திருப்தி யடையக் கோருகிறோம்.

இப்படிக்கு

K. அண்ணாமலை,

சீனியர் இன்ஸ்பெக்டர்—ஸ்பெஷல் ஆபீஸர்.

WE INVITE ENQUIRIES FOR THE
FOLLOWING KINDS OF ARTICLES

MURPHY RADIOS, 5 Valves and 6 Valves, AC & AC/DC
and Battery Sets.
BICYCLES, RUDGE, WHITWORTH & OTHER MAKES
ROYAL TYPEWRITERS
RONEO STEEL CUPBOARDS AND STEEL FILING CABINETS
RONEO DUPLICATORS HAND & ELECTRIC MODELS
ELLAMS CYCLOSTYLE MACHINES AND ACCESSORIES
ELLAMS CARBONS AND RIBBONS
BHARAT FANS, CEILING TABLE MODELS

Prompt attention will be given to your enquiries

THE MERCANTILE AGENCY,
39, Town Hall Road, MADURA.
SHOW ROOM: 58, Town Hall Road.

PLEASE CONSULT

SWAMY AND COMPANY,

Sanitary Engineers & Contractors,

318, Thambu Chetty St.,

G. T., MADRAS

for all up-to-date Sanitary Fixtures.

Installations and supply of
Sanitary wares.

Terms Easy.

Execution Neat & Artistic.

தமிழ் நாட்டில் வேனிற்காலத்திற்குகந்த

தலை சிறந்த பானம்!

காளி மார்க்

வீரோ, கிரஷ், சோடா, கலர்களே!

காளி எரேடட் வாட்டர் ஒர்க்ஸ்,

தலைமை நிலையம்:- விருதுநகர். :: கிளை:- திருநெல்வேலி சந்திப்பு

THE MADRAS TAMIL SANGAM
64547

தமிழ்த் தென்றல்

(மாதப் பத்திரிகை)

ஆண்டுக் கட்டணம் (ஆண்டு மலருடன்)

உள் நாடு	ரூ.	4—0—0
வெளி நாடு	ரூ	5—0—0

தனி இதழ்

உள் நாடு	ரூ	0—4—0
வெளி நாடு	ரூ	0—5—0

மாதிரிப் பிரதிக்கு ஐந்தணு தபால்தலை அனுப்புக.

விற்பனையாளருக்கு 25% கழிவு

விளம்பர விகிதம் - ஒரு தடவைக்கு

அட்டை பின்புறம்	ரூ	100
,, உட்புறம்	ரூ	75
புத்தகம் உள் ஒரு பக்கம்	ரூ	50
,, அரைப் பக்கம்	ரூ	25

நீடித்த கால விளம்பரங்களுக்குக் கூலி மலிவு!

பிற விபரங்கட்கு எழுதித் தெரிந்து கொள்க.

தமிழ்த் தென்றல் அலுவலகம்,

வன்னிய நாடார் தெரு, விருதுநகர்.

தந்தி: KARCAFE. போன்: 4554.

சென்னையில் தங்குமிடம்

கருணாகரர்ஸ் கபே

KARUNAKARARS CAFE

போர்டிங்கும், லாட்ஜிங்கும் பொருந்திய சிறந்த ரெஸ்டாரெண்ட்.



தென்னிந்திய, வடஇந்திய முறைப்படி தயார்செய்த பக்குவமான உணவும், குளிர்ந்தபானங்களுடன் நேர்த்தியான சிற்றுண்டியும் வழங்கப்பெறும். சுகாதார வசதிகளுடனும், மின்சார விசிறிகளுடனும் அமைந்த காற்றோட்டமான அறைகள், இரண்டு ஸ்பிரிங்-கட்டில்கள், குளிப்பு அறைகள், டிராயிங் ரூம் சேர்ந்தவை.

(ஸ்டான்லி & ரெயினி ஆஸ்பத்திரிகளுக்கிடையில் உள்ளது.)

மிகக் குறைந்த சார்ஜ்.

55, மணிகார் சத்திரம் ரோடு, வண்ணாரப்பேட்டை, சென்னை.
[பஸ் வழி எண் 4, 6-A.]



வாழ்க திராவிட நாடு!

வணக்கம்.

அன்புடையீர்,

எங்கள் கம்பெனியில் சிறந்தமுறையில் தயாராகும் 'புரட்சி வீரன்' உளுந்தம் பருப்பும், 'ஜெயசிங்' துவரம் பருப்பும், 'அம்மையார்' பயத்தம் பருப்பும் வாங்கி உபயோகியுங்கள்.

V. T. பெரியசாமி,

["விம்கோ" கம்பெனி பருப்பு சப்ளையர்.]

வண்ணாரப்பேட்டை, :: மதராஸ் 21.

ஆசிரியரும், வெளியிடுவோரும்: வே. வ இராமசாமி, விருதுநகர்.
அச்சிடுவோர்: ப. குருசாமிக் குருக்கள், சச்சிதானந்தா அச்சகம் விருதுநகர்


இந்தியாவின் தலைசிறந்த பட்டணம் பொடி
உழுது உழைத்து உலகிற்கே உணவளிக்கும் உழவர்கள்
நெற்றிவேர்வை நிலத்தில் விழ பாடுபடும் பாட்டாளிகள்
உடுக்க உடை உதவி உடல் காக்கும் நெசவாளர்கள்
கிட்டியுள்ளவற்றையும் கடைத் தெருவிற்கு கொண்டுவரும்
வர்த்தகர்கள்... கவலையைப் போக்கவல்ல கவிதை இயற்றும்
கவிஞர்கள்... பிரபட்சமின்றி வரைந்து தள்ளும்
பத்திராசிரியர்கள்.. சமயமறிந்து சட்டம் பேசும் சட்டநிபுணர்
நியாயம் நிலைத்து நிற்க நீதி வழங்கும் நீதிபதி
கடல் கடக்க கரை சேர்க்கும் கப்பலோட்டி
பிறப்பிரதேசங்களுக்கு துரிதமாக கொண்டு சேர்க்கும்
விமானிகள்..... நாட்டின்
காக்கும் போர்வீரர்கள்....
மற்றும் எனையோர்களுக்கும் மே
ஊக்கம் தருவதும் உற்சாகமூட்டுவ
REGISTERED TRADE MARK
T.A.S. ரத்தி
பட்டணம் பொ
T.A.S ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பே